REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 செப்டெம்பர் 7 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 212 | Thursday 07, September, 2023 | 16பக்கங்கள் | 50/-




## மள்வானை தே. பாடசாலை நூற்றாண்டு விழா



மள்வானை தேசிய பாடசாலை நூற்றாண்டு விழா நேற்று பாடசாலை மைதானத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. நூற்றாண்டு நினைவு முத்திரையின் முதல் பிரதி தபால் மாஅதிபர் ருவன் சத் குமாரவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படுவதையும் கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்தகுமார், ஓய்வு பெற்ற மேல்முறையீட்டு நீதியரசர் எம்.எம்.ஏ. கபூர், பாடசாலை அதிபர் எஸ். எஸ். எம். நயீம் ஆகியோர் அருகில் இருப்பதையும் காணலாம்.

## உண்ணாட்டரசிறை திருத்த சட்டத்தினால் ஊழியர் சேமலாப நிதிக்கு பாதிப்பில்லை

### பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உண்ணாட்டரசிறை திருத்த சட்டமூலத்தினால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதனைக் கருத்திற் கொண்டு உண்ணாட்டரசிறை திருத்த சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு பாராளுமன்றத்தில் அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறும் ஜனாதிபதி தெரிவித்தார். உண்ணாட்டரசிறை சட்டமூலம் மிகவும் முக்கியமானது. அதனால் இதுதொடர்பாக எதிர்வரும் சனிக்கிழமை விவாதம் நடத்தி ஞாயிற்றுக்கிழமை சட்டமூலத்தை அனுமதித்து தருமாறு சபாநாயகரை கேட்டுக்கொள்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று உண்ணாட்டரசிறை சட்டமூலத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வது தொடர்பில் எதிர்க்கட்சியினர் தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

உண்ணாட்டரசிறை திருத்தச் சட்டமூலம் தொடர்பான அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் நீதிமன்றம் ஆராய்ந்து தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது. எனினும், ஏனைய தரப்பினர்களால் அதுதொடர்பான விடயங்கள் முன்வைக்கப்படவில்லை. அதனால் தற்போது அதனை அனுமதித்துக் கொள்வதற்கான பொறுப்பு பாராளுமன்றத்திடமே உள்ளது. இந்தசட்ட மூலத்தை



06

## பணத்துக்கு போட்டியை காட்டிக்கொடுக்க வீரர்களுக்கு அழுத்தம் கொடுத்த முன்னாள் கிரிக்கெட் வீரருக்கு மறியல்



### சசித்திரவுக்கே 15 வரை விளக்கமறியல்

**கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் நீதவான் பிரசன்ன அல்விஸ் உத்தரவு**

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

பிரீமியர் லீக் (2020) முதலாவது சுற்றில் கலந்துகொண்ட விளையாட்டு வீரர்கள் இருவரை,விலைகொடுத்து வாங்கி போட்டியைக் காட்டிக் கொடுத்தமைக்காக கைது செய்யப்பட்ட முன்னாள் கிரிக்கெட் வீரர் சசித்திர சேனநாயக்கவை இம்மாதம் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மஜிஸ்திரேட் நீதவான் பிரசன்ன அல்விஸ் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். சூதாட்டக்காரர்களின் தூண்டுதலிலே, இவ்வீரர்கள் இருவரையும் முன்னாள் கிரிக்கெட் வீரர் சசித்திர சேனநாயக்க விலைக்கு வாங்க முற்பட்டிருந்தார். மேற்படி சம்பவம் தொடர்பில், தரிந்து ரட்நாயக்க என்ற விளையாட்டு வீரருக்கு விஸ்கிபோத்தலை வழங்கியதாகக் கூறப்படும் வத்தளைப் பிரதேச நபரை, ஏழு தினங்களுக்குள் விசாரணைப் பிரிவுக்கு அழைத்து வருவதாக கைதான சந்தேக நபர் விசாரணைப் பிரிவிடம் கூறியுள்ளார்.

06

## சிலுமின பத்திரிகைக்கு எதிரான தடையுத்தரவு நீக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கிரிக்கெட் விளையாட்டின் ஒழுக்கம் மற்றும் இலங்கை கிரிக்கெட்டின் நிதி முகாமைத்துவம் தொடர்பில் சிலுமின பத்திரிகையில் பிரசுரமான செய்தி நியாயமான விமர்சனம் என தெரிவித்துள்ள கொழும்பு பிரதம நீதவான் சந்துன் விதான, சிலுமின பத்திரிகைக்கு எதிராக ஒருதரப்பாக விடுக்கப்பட்ட தடையுத்தரவை விலக்கிக் கொள்வதாக நேற்று உத்தரவிட்டுள்ளார். முறைப்பாட்டாளர்களான கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் செயலாளர் சாத்தியமான வழக்கைத் தொடுக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ள மாவட்ட நீதிபதி, சிலுமின பத்திரிகைக்கு எதிராக தடையுத்தரவை விதிப்பதையும் நிராகரித்துள்ளார்.

06

## யாழ். சிறுமி தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுப்பு

### அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் 8 வயது சிறுமியின் கையொன்று சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்பி சார்ள்ஸ் நிர்மலநாதன், அது தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதில்



06



ஐக்கிய தேசியக் கட்சியின் 77ஆவது வருட மாநாடு நேற்று கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கட்சியின் முக்கிய அங்கத்தவர்கள் அங்குரார்ப்பண நிகழ்வில் பங்கேற்றுள்ளதை படத்தில் காணலாம்.

### ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான செனல் – 4 காணொளியை வைத்து

## நாட்டில் மீண்டும் குழப்ப நிலையை உருவாக்க எதிர்க்கட்சிகள் முயற்சி

### இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் சபையில் ஆவேசம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக உண்மைக்கு புறம்பான கருத்துக்களை சபையில் தெரிவித்து மீண்டும் நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் முனையக்கூடாது என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன்

06

## SLFP பொதுச்செயலாளர் பதவியிலிருந்து தயாசிறி நீக்கம்

### மைத்திரி அதிரடி; சரத் ஏக்கநாயக்க நியமனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக மத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரான சரத் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதியும் அந்த கட்சியின் தலைவருமான

06



03

**சனல் 4 ஒளிபரப்பிய காணொளி குறித்து ஜனாதிபதி விஷேட கவனம்**

## உலகம் முழுவதும் புதிய வகை கொவிட்

### தீவிரமாக பரவி வருவதாக தகவல்


புதிய வகை கொவிட் உலகம் முழுவதும் பரவி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இந்த புதிய வகை கொவிட்டை சர்வதேச வல்லுநர்கள் பிரோலா (Pirola) அல்லது பிஏ. 2.86 என அறிமுகப்படுத்தியுள்ளனர்.

06

## மலையகத்தில் யானைகளின் அச்சுறுத்தல் அதிகரிப்பு

### அதிகாரிகள் அசமந்தபோக்கு – சுரேஷ் எம்.பி கவலை

பண்டாரவளை பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் பூனாகலை அம்பட்டிகந்த தோட்டத்தில் யானைகளின் அட்டகாசம் இரவுநேரத்தில் மட்டுமல்லாது பகல் நேரத்திலும் தொடர்ந்த வண்ணம் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.



06

## அபுதாபி லொத்தர் சீட்டிழுப்பில் இலங்கையருக்கு 176 கோடி பரிசு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐக்கிய அரபு அமிர் இராஜ்ஜியத்தில் அபுதாபியில் பிக் ரிக்கெட் லொத்தர் குலுக்கலில் 176 கோடி ரூபா பாரிய பரிசுத்தொகையை இலங்கையர் ஒருவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த துரைலிங்கம் பிரபாகர் என்பவரே இவ்வாறான பாரிய வெற்றிப் பரிசை பெற்றுக்கொண்டுள்ளதாக கல்ப் நியூஸ் ஊடக சேவை தெரிவித்துள்ளது. துரைலிங்கம் 16 வருடங்களுக்கு முன் ஐக்கிய அரபு அமிர் இராஜ்ஜியத்திற்கு அகதியாக சென்றுள்ளதுடன் தற்போது அவர், துபாய் நிறுவனமொன்றில் கண்காணிப்பாளராக பணிபுரிந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

06

### முல்லைத்தீவு நீதவான் பிரதீபன் முன்னிலையில்

## கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு ஆரம்பம்

### பொலிஸார், வைத்திய பிரிவினரும் பிரசன்னம்

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய்மனிதப்புதைகுழி அகழ்வுப் பணி நேற்று (06) காலை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி த. பிரதீபன் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



06

## ஒட்டுசுட்டானில் வாகன விபத்து:

### இரு இளைஞர்கள் ஸ்தலத்தில் பலி!

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். ஒட்டுசுட்டான், மாங்குளத்தில் (05) உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிளொன்று மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக

06

# ஐ.தே.கவின் 77ஆவது நிறைவு விழாவின் முக்கிய நிகழ்வுகள்










## நகர்வலம்



# மான்களை வேட்டையாடி விற்பனை செய்த கும்பல் அதிகாரிகளால் கைது

(கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்)

ஆனமடுவ, பெட்டிகம பௌத்த விகாரைக்குட்பட்ட பகுதியில் மான்களை வேட்டையாடும் சந்தேக நபர்கள் மூவரை வனஜீவ ராசிகள் திணைக்கள அதிகாரிகள் கைது செய்தனர்.

இந்நபர்கள் 35 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட மஹ கும்புக்கடவல, ரத்மல்கஹவெவ மற்றும் தொடுவாய் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

மேலும், ஒருவர் மான்களை வேட்டையாடும் துப்பாக்கியுடன் அவ்விடத்தில் இருந்து தப்பியோடியுள்ளதாகவும் வனஜீவராசி அதிகாரிகள் கூறினர்.

காட்டு யானைகளை விரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சிலர், சந்தேகத்திற்கிடமான வகையில் வாகனமொன்று விகாரைக்குள் சென்று கொண்டிருந்ததை அவதானித்து பின் அங்கு சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டனர்.

இதன்போதே இச்சந்தேக நபர்கள் கைதாகினர். இவர்கள் பயணித்த கெப்வண்டியும், வேட்டையாடிய மான் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

மான்களை வேட்டையாடுவதற்காக பயன்படுத்தப்படும் கெப் வண்டியானது இதற்கென பிரத்தியேகமாக மாற்றியமைக்கப்பட்டிருந்தது.



மஹவெவ, தொடுவாய் மற்றும் வென்னப்புவ போன்ற பகுதிகளில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுக்கு இவ்வாறு வேட்டையாடப்படும் மான்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

# அஹதிய்யா பரீட்சைக்கான விண்ணப்பத் திகதி நீடிப்பு

(மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

அகில இலங்கை அஹதிய்யா மத்திய சம்மேளனம் நடாத்தும் அஹதிய்யா இடை நிலை தேசிய சான்றிதழ் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.பலரது வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் (15 ) திகதி வரை முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக அஹதிய்யா பரீட்சை ஆணையாளர் ஏ.ஆர்.எம்.நிஸாம் தெரிவித்தார்.

இப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதியை நீடிக்குமாறு நாட்டிலுள்ள அஹதிய்யா பாடசாலை நிர்வாகங்கள் கேட்டிருந்தன.இதற்கிணங்கவே இவ்வாறு திகதியை நீடித்ததாக அஹதிய்யாவின் தேசிய தலைவர் எம்.ஆர்.எம். சறூக் ஹாஜி தெரிவித்தார்.அஹதிய்யா பாடசாலைகள் மூலம் இப்பரீட்சைக்கு ஏற்கனவே விண்ணப்பிக்க தவறிய மாணவர்களையும் உள்ளடக்கி, பிரத்தியேக மேலதிக விண்ணப்பத்தை அனுப்பிவைக்கலாம் என்றும் தலைவர் சறூக் ஹாஜி கூறினார்.



# விமானப்படை தளபதிக்கு கௌரவம்



இலங்கை விமானப்படையின் 19ஆவது தளபதியாக பதவியேற்ற எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவை கௌரவிக்கும் வைபவம், அவரது ஆரம்பப் பாடசாலையான கம்பஹா பராக்கிரம மஹா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

பராக்கிரம மகா வித்தியாலயத்தை வந்தடைந்த விமானப்படைத் தளபதியை, பராக்கிரம மஹா வித்தியாலய அதிபர் வரவேற்றார். கல்லூரி சாரணர்களின் மரியாதையை தொடர்ந்து "கெடற்" மாணவர்களின் அணி வகுப்பு நிகழ்வும் நடைபெற்றது. பின்னர் விமானப்படை தளபதி மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார். இதன்போது பாடசாலைக் காலத்தில் அவர் செயற்பட்ட விதம் குறித்தும் கல்விச் செயற்பாடுகள் மற்றும் கல்வி சாராத செயற்பாடுகளில் பங்களிப்பதன் மூலம் பெற்ற அனுபவங்களையும் அவர் விளக்கினார்.

# பெறுபேறுகளில் மாணவர்கள் சாதனை

(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

உயர்தர பரீட்சை பெறுபேறுகளில், கெப்பித்திகொல்லாவ கல்வி வலயத்திற்குட்பட்ட.ஹொ/ வீரச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளதாக வித்தியாலய அதிபர் எம்.ஐ.நதீர் ஹம்ஸா தெரிவித்தார். இப்பாடசாலையிலிருந்து பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் ஆர்.றிஸ்கா பானு, ஏ.பாத்திமா அப்ரா, ஏ.பாத்திமா ஹாச்சிலா ,எம்.பீ.பாத்திமா சும்ரா, எம்.பாத்திமா நஷ்ரின், எம்.யூ.அஸ்கா பானு , எச்.எம்.ஹப்னி ஆகிய ஏழு மாணவர்களும் மூன்று பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

வை.சியானா உம்மா, ஏ.ஏ. மன்ஸிலா ஆகியோர் 2 ஏ மற்றும் பீ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

ஆர்.பாத்திமா அஸ்கினா, எம்.ஏ. பாத்திமா றிம்லா ஆகியோர் ஏ ,பீ , சீ சித்தியைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

# தமிழ்ச் சங்கத்தில் இலக்கிய களம்

கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக்களம் 392 கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் கல்விக்குழுச் செயலாளர் திரு.த.இராஜரட்னம் தலைமையில் நாளை (08) வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ள இலக்கியக்களம் நிகழ்ச்சியில் “தமிழின் முதலாவது வரலாற்று நாவல் ‘மோகனாங்கி’ என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தப்படும். தகவல் தொழினுட்பவியலாளர் திரு.மு.மயூரன் வாசிப்பின் அனுபவங்கள் பற்றி உரை நிகழ்த்தவுள்ளார்.



சிலாபம் கல்வி வலயத்திற்குட்பட்ட நாத்தாண்டிய சாஹிரா கல்லூரியில் முஹர்ரம் தினத்தை முன்னிட்டு பல நிகழ்வுகள் நடைபெற்றன.மாணவர் தலைவர்களுக்கான பதக்கம் அணிவிப்பு, பரிசளிப்பு நிகழ்வுகள் கல்லூரி அதிபர் அஸ்மி ஹுசைன் தலைமையில் நடை பெற்றது.

# செனல் 4 ஒளிபரப்பிய காணொளி குறித்து ஜனாதிபதி விஷேட கவனம்

**மர்லின் மரிக்கார்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் செனல் 4 அலைவரிசையில் ஒளிபரப்பிய காணொளி குறித்து ஜனாதிபதி விஷேட கவனம் செலுத்தியுள்ளதோடு அமைச்சரவை அங்கத்தவர்கள் மத்தியிலும் கலந்துரையாடப்பட்டுள்ளன என்று ஜனாதிபதியின் தொழிற்சங்க உறவுகள் பணிப்பளார் நாயகம் சமன் ரத்னபிரிய நேற்று தெரிவித்தார்.

சிவில் சமூக மற்றும் வர்த்தக தொழிற்சங்க கூட்டணி ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாட்டுக்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.




அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், செனல் 4 போன்ற சர்வதேச அலைவரிசைகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மார்ச் மற்றும் செப்டம்பர் அமர்வுகளை இலக்காகக் கொண்டு சிலசில விடயங்களை ஒளிபரப்புவது தொடராக இடம்பெற்று வருகிறது. அவற்றின் உண்மை விடயங்களை நாம் தவறாக நோக்கவில்லை. இந்நாட்டில் யுத்தம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற மிக மோசமான சம்பங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன. பெருந்தொகையானோர் கொல்லப்பட்டுள்ளனர். இரத்தம் சிந்தப்பட்டுள்ளன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் 253க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்துமுள்ளனர். இத்தாக்குதல் அரசியல் நலன்களை அடைந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டதாக உள்நாட்டு மக்கள் மத்தியில் மாத்திரமல்லாமல் சர்வதேச சமூகத்திலும் சந்தேகம் காணப்படுகிறது. இது தொடர்பிலான விடயங்களை தெளிவுபடுத்திக் கொள்வது அரசாங்கம் என்ற வகையில் பொறுப்புள்ளது. அந்த வகையில் நேற்று முன்தினம் செனல் 4 வெளியிட்ட காணொளியில் பிள்ளையானுடன் செயற்பட்ட அரசியல் செயற்பாட்டாளர் அசாத் மௌலானா தகவல்களை வழங்கியுள்ளார்.

இக்காணொளி குறித்து சரியான விசாரணை நடாத்தும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. இது சர்வதேச மட்டத்தில் இருந்து வந்துள்ளதால் அரசாங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மட்ட விசாரணை நடாத்தி அனைத்து விடயங்கள் குறித்தும் முழுமையான விசாரணை நடாத்தி பகிரங்கப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது, இது தொடர்பில் தற்போது

06

# இலங்கைக்கு எதிரான தகவல்களை வெளியிடுவது இது முதல் தடவையல்ல

## சபையில் சரத் வீரசேகர எம்.பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



செனல் 04 இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள தகவல்கள் பொய்யானவை எனவும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர எம். பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேபோன்று செனல் 4 இது போன்ற தகவல்களை வெளியிடுவது இது முதல் தடவையல்ல என்றும் அவர் சபையில் குறிப்பிட்டார்.

அத்துடன் தென்னிலங்கையில் சிங்கள பௌத்த அரச தலைவர் ஒருவரை உருவாக்குவதற்காக 09 முஸ்லிம் அடிப்படைவாதிகள் தற்கொலை குண்டுதாரிகளாக மாறினார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

செனல் 04 இலங்கை தொடர்பில் 2011,2012 மற்றும் 2013 ஆகிய காலப்பகுதிகளில் வெளியிட்ட பல காணொளிகள் பொய்யானவை என்பதை நான் ஜெனிவாவில் ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளேன்.

தற்போது வெளியிட்டுள்ள காணொளியை அவர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வெளியிட தீர்மானித்திருந்தார்கள். அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே அந்த தீர்மானம் பிற்போடப்பட்டது.

ஜெனிவா கூட்டத்தொடர் எதிர்வரும் மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில்

06

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில்

# சர்வதேச விசாரணை கோரும் எதிர்கட்சித் தலைவர் முள்ளிவாய்க்கால் தொடர்பில் நிலைப்பாடு என்ன?

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணையை கோரும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 2009இல் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களுக்காக சர்வதேச விசாரணையை கோருவாரா? அது தொடர்பில் அவரின் நிலைப்பாடு என்ன? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பி சார்ள்ஸ் நிர்மலநாதன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், 2018 ஒக்டோபர் 26ஆம் திகதி நாட்டின் பிரதமர் பதவியை ராஜபக்ஷ தரப்பினர்

06

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்

# சூத்திரதாரிகளை இனம் காண்பதற்கு சர்வதேச விசாரணைகள் அவசியம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் இன்னும் சிறையில் அடைக்கப்பட்டுள்ள

அப்பாவிகளை விடுதலை செய்து, உண்மையான சூத்திரதாரிகளை கண்டுபிடிப்பதற்காக சர்வதேச விசாரணை ஒன்றுக்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டும் என முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாட் பதியுதீன் சபையில் தெரிவித்தார்.

ஆட்சிக் கதிரையில் ஏறவேண்டும் என்பதற்காகவே சில தரப்பினரால் ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்து வருகின்றன. இந்நிலையில் தற்போது செனல் 4 வெளியிட்டிருக்கும் புதிய காணொளி தொடர்பாக சர்வதேச

06

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்:

# சந்தேகங்கள் நிவர்த்திக்கப்பட சர்வதேச விசாரணை அவசியம்

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டு தாக்குதல் தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுகின்ற நிலையில் அது தொடர்பில் வெளிப்படைத் தன்மை யுடனானசர்வதேச விசாரணை அவசியம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தாக்குதலின் பிரதான சூத்திரதாரி இங்கு உள்ளாரா? அவர் யார் என்பது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக வெளிப்படைத் தன்மையுடன் பக்கச் சார்பற்ற, நியாயமான விசாரணையை நடத்துமாறு தொடர்ச்சியாக நாம் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றோம். இந்த மிலேச்சத்தனமான தாக்குதல்களால் பல உயிர்களை இழக்க நேரிட்டது. இந்த தாக்குதலை அனைவரும் கண்டிக்கின்றனர்.

06

# கொழும்பு–அபுதாபி விமான சேவை விரைவில்!




ஏயார் அரேபிய விமான நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு அபுதாபிக்கு இடையிலான நேரடி விமான சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக அபுதாபியின் ஏயார் அரேபியா விமான சேவை அறிவித்துள்ளது.

அபுதாபி சர்வதேச விமான நிலையம் மற்றும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு இடையில் குறைந்த கட்டணத்தில் முன்னெடுக்கப்படும் இந்த விமான சேவை, அடுத்த வருடம் ஜனவரி 3 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. மேற்படி நிறுவனம் அபுதாபி மற்றும் கட்டுநாயக்கவுக்கு இடையிலான வாராந்தம் மூன்று

06

# மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு இதுவரை 11,000 முறைப்பாடுகள்

## விசாரணை செய்ய புதிய வேலைத்திட்டம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு கிடைக்கப்பெற்ற சுமார் 11,000 முறைப்பாடுகளை உடனடியாக விசாரிப்பதற்கான புதிய வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழு ஜூன் மாதம் முதல் நீதியரசர் எல்.டி.பி. தெஹிதெனிய தலைமையில் இயங்கி வருகின்றது. மேலும் அது முறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் பொது மக்களுக்கு நீதி வழங்குவதற்கும் புதிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதன்படி, அதன் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

பல்வேறு நிறுவனங்கள் மற்றும் ஆணைக்குழுக்களுக்கு அனுப்பப்பட வேண்டிய முறைப்பாடுகள் உண்மையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில்

06

# சிறுநீரகம் தேவை

கொலன்னாவ, வெல்லம்பிட்டியில் வசிக்கும் இளம் தாய் ஒருவருக்கு இலங்கையிலுள்ள 30 வயதுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவரிடமிருந்து சிறுநீரகம் நன்கொடையாகதேவைப் படுகிறது. குரூப் B அல்லது குரூப் O உடையவர்கள் பின்வரும் கைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு இல: 0776332406.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.09.05
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5228
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,933,456.00
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 0 3 2 7 2 5

Lucky 7 லக்கி
திகதி 05.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0054
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 1 0 4 5 7 5
L7 இலக்கம் 1 8
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,591,237.68

தன நிதானய
தேதி 2023/09/05
சீட்டிழுப்பு இலக்கம் 1258
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 108,209,998.40
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 10 28 34 41
விஷேசட ஆங்கில எழுத்து B
Double Chance இலக்கம் 27584

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு திகதி 2023-09-05
சீட்டிழுப்பு இலக்கம் 537
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.3,284,954.40
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 09 35 37 50
விசேட இலக்கினம் கும்பம்

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1576
05/09/2023
Double Chance 62919
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.406,707,248.00
ஆங்கில எழுத்து M
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள் 40 41 64 71
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3470
சீட்டிழுப்பு திகதி 2023.09.05
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 61,271,108.00
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 11 46 54 72
விசேட எழுத்து G
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 49247


දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

## பிற்போடப்பட்ட வரி வசதியினையுடைய ஆட்களுக்கான அறிவித்தல்
## மரபுமுறை காலப்பகுதிக்குரித்தான வரவு வவுச்சர்களின் வழங்குகை

பெறுமதி சேர் வரி மீதான விபரத்திரட்டுக்களை சமர்ப்பிப்பதில், 2002.08.01 முதல் 2015.12.31 வரையிலான மரபுமுறை காலப்பகுதி தொடர்பில் ஏற்றுமதி மீதான பிற்போடப்பட்ட வரி வரவு மீது வழங்குவதற்கு பெருமளவிலான வரவு வவுச்சர்கள் காணப்படுகின்ற போதிலும், வரி உத்தியோகத்தர்களினால் அனுப்பிவைக்கப்பக்கப்பட்ட கடிதங்களுக்கு வரிசெலுத்துநர்களிடமிருந்து பதில் கிடைக்காமையினால் அவற்றினை அனுப்பிவைக்க முடியாதுள்ளது.

ஆகவே, ஏற்புடைய மேலே குறிப்பிட்ட காலப்பகுதிக்கு, அத்தகைய வரவு வவுச்சரிற்கு (ஏதேனும் இருப்பின்) கீழ்வரும் வடிவமைப்பில் முகாமைத்துவ பணிப்பாளரின் கையொப்பத்தின் கீழ் 2023 செப்டெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் கோரிக்கையினை மேற்கொள்ள இத்தால் அறிவிக்கப்படுகின்றது. மேலும், குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் பெறப்பட்ட கோரிக்கைகள் புறக்கணிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) : ..............................

கம்பனியின் பெயர் : ..............................

தொடர்புகொள்ளவேண்டிய நபரின் பெயரும் தொலைபேசி இலக்கமும் : ..............................

மின்னஞ்சல் : ..............................

| தொடர் இலக்கம் | வரியிடற்பாலதான காலப்பகுதி | பிற்போடப்பட்ட வரித் தொகை |
|---|---|---|
| | | |
| | | |

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஏழாம் மாடியிலுள்ள நடுத்தர கூட்டிணைவு அலகு 02 இன் ஆணையாளருக்கு மேற்கூறிய கோரிக்கையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு
தொலைபேசி : 0112134754
மின்னஞ்சல் : gunathunga.kpr@ird.gov.lk

இந்த வரவு வவுச்சர்களை இலங்கை சுங்கத்திற்கு சமர்பிக்கத் தவறின் எதிர்கால இறக்குமதிகளில் பாதிப்பை ஏற்படுத்தும்.

இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வலைதளத்தை கிரமமாக பார்க்கவும்

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

IRD 1944
வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக
வலைத்தளம் : www.ird.gov.lk https:www.facebook.com/irdcolsl

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 22ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஸபர் பிறை 21

**குறள் தரும் சிந்தனை**

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை

*ஆணவமின்றிப் பணிவுடன் நடத்தலே, ஆற்றலாளரின் ஆற்றல் என்பதால் அதுவே பகைமையை மாற்றுகின்ற படையாகச் சான்றோர்க்கு அமைவதாகும்.*

# சாதகமான முன்னேற்றப் பாதையில் இலங்கையின் பொருளாதாரம்

இலங்கையானது கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. அதன் விளைவாக மக்கள் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கும் பாதிப்புக்களுக்கும் முகம்கொடுத்தனர். குறிப்பாக வரிசை யுகம் உருவானது. எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு நாட்கணக்கில் காத்திருக்கும் நிலைமை தோற்றம் பெற்றது. வீதி வாகனப் போக்குவரத்து இயல்பு நிலையை அடைந்தது. தினமும் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களது விலைகளும் பெரிதும் அதிகரித்துச் சென்றன. பணவீக்கம் பெரிதும் அதிகரித்ததோடு அந்நிய செலாவணிக் கையிருப்பும் பெருவீழ்ச்சி கண்டது. ரூபாவுக்கு நிகரான டொலரின் அதிகரித்து சென்றது.

இவ்வாறான நிலையில் வங்குரோத்து நிலையை அடைந்த இந்நாடு கடன்களை திருப்பிச் செலுத்த முடியாது என உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இவ்விதமான இக்கட்டான நிலைக்கு நாடு உள்ளான நிலையில் ஆட்சியாளர்கள் பதவி விலகிய போதிலும் நாட்டின் தலைமையை பொறுப்பேற்க எவரும் முன்வராத சூழல் உருவானது.

நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நாட்டை பொறுப்பேற்றார். அது இலங்கையின் பொருளாதாரப் பயணப் பாதையின் திருப்புமுனைக்கான அடித்தளமானது.

அந்த வகையில் பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு உழைக்க அனைத்துத் தரப்பினருக்கும் அவர் அழைப்பும் விடுத்தார். அது தொடர்பிலான பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுத்தார்.

இருந்த போதிலும் அப்பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்தி அற்ப அரசியல் இலாபம் தேடிட பிரதான எதிர்க்கட்சி உள்ளிட்ட ஒரிரு கட்சிகள் முயற்சி செய்தன. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களை அவர் முன்னுரிமை அடிப்படையில் முன்னெடுக்கத் தவறவில்லை. அவ்வேலைத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதிக்குள் பிரதிபலன்களை அளிக்கத் தொடங்கின. வரிசையுகம் கட்டம் கட்டமாகவும் விரைவாகவும் முடிவுக்கு வந்தது. வீதிப்போக்குவரத்து சேவையும் குறுகிய காலப்பகுதிக்குள் வழமைக்கு திரும்பியது.

பணவீக்கம், ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி என்பன தொடராக வீழ்ச்சி அடைந்து வந்தன. இந்நிலையில் உல்லாசப் பயணிகளின் வருகை நாளுக்குநாள் அதிகரிக்கத் தொடங்கியது. கடந்த வருடம் நாட்டுக்கு வருகை தந்த மொத்த உல்லாசப் பயணிகள் எண்ணிக்கையை இவ்வருடம் முதல் ஏழு மாதங்களுக்குள்ளேயே எட்ட முடிந்துள்ளது. இதன் பயனாக இவ்வருடம் உல்லாசப் பயணிகளின் வருகை இரு மடங்காக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதேநேரம் உல்லாசப் பயணத்துறை மூலமான வருமானம் கடந்த ஜுலை மாதம் மாத்திரம் 219 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கப் பெற்றுள்ளது. ஜனாதிபதியின் தலைமையின் கீழ் பொருளாதாரம் சிறந்த முறைமையின் கீழ் முகாமைத்துவம் செய்யப்படுவதன் பயனாக வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்தும் நிலைக்கு நாடு முன்னேற்றமடைந்திருக்கின்றது.

அந்த வகையில் பங்களாதேசத்திடம் பெற்றிருந்த 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனில் முதற் கட்டமாக 50 மில்லியன் அமெரிக்க டொலரும் இரண்டாம் கட்டமாக 100 மில்லியன் அமெரிக்க டொலரும் என்றபடி திருப்பி செலுத்தப்பட்டுள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பு 3.8 பில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரித்துள்ளது.

அதேநேரம் நாட்டில் 17 இலட்சம் பேருக்கு சமுர்த்தி கொடுப்பனவும், 5 இலட்சத்து 17 ஆயிரம் பேருக்கு விஷேட தேவையுடையவர்கள் மற்றும் முதியோர் கொடுப்பனவும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், 24 இலட்சம் பேருக்கு அஸ்வெசும கொடுப்பனவும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

பொருளாதாரத்தை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்துள்ளதன் பயனாகவே நாடு இவ்வாறான முன்னேற்றங்களை அடைந்தபடி சாதகமான முன்னேற்றப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமை அளித்து ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள பிரதிபலன்களே இவையாகும்.

இந்த நிலையில் அற்ப அரசியல் இலாபம் தேடும் வகையில் முன்னெடுக்கப்படும் முயற்சிகள் சாதமான முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் நாட்டை மீண்டும் அதல பாதாளத்திற்குள் தள்ளி விடுவதற்கான நடவடிக்கையாகவே அமையும். அதனால் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னலைப்படுத்தி செயற்பட வேண்டும். அதுவே மக்களின் விருப்பமாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஐ.தே.க ஆட்சிக்காலத்திலேயே நாட்டில் அபிவிருத்திப் பணிகள்

## கட்சியின் 77 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்தினபுரி மாவட்ட ஐ. தே. க அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் வாழ்த்துச் செய்தி

ஐக்கிய தேசியக் கட்சியின் 77ஆவது ஆண்டு விழா நேற்று 6 ஆம் திகதி சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்றது. இது தொடர்பாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட சமகால பொருளாதார நெருக்கடிகளுக்கு தொழிற்சங்க ரீதியாக தீர்வு காண்பதற்கான மூவர் கொண்ட விசேட குழுவின் உறுப்பினரும், இரத்தினபுரி மாவட்ட ஐ. தே. க அமைப்பாளருமான எஸ்.ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஐ. தே. கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலில் நாட்டுக்காக தொடர்ந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றுவோம் எனவும் ஆனந்தகுமார் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையின் பழைமையானதும் நாட்டுக்கு சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்ததும் ஐக்கிய தேசியக் கட்சிதான். இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்கவின் காலம் முதல் இன்றைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் காலம்வரை நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் ஐ.தே.க அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகிறது.





நாட்டில் வாழும் தமிழ், சிங்களம், முஸ்லிம் என அனைத்தின மக்களுக்கும் இனம், மதம் என்ற பாகுபாடின்றி பணியாற்றியுள்ள ஐ.தே.க, முற்போக்கு வாத கருத்துகளையே அனைத்து சந்தர்ப்பங்களிலும் பின்பற்றியுள்ளது. 1977ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தன அறிமுகப்படுத்திய திறந்த பொருளாதாரத்தின் ஊடாகத்தான் எமது நாடு பாரிய அபிவிருத்தியை நோக்கி நகர ஆரம்பித்தது.

அதேபோன்று முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் காலத்தில் நாடு முழுவதும் கைத்தொழில் பேட்டைகள் உருவாக்கப்பட்டதன் விளைவாகத்தான் கொரோனா காலத்திலும் ஆடை ஏற்றுமதியை மேற்கொண்டு அந்நிய வருவாயை எம்மால் ஈட்ட முடிந்துள்ளது. 1994 ஆம் ஆண்டு கட்சியின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற ஒரு தலைவராக கடந்த 28ஆண்டுகளாக கட்சியை வழிநடத்தி வருகிறார்.

இவர் பிரதமராக இருந்த சந்தர்ப்பங்களில்தான் எமது நாடு சர்வதேச நாடுகளுடனான இராஜதந்திர உறவுகளை மிகவும் பலப்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதிலும், மலையக மக்களுக்கான அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐ.தே.க ஆட்சியை கைப்பற்றிய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அர்ப்பணிபுடன் செயற்பட்டுள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்து ஏழு தசாப்தங்களின் பின்னர் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில்தான் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆக்கப்பூர்வமான நகர்வுகள் இடம்பெற்றிருந்தன. அதேபோன்று மலையகமெங்கும் தனிவீடுகளும் கட்டப்பட்டன. 2019ஆம் ஆண்டில் ஐ.தே.க தலைமையிலான அரசாங்கம் மீண்டும் அமையப்பெற்றிருந்தால் தமிழ் பேசும் மக்களுக்கு பரந்துபட்ட அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டிருக்கும். பேரினவாதத்தின் சூழ்ச்சியால் நாம் தோல்விகண்டிருந்தோம். ஆனால், மீண்டும் ஐ.தே.கவினால்தான் நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர்.

77ஆவது ஆண்டில் நாம் காலடி எடுத்து வைக்கிறோம். எமது தலைவர் மற்றும் பிரதித் தலைவரின் நம்பிக்கைக்குரிய ஒரு பாத்திரமாக கட்சியில் நான் செயல்பட்டு வருகிறேன். ஐ.தே.க ஆட்சி மீண்டும் அமைந்ததும் தமிழ் பேசும் மக்களுக்கு அயராது எனது பணிகளை முன்னெடுப்பேன். அதேபோன்று எனது மாவட்டமான இரத்தினபுரியில் வாழும் பெருந்தோட்ட மக்கள் அனைவருக்கும் கட்சி பேதங்கள் கடந்து எனது பணிகள் இடம்பெறும். இதற்காக இரத்தினபுரி மாவட்ட மக்களின் பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன்."

இவ்வாறு ஆனந்தகுமார் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் புலமைப்பரிசில் நிகழ்வு

## தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் சனிக்கிழமை வைபவம்

பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் பிரதேசத்தில் உள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்குபுலமைப்பரிசில் வழங்கும் பத்தாவது வைபவம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பேருவளை மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகாவித்தியாலய (தேசிய பாடசாலை) மண்டபத்தில் நடைபெறும். தினகரன், தினகரன் வார மஞ்சரி பத்திரிகையின் ஊடக அனுசரணையோடு நடைபெறும் இவ்விழாவுக்கு அப்ரார் கல்வி நிலைய தலைவரும் முன்னாள் முஸ்லிம் விவாக பதிவாளருமான நிஸாம் தலைமை வகிப்பார்.

பேருவளை மருதானை, மாளிகாசேனை மற்றும் மஹகொட பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் குறைந்த வருமானம் பெறும் சுமார் 60 மாணவர்கள் புலமைப் பரிசில் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்விழாவில் துருக்கி தூதுவர் R. Demet Sckercioglu பிரதம அதிதியாகவும், பலஸ்தீன தூதுவர் கலாநிதி ஸுகைர் ஹம்தல்லாஹ் சைட் விஷேட அதிதியாகவும் கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் நஸ்லியா முனாஸ் விஷேட பேச்சாளராகவும் கலந்து கொள்ளவுள்ளதாக கல்வி நிலைய செயலாளரும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் பொருளாளருமான கலாநிதி அஸ்வர் அஸாஹிம் (அல் அஸ்ஹரி) தெரிவித்தார்.



பாத்திமா நஸ்ரியா முனாஸ்



ஏ.டப்ள்யு.எம் அஜ்வாத்

மேற்படி கல்வி நிலையத் தலைவராக சுமார் 10 வருட காலமாக பதவி வகித்த முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலின் முன்னாள் நிர்வாகியுமான ஏ.டப்ள்யு. எம் அஜ்வாத் மற்றும் கொழும்பு பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் நஸ்ரியா முனாஸ் ஆகியோர் இவ்விழாவில் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அப்ரார் கல்வி நிலைய ஸ்தாபகரும் முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், உலமாக்கள், புத்திஜீவிகள், அப்ரார் கல்வி நிலைய பொருளாளரும் காதிநீதிபதியுமான எம்.எல்.ஏ.எம் அப்துல் அஹ்லா மற்றும் அதன் உறுப்பினர்கள், மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகாவித்தியாலய அதிபர் எஸ்.ஏ குமார், பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர், மாணவர்கள் என பலரும் இவ்விழாவில் பங்குபற்றுவர்.



துருக்கி தூதுவர்



பலஸ்தீன தூதுவர்

**பீ.எம். முக்தார்...**
(பேருவளை)

# கலைஞர் கருணாநிதிக்கு வழங்கப்பட்ட நினைவுப்பரிசுகள் கண்காட்சி சென்னையில்

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவருக்கு வழங்கப்பட்ட நினைவுப் பரிசுகள் மற்றும் அவரால் நிறுத்தப்பட்ட கை ரிக்ஷா குறித்த சிறப்புக் கண்காட்சி சென்னையில் தொடங்கப்பட்டுள்ளது.

சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகம் வளர்கலைக் கூடத்தில் அரசு அருங்காட்சியகங்கள் துறை சார்பில், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அவருக்கு வழங்கப்பட்ட நினைவுப் பரிசுகள் மற்றும் கருணாநிதி தடை செய்த கை ரிக்ஷா குறித்த சிறப்பு கண்காட்சி நடத்தப்படுகிறது. இதனை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்து பார்வையிட்டார்.

கருணாநிதியின் நூற்றாண்டை அருங்காட்சியகத்துறை கொண்டாடி வருகிறது. அதன் ஒரு பகுதியாக கருணாநிதிக்கு அவர் முதல்வராக பதவி வகித்த கால கட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் வழங்கப்பட்ட நினைவுப் பரிசுகள் தொகுக்கப்பட்டு அருங்காட்சியக வளர்கலைக் கூடத்தில் கண்காட்சியாக பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.





பருமனான ஒரு மனிதனை ஒடிசலான தேகமுடைய மற்றொரு மனிதன் கை ரிக்ஷாவில் ஏற்றி இழுத்துச் செல்லும் அவலத்தினை கண்ட கருணாநிதி அதனை ஒழித்திட சட்டம் நிறைவேற்றினார். அவ்வாறு ஒழிக்கப்பட்ட ஒரு கை ரிக்ஷா இன்று அந்த பழைய வரலாற்றினையும் கருணாநிதியின் மனித நேயத்தினையும் நினைவுப்படுத்தும் விதமாக இங்கு பொதுமக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் கருணாநிதி நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் வரைந்த ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் அமைச்சர் சாமிநாதன் செய்தியாளர்களிடம் கூறுகையில் "அரசு அருங்காட்சியகத் துறை சார்பில் கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறப்புக் கண்காட்சி எழும்பூர் அருங்காட்சியகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களிடையே ஓவியப்போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கருணாநிதி அவர்களின் அரசியல் வாழ்க்கைப் பயணம், திரையுலக வாழ்க்கை, பத்திரிகையாளர் வாழ்க்கை என பன்முகத் தன்மை கொண்ட வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் வகையில் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் ஸ்டாலின் ஆணைக்கிணங்க அரசின் சார்பில் ஒவ்வொரு துறையின் சார்பிலும் நூற்றாண்டு விழா அனுசரிக்கப்படுகிறது. இக்கண்காட்சி அரசு அருங்காட்சியகத் துறை சார்பில் இளைஞர் சமுதாயம் முத்தமிழறிஞர் கருணாநிதி அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்காகவும், தமிழ் இனத்திற்காகவும் என்னென்ன திட்டங்களை முதலமைச்சராக இருந்தபோது கொண்டு வந்தார் என்பதை அறிந்துகொள்ளும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது" எனக் குறிப்பிட்டார்.

"இங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ள கைரிக்ஷா இந்திய தேசத்தில் இன்னும் சில மாநிலங்களில் உள்ளது. மனிதனே மனிதனை அமர வைத்து கைகளால் இழித்து செல்லும் கை ரிக்ஷாவை ஒழிக்க வேண்டும் என முதலமைச்சராக இருந்த கருணாநிதி திட்டம் கொண்டு வந்த பிறகுதான் ஓட்டோ ரிக்ஷாக்கள் நடைமுறைக்கு வந்தன. இக்கண்காட்சியில் இதனை அரிய காட்சியாக அமைத்து இளைஞர் சமுதாயத்தினர் அறிந்து கொள்ளும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது" என்று அவர் கூறினார்.


# தென்கிழக்கு பல்கலைக்கழக முதலாவது ஆங்கில பேராசிரியராக மருதமுனை ஏ.எம்.எம். நவாஸ்

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதல் ஆங்கிலப் பேராசிரியராக மருதமுனையைச் சேர்ந்த கலாநிதி ஏ.எம்.எம். நவாஸ் புதவி உயர்வு பெற்றுள்ளார். பேராசிரியர் ரைஹானா ரஹீமைத் முதலாவது பேராசிரியராகத் தெரிவானதைத் தொடர்ந்து இலங்கை முஸ்லிம்களில் இரண்டாவது ஆங்கிலப் பேராசிரியராக ஏ.எம்.எம். நவாஸ் தெரிவாகியுள்ளார்.

தென்கிழக்குப் பல்கலைக்கலகத்தில் மிக நீண்ட காலமாக ஆங்கில மொழிப்பிரிவின் தலைவராகக் கடமையாற்றிய இவர் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆங்கில மொழிப் பிரிவின் வளர்ச்சிக்கும்,உயர்ச்சிக்கும் இவர் பெரும் பங்காற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக மாணவர்களின் ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்கு இவரது பங்களிப்பு மிக முக்கியமானது.

மருதமுனையைச் சேர்ந்த அப்துல் மஜீது_ சொஹறா பீவி தம்பதியருக்கு 1969.07.28 ஆம் திகதி மகனாக மருதமுனையில் பிறந்தவர் முகம்மது நவாஸ். அவர் தனது ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியிலும் கற்றவர்.



1990 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்று ஆங்கில ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1995 டிசம்பரில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞான இளமாணிப் பட்டத்தைப் பெற்றார். அதனைத் தொடர்ந்து, 1996 இல் விவசாய பீடத்தில் தற்காலிக உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். மேலும் 1997 ஏப்ரல் மாதம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நிரந்தர ஆங்கில பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டார். 1997 மே மாதம், அதே பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். தற்போது அவர் 26 ஆண்டுகளுக்கும் மேலான பல்கலைக்கழக கற்பித்தல் அனுபவத்தையும், 7 வருட பாடசாலைக் கற்பித்தல் அனுபவத்தையும் கொண்டுள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் சிறந்த சித்தியுடன் ஆங்கில மொழி மற்றும் இலக்கியம் கற்பித்தலில் பட்டப்பின் டிப்ளோமாவைப் பெற்ற இவர், களனிப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியியலில் முதுமாணி பட்டத்தையும் பெற்றார். மேலும் 1996 ஆம் ஆண்டு இலங்கையின் திறந்த பல்கலைக்கழகத்தில் மற்றுமொரு முதுமாணி கற்கை நெறியையும் தொடங்கினார்.

2007 ஆம் ஆண்டில், உலக வங்கியின் புலமைப் பரிசில் உதவித்தொகையைப் பெற்ற இவர், ஐக்கிய இராச்சியத்தின் நாட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தை முடித்த இவர், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் இங்கிலாந்து பல்கலைக்கழகம் ஒன்றில் கலாநிதி பட்டம் பெற்ற ஒரேயொரு விரிவுரையாளர் ஆவார்.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
*(மருதமுனை தினகரன் நிருபர்)*





# அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை தலைவருக்கு கண்டியில் கௌரவிப்பும் முப்பெரும் விழாவும்

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் நூற்றாண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு கண்டி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபை மற்றும் அதன் அபிவிருத்தி சங்கம் ஆகியன இணைந்து நடத்திய முப்பெரும் விழாவும் மற்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் எம். ஐ. எம். ரிஸ்வி முப்தி அவர்களின் சேவை நலன் பாராட்டு நிகழ்வும் கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (03) காலை 9.30 மணிக்கு கண்டி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் எச். உமர்தீன் மௌலவி தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.




இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் எம். ஐ. எம். ரிஸ்வி முப்தி கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம். எச். ஏ. ஹலீமும் கலந்து கொண்டனர்.

கண்டி மாவட்ட அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், கண்டி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் செயலாளர் அஷ்ஷெய்க் ஏ. எல். அப்துல் கப்பார் (தீனி), ஜம்இய்யதுல் உலமா சபையின் உயர் பீட உறுப்பினர்கள், பெரு எண்ணிக்கையிலான உலமாக்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் விசேட அம்சமாக 65 வயதுக்கு மேற்பட்ட உலமாக்களைக் கௌரவித்தல், 45 வயதின் கீழ் இறையடியெய்திய உலமாக்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குதல் மற்றும் அல்லாஹ்வின் பாதையில் சமூகப் பங்காற்றி இறையடியெய்திய உலமாக்கள் மற்றும் சமூகவியலாளர்களை நினைவு கூர்ந்து விசேட துஆப் பிரார்த்தனை போன்ற பல நிகழ்வுகளும் இங்கு இடம்பெற்றன.

இந்நிகழ்வில் தினகரன் பத்திரிகையின் சிறப்பு மலர், கண்டி மாவட்ட ஜம்இய்யாவின் சிறப்பு மலர், நூல் வெளியீடுகள், அரபுக் கல்லூரி மாணவர்களின் குழுப் பாடல்கள், பாராட்டு விழா, விசேட துஆப் பிரார்த்தனையுடன் ஜம்இய்யாவின் பிரகடனமும் வாசிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றிய அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவரும் விழாவின் பிரதம அதிதியுமான




**அஷ்ஷெய்க் எம். ஐ. எம்.ரிஸ்வி முப்தி;**

முஸ்லிம்கள் இலங்கையின் இறையாண்மைக்கு கட்டுப்பட்டு நாட்டைக் கட்டியெழுப்ப பங்களிப்புச் செய்தல் வேண்டும். எம்மை விட்டுப் பிரிந்த மூத்த உலமாக்களுடைய அடக்கஸ்தலங்களை அல்லாஹ் பிரகாசிக்கச் செய்து அல்லாஹுத்தஆலா உயர்ந்த இடத்தையும் பதவியையும் வழங்க அருள் புரிய வேண்டும். அவர்கள் அன்று இப்படியான காரியத்தைச் செய்திருக்காவிட்டால் இன்று நாம் நூறாம் வருடத்தில் சந்தோசமான முறையில் இவ்வாறான நிகழ்வைக் கண்டிருக்க மாட்டோம். எப்பொழுதும் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் செய்திருக்கக் கூடிய இந்த மாபெரும் பணிக்காக வேண்டி நாங்கள் எல்லோரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கை நாட்டின் முஸ்லிம்களாகிய நாம் 1400 பூர்வீக வரலாற்றைக் கொண்ட சமூகமாக இருந்து கொண்டிருக்கின்றோம். முன்னாள் வாழ்ந்த உலமாக்கள் எமது மார்க்கத்தை மதித்து அதற்காக அவர்கள் மரியாதை செய்து அதைப் பாதுகாப்பதற்கு எடுத்த முயற்சிகள் அளப்பரியவை. இந்த நாட்டில் அவர்களுடைய கருத்துக்களையும் அவர்களுடைய பணிகளையும் அல்லாஹுத்தஆலா பாதுகாத்துத் தந்துள்ளான். இந்த அருட்கொடையினை நாம் எல்லோரும் எங்களால் முடிந்த வரை கவனத்திற் கொள்ள வேண்டும்.

ஒரு பொறுப்பு வழங்கப்பட்டால் அந்தப் பொறுப்பை சரியான முறையில் உரியவர்களுக்கு வழங்குவது கடமையாகும். ஆதலால் ஜம்இய்யதுல் உலமாவின் மூத்த உலமாக்கள் இதனைச் செய்து வந்துள்ளார்கள். உலகிலுள்ள அத்தனை முஸ்லிம்களும் அத்தனை உலமாக்களும் ஒன்று சேர்ந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த பணியை எங்களால் செய்து முடிக்க இயலாது. நபி (ஸல்) அவர்களுடைய ஒரு நாள் பணியை உலகத்திலுள்ள எல்லோருடைய சக்திகளையும் ஒன்று சேர்த்துசெய்தாலும் செய்து முடிக்க இயலாது. அவருடைய பணி ஆட்சிக்காக அல்ல. சொத்துச் செல்வத்திற்காக அல்ல. மக்கள் சீரும் சிறப்புடன் வாழ வேண்டும் என்பதற்காகவே பாடுபட்டார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்கள் தமக்கு வழங்கப்பட்ட பொறுப்பை சரியாக நிறைவேற்றி விட்டுச் சென்றுள்ளார்கள். இறுதி நாள் வரைக்கும் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வழிகாட்டி விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்களுக்கு நிகர் எவருமில்லை.

நாங்கள் செய்தவைகளுக்கு நன்றி செலுத்த வேண்டும். ஆனால் செய்யாமல் இருப்பவைகளுக்கு பாவ மன்னிப்புத் தேட வேண்டும்.

இன்றைய ஜம்இய்யாவின் நூற்றாண்டு தினத்தில் உலமாக்களை கௌரவப்படுத்தி கண்ணியப்படுத்தும் அதேவேளையில், கஷ்டமான உலமாக்களுக்கு உதவி செய்தல் அதே நேரத்தில் எங்களுடைய பொறுப்பை சரிவர நிறைவேற்றி விட்டோமா என்பதை திரும்பவும் ஒரு விடுத்தம் சரிபார்த்துக் கொள்வது எங்களுடைய கடமையாக இருக்கின்றது. கண்டி மாவட்டத்திலுள்ள ஜம்இய்யதுல் உலமா அங்கத்தவர்கள் மற்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையிலுள்ள 9000 உலமாக்களும் இரவு பகலாகப் பாடுபட்டால்தான் அந்த பொறுப்புக்களை சரியாக நிறைவேற்ற முடியும்.

இந்த நாட்டில் வாழக் கூடிய இரண்டு கோடி மக்களில் இருபது இலட்சம் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இவர்களுக்கு எமது இனிய இஸ்லாமிய மார்க்கத்தை தெளிவுபடுத்த வேண்டியது உலமாக்களினதும் முஸ்லிம்களினதும் பொறுப்பு ஆகும்.

ஜம்இய்யதுல் உலமா இரு பிரதான விடயங்களை இரு கண்களாகப் பார்க்கின்றன. ஒன்று வேற்றுமையில் ஒற்றுமையாகும். அது காலத்தின் தேவை சன்மார்க்கக் கடமையாகும். இரண்டாவது சகவாழ்வு.

இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், 225 பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர்கள், இந்நாட்டிலுள்ள அரசியல் தலைவர்களுடன் சக வாழ்வின் அடிப்படையில் அனைத்து தரப்பினர்களுடன் எப்படிப் பயணிக்க வேண்டுமோ என்பது பற்றி ஜம்இய்யதுல் உலமாவினால் தெளிவுபடுத்தி வருகின்றோம். 164 கிளைகளின் கீழுள்ள 9000 உலமாக்களும் இத்தகைய விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. அவர்களும் தங்களுடைய சக்திக்கு ஏற்ப செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது எங்களுக்கு சந்தோசமாக இருக்கின்றது எனலாம்.

இலங்கையில் 3000 பள்ளிவாசல்கள் உள்ளன. அதனை எட்டு வலயங்களாகப் பிரித்து ஒவ்வொரு வலயங்களுக்குக் கீழும் ஒவ்வொரு பள்ளிவாசல்களுக்கும் என ஆறு பேர் கொண்ட உலமாக்களை நியமித்து செயற்பட்டு வருகின்றோம். 2018 இல் இருந்து அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு இந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்த நாட்டில் உள்ள பௌத்த விஹாரைகளுக்கும் சென்று சக வாழ்வினை ஏற்படுத்தும் வகையில் பரஸ்பர சமூக நல்லிணக்க உறவுகளையும் வளர்த்து வருகின்றோம்.

நாங்கள் நாட்டுப் பற்றுடையவர்கள். இந்த நாட்டுக்காக எதையும் செய்யத் துணிந்தவர்கள். இந்த நாட்டுக்காக எங்களுடைய உயிர்களை அர்ப்பணித்தவர்கள். எங்களுடைய முன்னோர்களும் அப்படிப்பட்டவர்கள்தான். இன்றும் அதே நிலையில்தான் இருக்கின்றோம். இந்த நாட்டுக்கு ஏதாவது ஓர் ஆபத்துவருமாயின் முஸ்லிம்களாகிய நாம் ஒரு போதும் சகித்துக் கொண்டு இருக்க மாட்டோம்.

**இந்நிகழ்வில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம். எச். ஏ. ஹலீம் உரையாற்றும் போது;**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கொழும்பில் இடம் பெற்ற நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வமைப்பு முஸ்லிம் சமூகத்திற்கு உன்னதமான பணிகளை ஆற்றி வருகிறது என்று குறிப்பிட்டமை மிகவும் முக்கியமான விடயமாகும் என்று அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா நாட்டிலுள்ள இஸ்லாமியர்களுக்கு சிறந்த மார்க்க வழிகாட்டுதலை வழங்குவதோடு சமுதாயத்திற்கு உன்னதமான பணிகளை செய்து வருகின்றனர் என்று சான்றுபகன்றார்.இது ஒரு முக்கியமான விடயமாகும். இந்த நிகழ்வில் நாட்டிலுள்ள மிக முக்கியமான பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். கடந்த வருடங்களில் இந்த நாட்டில் பல்வேறு விதமான சோதனைகளையும் சவால்களையும் நாங்கள் எதிர்நோக்கி வந்துள்ளோம். இக்கால கட்டத்தில் ஏனைய சமூகத்திற்கு மத்தியில் காணப்பட்ட எங்களைப் பற்றிய தப்பபிப்பிராயங்களையும் சந்தேகங்களையும் இல்லாமற் செய்வதற்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை பெரிய பிரயத்தனங்களுடன் செயற்பட்டது என்பதை உண்மையிலே நாம் எல்லோரும் அறிவோம்.

இந்தக் கண்டி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபை கண்டி மௌலானா என்று அழைக்கப்படும் மௌலவி எச். சலாஹுதீன் அவர்கள் தலைமையில் செயற்பட்டது. அதன் பின்பு வந்த மௌலவி புர்ஹான் மற்றும் தற்போதைய தலைவர் மௌலவி உமர்தீன் அவர்களுடைய தலைமையின் கீழ் சிறப்பாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**கண்டி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவரும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் உப தலைவருமான அஷ்ஷெய்க் எச் உமர்தீன் (ரஹ்மானி) உரையாற்றும் போது;**

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாதான் நூற்றாண்டு விழாவினைச் செய்து விட்டார்கள். ஏன் இப்படியான நிகழ்ச்சி மீளவும் செய்யப்பட வேண்டும் என்றதொரு கேள்வி ஒரு சிலர் மத்தியில் இருந்தாலும் கூட அதைத் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா இந்த நூற்றாண்டு விழாவினை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் செய்வதற்கான காரணம் கடந்த காலங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக இருந்த நெருக்கடியான கால கட்டத்தில் அரச மட்டங்களில் ஜம்இய்யா பற்றிய சந்தேகங்களை நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேதான் நிகழ்வு நடத்தப்பட்டது.

ஜனாதிபதி, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு நடத்தப்பட்டது. அது மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. ஆனாலும் அதிலும் பெரியதொரு குறை காணப்பட்டது. அதில் எல்லா உலமாக்களையும் அழைக்க வில்லை என்று முறைப்பாடு தெரிவித்தனர். மண்டபத்தில் ஆசனம் இல்லாமையினால் 1000 பேருக்கு மேல் அனுமதி வழங்க முடியாத நிலை இருந்தது.

அன்று கலந்து கொள்ள முடியாமல் போனவர்களின் ஆவலை நிறைவேற்றும் வகையில் இன்று கண்டியில் நடத்துகின்றோம். அது வெறும் விழாவாக மட்டுமில்லாமல் எம்மை விட்டுப் பிரிந்த மூத்த உலமாக்களுக்கான விசேட துஆப் பிரார்த்தனையும் 65 வயதினைத் தாண்டிய உலமாக்களின் சேவையைப் பாராட்டி கௌரவித்தல் மற்றும் எம்மை விட்டு இளம் வயதிலேயே பிரிந்த 45 வயதுக்கு உட்பட்ட உலமாக்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குதல் போன்ற அம்சங்கள் இதில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# AyurEx Colombo 2023, சுதேச மருத்துவம் தொடர்பான சர்வதேச மாநாடு




சுதேச மருத்துவம் தொடர்பான சமீபத்திய ஆய்வு கண்டுபிடிப்புகள், தயாரிப்பு நிபுணத்துவம் மற்றும் திறன்கள் தொடர்பான மாநாடு AyurEx Colombo 2023 என்னும் தலைப்பில் செப்டம்பர் மாதம் 08, 09 மற்றும் 10ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உலகம் பூராவும் உள்ள சுதேச மருத்துவம் தொடர்பாக அர்ப்பணிப்புடன் செயல்படுவருபவர்கள், நிபுணர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு ஒரு தனித்துவமான தளத்தை உருவாக்குகிறது. சுதேச மருத்துவத்தின் பரந்த திறனை அடையாளம் காண ஒத்துழைக்கவும் மற்றும் ஆராயவும் தேவையான வசதிகளை வழங்கும் AyurEx Colombo 2023, சுதேச மருத்துவ துறை தொடர்பான பரந்த நோக்கத்துடன் கூடிய மாநாடு என்பதோடு இக் கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சி மூலம் புதிய உற்பத்திகள், வளர்ந்து வரும் சந்தைகளுக்கான அணுகல், உயர் வர்த்தகம் மற்றும் வணிக வாய்ப்புகள் ஆகியவற்றில் கவனம் செலுத்த முடியும்.

அத்துடன் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் உள்ள அறிஞர்களுக்கு அவர்களின் ஆய்வு கட்டுரைகளை முன்வைக்க ஒரு திறந்த அழைப்பு விடுக்கப்படுவதோடு இலங்கையில் உள்ள அனைத்து ஆயுர்வேத மற்றும் உள்ளூர் மருத்துவ நிபுணர்கள் மற்றும் தொழில் முனைவோர் தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கான வாய்ப்பையும் பெறுவார்கள். AyurEx Colombo 2023 சுதேச வைத்திய பாரம்பரிய உரிமைகளை மீட்டெடுப்பதை நோக்கமாகவும் கொண்டுள்ளது.

சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடியின் கருத்துக்கு அமைய சுகாதார அமைச்சு, ஆயுர்வேத திணைக்கள தலைமை காரியாலய சமூகநல சங்கம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக சுதேச வைத்திய பீடம் என்பவற்றுடன் இணைந்து அரச நிதியை பயன்படுத்தாமல் இக் கண்காட்சி நடைபெறவுள்ளது. மேலதிக தகவல்களுக்குhttp // www.ayure.lk.

## இலங்கைக்கு எதிரான... (03ஆம் பக்கத் தொடர்)

இலங்கை தொடர்பில் பொய்யான காணொளியை செனல் 04 தற்போது வெளியிட்டுள்ளது.

சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு இது சிறந்த வாய்ப்பாக அமையும்

அதனை கருத்திற் கொண்டு வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் இவ்விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியது

அவசியம்.

அன்ஷிப் அசாத் மௌலானா என்ற நபர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஊடகச் செயலாளராக பதவி வகித்த நிலையில் 700 மில்லியன் ரூபா மோசடி செய்து அதனை தொடர்ந்து இங்கிலாந்துக்குத் தப்பிச் சென்றார். தற்போது குறுகிய சுயநல நோக்கத்துக்காக அவர் செயல்பட்டு வருகிறார்.

பயங்கரவாதி சஹ்ரான் தான் தற்கொலை குண்டுத்தாக்குலை மேற்கொள்வதற்கு முன்னர் 28 நிமிட காணொளி ஒன்றை பதிவு செய்துள்ளார்.அதில் 'தன்னையும், தாய்,பிள்ளைகள் உட்பட ஏனைய தரப்பினரை அல்லாவுக்கு அர்ப்பணிப்பதாக 'குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே தென்னிலங்கையில் சிங்கள அரச தலைவரை உருவாக்குவதற்காக ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு 03 விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன.

ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை முறையாக அமுல்படுத்த வேண்டும் என நான் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றேன்.

## செனல் 4 ஒளிபரப்பிய... (03ஆம் பக்கத் தொடர்)

அமைச்சரவை அங்கத்தவர்கள் மத்தியில் கலந்துரையாடப்பட்டுள்ளன. இது குறித்து ஜனாதிபதி விஷேட கவனம் செலுத்தியுள்ளார்.

இவ்வாறான சர்வதேச விசாரணையின் ஊடாக பகிரங்கப்படுத்தப்படும் விடயங்கள் ஊடாக இச்சம்பவத்தினால் பாதிக்கபட்டுள்ளவர்களுக்கு நியாயம் கிடைக்கப் பெறும் என நம்புகிறேன் என்றும் குறிப்பிட்டார்.

## சர்வதேச விசாரணை கோரும்... (03ஆம் பக்கத் தொடர்)

கைப்பற்ற முயன்ற முயற்சி தோல்வியடைந்தது.

பின்னர் 2019 ஏப்ரல் 21இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்றதுடன், அதனைத் தொடர்ந்து கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானார்.

2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தாக்குதல் ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து நடத்தப்பட்டதாக கூறப்படுகின்றது. ஆனால் அதற்கான சாட்சிகள் இல்லாவிட்டாலும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு அவ்வாறு கூறப்படுகின்றது.

ஆனால் செனல் 4 தொலைக்காட்சி அதில் யார் யார் சம்பந்தப்பட்டுள்ளளனர் என்ற விபரங்களை வெளியிட்டுள்ளது. அதனால் அது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

நடைபெறும் பல விடயங்கள் ஆட்சியாளர்களை தொடர்புபடுத்தியே நடக்கின்றன. குறிப்பாக ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் ரவிராஜ் ஆகியோர் கொல்லப்பட்டமை அரச இராணுவ புலனாய்வு ஒட்டுக்குழுக்களின் செயற்பாட்டின்படியே நடந்துள்ளது.

அதனை யார் செய்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் சாட்சிகள் சான்றுகளாக நிரூபிக்கப்படவில்லை.

சர்வதேச விசாரணையொன்றை எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தியுள்ளார். இதனை நாம் வரவேற்கின்றோம். ஆனால் 2009 ஆம் ஆண்டு எம் மக்கள் கொல்லப்பட்டனர். அதனையும் செனல் 4 வெளியிட்டிருந்தது.அந்த விடயத்தை பல முறை இந்த சபையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சந்தேகங்கள் நிவர்த்திக்கப்பட... (03ஆம் பக்கத் தொடர்)

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் நியாயமான விசாரணை நடக்கவில்லை என்பதனை பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்த தாக்குதலில் பலியானோருக்கு நியாயம் கிடைக்க வேண்டும். இந்த தாக்குதல் தொடர்பாக நடத்தப்பட்ட அனைத்து விசாரணைகளும் மூடி மறைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமையில் தாக்குதலின் உண்மைகளை கண்டறிய சர்வதேசம் சில செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. இதனால் உடனடியாக வெளிப்படையான விசாரணையை ஆரம்பிக்க வேண்டும்.இது தொடர்பில் தெரிவுக் குழுவை அமைப்பதாக கூறுகின்றனர். அது திருடனின் தாயிடம் மை வெளிச்சம் பார்ப்பதை போன்றே இருக்கும். தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை அந்தக் குழுவின் தலைவராக நியமித்து விடுவார்களோ தெரியவில்லை.

## கொழும்பு அபுதாபி... (03ஆம் பக்கத் தொடர்)

விமான சேவைகளை முன்னெடுக்கவுள்ளது. அதன்படி, புதன், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அபுதாபியிலிருந்து கட்டுநாயக்கவுக்கும், திங்கள், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் கட்டுநாயக்கவிலிருந்து அபுதாபிக்கும் விமான சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## சூத்திரதாரிகளை... (03ஆம் பக்கத் தொடர்)


விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதியை கேட்டுக்கொள்வதாக அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஆயுர்வேத திருத்தச் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## மனித உரிமைகள் ஆணைக்குழு... (03ஆம் பக்கத் தொடர்)

சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பொதுச் சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, தொழிலாளர் திணைக்களம் மற்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபை ஆகியவற்றுக்கு உரிய முறைப்பாடுகளை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீராதாகிருஷ்ணா ஆலய ஜன்மாஷ்டமி விழாவில் இன்று இந்திய கலைஞர்களின் கதக் நடனம்



கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீராதா கிருஷ்ணா ஆலயத்தில் இன்று 7ஆம் திகதி வியாழன் கொண்டாடப்படும் ஜன்மாஷ்டமி விழாவில் உலகப் புகழ் நடனக் கலைஞர்களான இந்தியாவைச் சேர்ந்த ஹரி, சேத்தனா ஆகியோர் வழங்கும் கதக் நடனம் இடம்பெறும்.

புதுச்செட்டித்தெரு ஸ்ரீராம்; மண்டபத்தில் மாலை 7.00 மணிக்கு விழாவின் விஷேட அம்சமாக இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இன்று காலை மங்கள ஆரத்தியுடன் ஆரம்பமாகும் விழாவில் நகர சங்கீர்த்தனமும், குழந்தை கிருஷ்ணர் ஊர்வலமும் நடைபெற்று குழந்தை கிருஷ்ணருக்கு பாலாபிஷேகமும், தொட்டிலிலிட்டு தாலாட்டும் வைபவமும் இடம்பெறும்.

இரவு 11.00 முதல் நள்ளிரவு 12.00 மணிவரை ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ணருக்கு மஹா அபிஷேகமும், விஷேட ஆராதனைகளும் இடம் பெற்று அருட்பிரசாதம் வழங்கப்படும்.

நாளை வெள்ளி நண்பகல் 12.00 மணிக்கு சர்வதேச கிருஷ்ண பக்தி கழகத்தை ஸ்தாபித்தவரும், ஆன்மிகக் குருவுமான அருட்திரு பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்களின் வியாச பூஜை கொண்டாடப்படவிருக்கிறது.

## சிலுமின...

சிலுமின பத்திரிகையின் ஊடகவியலாளரான பௌஸ் மொகமட் மற்றும் அசோசியேட்டட் நியூஸ் பேர்ப்பர்ஸ் லிமிட்டெட்டுக்கும் எதிராக கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதி விடுக்கப்பட்ட தடையுத்தரவை ரத்துச் செய்துள்ள நீதிபதி, இடைக்கால தடையுத்தரவை விதிப்பதையும் நிராகரித்துள்ளார். இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் உபதலைவர் சிலுமின பத்திரிகையில் கிரிக்கெட் தொடர்பில் பிரசுரமான கட்டுரைக்கு எதிராக மேற்படி வழக்கை தாக்கல் செய்திருந்தனர். மேற்படி தடை உத்தரவுக்கு எதிராக விடயங்களை தாக்கல் செய்திருந்த லேக் ஹவுஸ் நிறுவனம், வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் நிராகரிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த ஜுலை 25 ஆம் திகதி வேண்டுகோள் விடுத்திருந்தது. முறைப்பாட்டாளரான கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் மோசடியான வகையில் உண்மையான தகவல்களை மறைத்து இடைக்கால தடையுத்தரவைப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் திறந்த மனதுடன் அன்றி நீதிமன்றத்திற்கு அதனைக் கொண்டு சென்றதாகவும் லேக்ஹவுஸ் நிறுவனம் தமது ஆட்சேபனையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## SLFP பொதுச்செயலாளர் ...

மைத்திரிபால சிறிசேனவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை அந்த கட்சியின் பொதுச் செயலாளராக பதவி வகித்த பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதைய டுத்து புதிய பொதுச் செயலாளராக சரத் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். அது தொடர்பில் நேற்று தயாசிறி ஜயசேகரவிடம் வினவியபோது அவரும் அதனை உறுதி செய்தார். அண்மைக் காலமாக ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியில் சிலருக்கும் தயாசிறி ஜயசேகரவுக்குமிடையில் முரண்பாடுகள் நிலவிய தையடுத்து கட்சியின் தலைவரின் தீர்மானத்தின் படி அவர் பதவி நீக்கப்பட்டுள்ளார் என்றும் அந்த கட்சியின் முக்கியஸ்தர் தெரிவித்தார்.

## உலகம்...

ஆரம்ப காலத்தில் பரவிய கொவிட் வைரஸின் கொடிய ஓமிக்ரோன் மாறுபாட்டை விட இந்த மாறுபாடு மிகவும் பிறழ்ந்த மாறுபாடு என்றும் பரிந்துரைக்கப்படுகிறது. இதன் அறிகுறி தொண்டை புண், மூக்கு ஒழுகுதல் அல்லது அடைப்பு, இருமல் மற்றும் தலைவலி ஆகியவை இதன் அறிகுறிகளாகும். பைரோலாவின் புதிய திரிபு மீண்டும் உலகம் முழுவதும் தொற்று நோய்களின் எழுச்சியை ஏற்படுத்தும் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்து வருகின்றனர். அமெரிக்கா, பிரித்தானியா, சீனா, இஸ்ரேல், கனடா, டென்மார்க், தென்னாபிரிக்கா, சுவீடன், நோர்வே, சுவிட்சர்லாந்து மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் இது இனங்காணப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஒட்டுசுட்டானில்...

பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் முள்ளியவளை – பொன்னகர் பகுதியை சேர்ந்த 23 மற்றும் 24 வயதான இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளவர்களாவர்.

விபத்துடன் தொடர்புடைய உழவு இயந்திரத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## கொக்குத்தொடுவாய்....

தொல்பொருள்துறை சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட தரப்பினரின் முன்னிலையில் இவ் அகழ்வு பணிகள் இடம்பெறுகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலே கடந்த (2023.06.29) அன்று தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினரால் நீர் குழாய்கள் பொருத்துவதற்காக நிலத்தை தோண்டிய போது அங்கு மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப் பட்டிருந்தன. இதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் பின்னர் நேற்று (06) அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அபுதாபி லொத்தர்....

அவர் கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் லொத்தர் ரிக்கெட் ஒன்றை இணையத்தளம் மூலம் பெற்றுக் கொண்டுள்ளதுடன் அந்த லொத்தர் சீட்டு குலுக்கலின் போது அவருக்கு இந்த பாரிய பரிசுத்தொகை கிடைத்துள்ளது. துரைலிங்கம் கடந்த ஐந்து வருடங்களில் அவருடைய 10 நண்பர்களுடனான குழுவுடன் பிக் கிரிக்கெட் லொத்தர் ரிக்கெட்டை கொள்வனவு செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மலையகத்தில்....

காட்டு யானைகளால் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது தொடர்பில் ஹல்தமுள்ளை பிரதேச செயலக அபிவிருத்தி கூட்டம் மற்றும் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பல கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட போதிலும் கூட அதிகாரிகளின் அசமந்த போக்கினால் அம்பட்டிகந்த வாழ் மக்கள் பாரியதொரு அசௌகரிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

## உண்ணாட்டரசிறை....

அனுமதித்துக்கொள்ள முன், அது தொடர்பான குழுவுக்கு அல்லது எனது தலைமையிலான ஆலோசனைக் குழுவுக்கு அதனை அனுப்ப வேண்டும். இதை நான் ஆலோசனைக் குழுவிடம் வழங்கியிருக்கவில்லை. அது தொடர்பான தகவல்களை வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்

ஒருவர் கேட்டிருந்தார். அந்த தகவல்களை வழங்குமாறு நான் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினேன்.

அதேபோன்று இந்த விடயங்களை இரகசியமாக வைத்துக்கொள்வதன் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் எனவும் அவர் அறிவித்திருக்கின்றார். ஏனெனில், இந்த விடயங்கள் வெளி தரப்பினருக்கு சென்றால் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படலாம். இது தொடர்பான அனைத்து விடயங்களையும் நாம் அடுத்தவாரமளவில் முடிவுக்கு கொண்டுவர வேண்டியுள்ளது.

வீழ்ச்சியடைந்திருந்த நாட்டையே நான் பொறுப்பேற்றேன். மற்றவர்கள் பிரதமர் பதவி வேண்டாம் என்று பயந்து ஓடியபோது, இந்தப் பணியை நானே பொறுப்பேற்றேன். உண்ணாட்டரசிறை திருத்தச் சட்ட மூலத்தினால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு எந்த பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. ஊழியர் சேமலாப நிதியத்துக்கு நூற்றுக்கு 9வீத நிலையான வட்டியை வழங்க நாம் இணங்கியுள்ளோம். அத்துடன் 9வீத வட்டியை தீர்மானித்தது நானல்ல. அன்று இந்த சபையில் பொதுஜன பெரமுன அரசாங்கமே அந்த தீர்மானத்தை மேற்கொண்டது.

அதனால் என் மீது இந்த குற்றச்சாட்டை தெரிவிக்கவேண்டாம்.

இதுதொடர்பாக அரசாங்க நிதிக் குழுவின் தலைவர், இரண்டு தரப்பினர்களின்தும் கருத்தை கேட்டறிய வேண்டும். நான் அதில் தலையிடுவதில்லை. இது தேவையில்லை என கடந்த தேர்தலின்போது சிறிலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்ததாக தெரிவிக்கப்படுகிறது. பாதணி வழங்குவதாகவே நீங்கள் தெரிவித்தீர்கள். ஆனால் நாட்டை மீட்பதற்கு 7மில்லியன் டொலர் தேவை என நான் தேர்தலின்போது தெரிவித்தேன். அப்போது இவரை தோற்கடித்து எங்களுக்கு அதிகாரத்தை வழங்குங்கள் என்றே நீங்கள் தெரிவித்தீர்கள். நான் சரி என்பதால் அரசாங்கத்தை கொண்டுசெல்ல தற்போது இவர்கள் எனக்கு ஆதரவு வழங்குகின்றனர்.

## வீரர்களுக்கு...

இந்நிலையில், இவருக்குப் பிணை வழங்கினால் சாட்சியாளருக்கு அழுத்தம் வழங்கும் நிலையேற்படுமென தெரிவிக்கப்பட்டது. இதையடுத்தே, கைதாகியுள்ள சசித்திர சேனநாயக்கவை விளக்கமறியலில் வைக்க உத்தர விடப்பட்டது.

விளையாட்டுக்களில் தவறுகளை தடுப்பதற்கான விசேட விசாரணை பிரிவுக்கு நேற்று சட்டத்தரணியொருவரின் ஊடாக சரணடைந்துள்ள முன்னாள் கிரிக்கெட் வீரர் சசித்திர மதுசங்க சேனநாயக்க நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு முறைப்பாடு தொடர்பில் சட்டமா அதிபரை பிரதிநிதித்துவப்படுத்து பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் தெரிவிக்கையில்,

2019 ஆம் ஆண்டு விளையாட்டில் தவறுகளை தடுக்கும் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்திற்கு வந்துள்ள முதலாவது வழக்கு இதுவாகும்.

தேசிய மட்ட கிரிக்கெட் வீரரான சந்தேகநபர் நாட்டிற்காக விளையாடுவதை விடுத்து பணத்திற்காக விளையாடி மோசடி செய்துள்ளார். 2020 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலுக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு இணங்க இலங்கை கிரிக்கெட் நிறுவனமும் இந்த சம்பவம்தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தரிந்து தஸ்நாயக்க மற்றும் தம்மிக்க பிரசாத் ஆகிய இரண்டு வீரர்களும் பணத்திற்காக போட்டியை காட்டிக் கொடுத்துள்ளமை தொடர்பில் சந்தேக நபர் செயற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சூதாட்டக்காரர்களூடாக இந்த வீரர்களுக்கு வட்ஸ்அப் மூலம் அழைப்பை ஏற்படுத்தி போட்டிக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் விளையாடவும், பாரபட்சமாக செயற்படவும் ஆலோசனை வழங்கப்பட்டது. இதற்காக டொலரில் கொடுப்பனவை வழங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டு மேற்படி இவ்வீரர்கள் ஊக்குவிக்கப் பட்டுள்ளனர்.

எனினும்,இவ்வீரர்கள் இதற்கு அடிபணியாமல் செயற்ப ட்டுள்ளனர். சூதாட்டக்காரர்கள் கூறும் வகையில் செயற்பட்டால் 40 ஆயிரத்திலிருந்து 60 ஆயிரம் டொலர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர்களிடம் தெரிவிக்கப்பட்டிருந்ததா கவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

## யாழ். சிறுமி...

அளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் பணிப்பாளர் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்த அமைச்சர், அது தொடர்பாக அறிக்கையொன்று கையளிக்கப் படும் என்றும் தெரிவித்தார். யாழ். போதனா வைத்தியசாலையில் 8 வயது சிறுமியின் கையொன்று சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று சார்ள்ஸ் நிர்மலநாதன் நேற்று சபையில் கேட்டுக்கொண்டார். அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## நாட்டில் மீண்டும்...

பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

செனல் 4 இதுவரை எமது நாட்டுக்கும் மக்களுக்கும் என்ன செய்தது என்பதை நாம் அறிவோம் என்பதால் இறுதியாக அது வெளியிட்ட தகவல்கள் தொடர்பிலும் நாம் அச்சமடையத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

சஹ்ரானும் அவரது குழுவும் மதத்தின் பெயரால் ஊக்குவிக்கப்படுவதற்கும் மரணிப்பதற்கும் சில மத நிறுவனங்கள் பின்னணியில் செயற்பட்டுள்ளன. அதேபோன்று அதற்குப் பின்புலத்தில் சில அரசியல் சக்திகளும் சர்வதேச சக்திகளும் காணப்படுகின்றன.

அவர்களைக் காப்பாற்றுவதற்காக அஸாத் மௌலானா மேற்கொண்டு வரும் நடவடிக்கையே இந்த சனல் 4 வுக்கு அவர் வழங்கிய தகவல்கள் என்ற பலமான சந்தேகம் எனக்குள்ளது.

அத்துடன் ஒரு தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டதை வைத்து விடயங்களை திசை திருப்பி சர்வதேசத்துக்கு ஒரு கருத்தை தெரிவித்து

நாட்டில் பாதுகாப்பு நிலைமைகளை குழப்புகின்ற கருத்துக்களையும் பாராளுமன்றத்தில் தெரிவித்து மீண்டும் ஒரு அச்சுறுத்தல் சூழ்நிலைக்கான சந்தர்ப்பத்தை உருவாக்கி கொடுக்கப் பார்க்கின்றார்களா என்ற சந்தேகமும் ஏற்படுகிறது.

என்னோடும் எனது அமைப்போடும் சேர்ந்து பயணித்த ஹன்சீர் அசாத் மௌலானா என்பவர் ஒரு புகலிடக்கோரிக்கைக்காக வெளிநாடு சென்றுள்ளார். தனது வாழ்க்கையை நிறுவிக்கொள்வதற்காக பல பொய்யான பிரசாரங்களில் அவர் தற்போது ஈடுபட்டுள்ளார்.

அவர் எமது அமைப்பிலிருந்தார். என்னால் இங்கு இருக்க முடியாது. நான் குடும்பத்தோடு வெளிநாடு செல்ல வேண்டும். எனக்கான பிணக்குகள் தொடர்பாக தீர்வு காண வேண்டும் என்று கூறி அனுமதி பெற்றுக் கொண்டே வெளிநாடு சென்றார்.

கிட்டத்தட்ட ஒரு வருடத்தை கடந்துள்ள நிலையிலேயே அவர் செனல் 4 வுக்கு இந்த தகவல்களை வழங்கியுள்ளார். அவர் வழங்கிய தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சனல் 4 தொலைக்காட்சி எமது நாட்டுக்கும் மக்களுக்கும் கடந்த காலங்களில் என்ன செய்தது என்பதனை நாம் அனைவரும் அறிவோம்.

அந்த அடிப்படையில் அந்த ஊடகத்தில் வெளியிடப்பட்ட செய்தி தொடர்பில் நாம் அச்சமடைய வேண்டிய அவசியம் கிடையாது.

இதைப் போன்று பல ஊடகங்களினால் நாம் தொடர்ந்து ஒடுக்கப்பட்டுள்ளோம். எனினும் பாராளுமன்றம் என்ற உயரிய சபையிலே குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பல உறுப்பினர்கள் என்னுடைய பெயரையும் இணைத்து பேசியமை தொடர்பில் நான் கவலை யடைகின்றேன்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் என்பது யாராலும் ஏற்றுக் கொள்ளமுடியாத வன்முறையாகும். அதிலும் கிழக்கு மாகாண மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்ட குண்டுவெடிப்பு தாக்குதல்அது..

இந்த குண்டுத் தாக்குதல்களை ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் தான் செய்தார்கள் என்று அந்த அமைப்பின் தலைவரான மரணம் அடைந்த அல் பக்தாதி சொல்லியிருந்தார். அதேபோன்று அந்த அமைப்பின் உத்தியோக பூர்வ இணையத்தளமான ''அமாத்''திலும் அவர்கள் உரிமை கோரியிருந்தார்கள்.அவர்கள் எதற்காக, என்ன நோக்கத்திற்காக செய்தோம் என்பதனையும் தெளிவுபடுத்தி இருந்தார்கள். அதன்பின்னர் நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகள் ,கைதுகள் என்பவற்றையும் நாம் கண்டோம்.

இவ்வாறான நிலையில் பல காலம் கழித்து,வெளிநாட்டுக்கு புகலிடக்கோரிக்கைக்காக சென்றுள்ள இந்த அஸாத் மௌலானா இந்த குண்டுத்தாக்குதல் விடயத்தை திசை திருப்ப நினைப்பதாகவே நான் நம்புகின்றேன்.

# வடமாகாணத்தின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் ஐ.நா. பூரண ஆதரவளிக்கும்

## ஐ.நா.வின் இலங்கைக்கான இணைப்பாளர்

**பு.கஜிந்தன், யாழ். விசேட, கரவெட்டி தினகரன், யாழ்ப்பாணம் குறூப் நிருபர்கள்**



வடமாகாண மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்துக்கும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து பூரண ஆதரவை வழங்குமென, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிராஞ் (Marc Andre Franche) தெரிவித்தார்.

ஐ.நா.வின் இலங்கைக்கான இணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிராஞ் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து பல்வேறு தரப்பினரையும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (05) சந்தித்தார். இந்நிலையில், வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸை ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இச்சந்திப்பின் போது மேலும் தெரிவித்த அவர்,

"வடக்கு மக்களின் வாழ்க்கை மற்றும் அவர்களின் அன்றாட செயற்பாடுகள் தொடர்பாக நாம் மகிழ்ச்சியடைவதுடன், வடக்கின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்புகளை ஒழுங்கமைக்க ஐ.நா. பூரண ஆதரவு வழங்கும். வடமாகாணத்தின் சமூக, பொருளாதார மற்றும் நல்வாழ்வு தொடர்பாக திருப்திகரமான நிலைமை காணப்படுவதுடன், எதிர்காலத்தில் இவற்றுக்கான அபிவிருத்திகளுக்கு ஆதரவளிப்பதே ஐ.நா.வின் நோக்கமாகும்.

வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஐ.நா.வின் இலங்கைக்கான இணைப்பாளருக்கு வடமாகாண ஆளுநர் விளக்கமளித்தார்.

இதேவேளை, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரனை மாவட்டச் செயலகத்தில் சந்தித்த ஐ.நா. பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ், யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்த ஐ.நா. பிரதிநிதி, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜாவை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் பின்னர், யாழ்ப்பாண கோட்டைக்கும் ஐ.நா. பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் சென்று பார்வையிட்டார்.

## வடக்கின் உதயம்

### வடமராட்சி கோவில்சந்தையை புனரமைக்க அடிக்கல் நடுகை



**நாகர்கோவில் விசேட, சாவகச்சேரி விசேட நிருபர்கள்**

யாழ்ப்பாணம், வடமராட்சியில் கோவில்சந்தை புனரமைப்புக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று புதன் கிழமை (06) காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ். எம்.சார்ள்ஸ் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

வடமராட்சி பிரதேச சபை செயலாளர் க.கம்ஸநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மந்துவில் வட்டாரத்தில் பண்ணை வீதி மற்றும் பண்ணை 2ஆம் குறுக்கு வீதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த இரு வீதிகளுக்கும் சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் பாரத் பத்மாவின் 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளினூடாக நிதி ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் ஹோட்டலில் திருடிய இருவர் கைது

சுமார் ரூ. 5 இலட்சம் பெறுமதியான திருடப்பட்ட பொருட்கள் மீட்பு



**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியை அண்டி புதிதாக நிர்மாணிக்கப்படும் ஹோட்டலொன்றின் குளியல் அறைகளிலிருந்து திருடப்பட்ட ஒருதொகுதி உபகரணங்களுடன் சந்தேகநபர்கள் இருவரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (05) மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்ததுடன், இவர்களிடமிருந்து திருடப்பட்ட உபகரணங்களையும் கைப்பற்றினர்.

சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான குளியல் அறை உபகரணங்களை சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றியதாகத் தெரிவித்த மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர், மன்னார் தாழ்வுப்பாடு மற்றும் புத்தளத்தைச் சேர்ந்த 23, 58 வயதுடைய சந்தேகநபர்களையே கைது செய்ததாகவும் தெரிவித்தனர்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் அக்ஹோட்டல் உரிமையாளர் கடந்த திங்களன்று (04) செய்த முறைப்பாட்டையடுத்து, விசாரணை செய்து இச்சந்தேகநபர்களை கைது செய்தனர்.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் இச்சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகின்றனர்.

## எழுதுமட்டுவாழ் கைகலப்பில் இளைஞர் பலி; இருவர் கைது

**யாழ். விசேட நிருபர்**

யாழ். எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் இடம்பெற்ற கைகலப்பில் பாதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி கடந்த ஞாயிறன்று உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி உழவனூரைச் சேர்ந்த 28 வயதுடைய செல்வக்குமார் ஜெகதீஷ்குமார் என்பவரே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக இருவரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த 31ஆம் திகதி எழுதுமட்டுவாழிலுள்ள உறவினர் வீடொன்றில் நடைபெற்ற நிகழ்வின் போது, மதுபான விருந்துபசாரமும் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட எழுதுமட்டுவாழைச் சேர்ந்தவர்களுக்கும் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்களுக்கும் இடையில் மதுபோதையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு, அது கைகலப்பாக மாறியதில் மேற்படி இளைஞர் தாக்குதலுக்குள்ளாகியதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்நிலையில், திடீர் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையில் மேற்படி இளைஞர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## வடமராட்சி முருகையா ஆலயத்தில் ரூ. 2 1/2 இலட்சத்துக்கு ஏலம் போன மாம்பழம்

**நாகர்கோவில் விசேட நிருபர்**

யாழ். வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் வடக்கு முருகையா தேவஸ்தானத்தினுடைய மாம்பழத் திருவிழாவின் போது, மாம்பழமொன்று இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (05) ஏலம் போயுள்ளது.

மேற்படி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா கடந்த மாத பிற்பகுதியில் ஆரம்பமாகி நடைபெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் மாம்பழத் திருவிழா நடைபெற்றது.

இத்திருவிழாவின் போது, இரவு வேளை பூஜையில் வைக்கப்பட்ட மாம்பழமே ஏலத்துக்கு விடப்பட்டதாகவும் சம்மாட்டி ஒருவரே இந்த மாம்பழத்தை ஏலத்தில் எடுத்ததாகவும், மேற்படி தேவஸ்தான நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## 'பண்பாடுகள் படும்பாடுகள்' நூல் வெளியீட்டு நிகழ்வு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

எழுத்தாளர் மிருசுவில் தமிழ்த்தாசனின் 'பண்பாடுகள் படும்பாடுகள்' எனும் சிறுகதைத்தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (10) பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி வடக்கு திருப்புகழ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வைத்திய அதிகாரி சி.சுதோக்குமார், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை மருத்துவர் அருளானந்தம், குகன் ஸ்ருடியோ அதிபர் வ.ஸ்ரீபிரகாஸ், திருப்புகழ் மண்டப உரிமையாளர் யோ.செந்திமயூரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின் இறுதியில் சக்கடத்தார் எனும் நகைச்சுவை சிறப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கின் குரல்

### விளையாட்டு மைதானம் அமைக்க நடவடிக்கை



கிண்ணியா விளையாடுக் கழகங்களின் வேண்டுகோளின் பேரில், பொது விளையாட்டு மைதானம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான காணியை அடையாளம் காணும் நடவடிக்கைகளில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ் தௌபீக் பங்கேற்றிருந்தார். இதில், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் மற்றும் பிரதேச மக்களும் கலந்துகொண்டனர். இவர்களுடன் கலந்துரையாடிய பின்னர், விளையாட்டு மைதானத்துக்கான பொதுக்காணி அடையாளம் காணப்பட்டது.

### இளவாலை விஜயேந்திரனின் நூல் நாளை வெளியீடு



கவிஞர் இளவாலை விஜயேந்திரனின் 'எந்தக் கங்கையில் இந்தக் கைகளைக் கழுவுவது?' பெருந்திரட்டு அறிமுகம் நாளை (08) வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது, மட்டக்களப்பு, ஊறணி மண்டபத்தில் அமெரிக்கன் சிலோன் மிசன் கலந்துரையாடல் மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. நூல் அறிமுகவுரையை கலாநிதி சிவஞானம் ஜெயசங்கர் மேற்கொள்ள, விமர்சனவுரைகளை சிராஜ் மஷ்ஹூர் மற்றும் த. மலர்ச்செல்வன் ஆகியோர் வழங்குவர்.

## கரையோர பிரதேசங்களின் சவால்களை கலந்துரையாடி சுமுக தீர்வுகாண திட்டம்

**(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)**





அக்கரைப்பற்று பிரதேசத்தின் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவது குறித்த கலந்துரையாடல் அக்கரைப்பற்று மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம் அன்ஸாரின் ஏற்பாட்டில், தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம் அதாஉல்லாவின் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. பிரதேசத்தின் கல்வியியலாளர்கள்,வைத்தியத்துறையினர் சட்டத்தரணிகள், பள்ளிவாசல்களின் தலைவர்கள் உள்ளிட்ட துறைசார் நிபுணர்கள் மற்றும் சமூக முன்னோடிகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். அக்கரைப்பற்று வைத்தியசாலை அபிவிருத்தி , பொதுமக்கள் சுகாதார மேம்பாடு மற்றும் பிராந்திய பாடசாலைகளை ஒழுங்குபடுத்தல், அனர்த்த முகாமைத்துவ சவால்கள் உள்ளிட்ட பல விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன் விசேட தீர்வுகளும் முன்மொழியப்பட்டன. இத்தீர்மானங்கள் தொடர்பில் உயர் மட்டத்தினருடன் கலந்துரையாடி முடிவுகள் எடுக்கப்படுமென தேசிய காங்கிரஸ் தலைவர் உறுதியளித்தார்

மேலும்,அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்கள் எதிர்கொள்ளும் இதுபோன்ற பிரச்சினைகளை ஆராய்ந்து உரிய முடிவுகளை எட்டுவதற்கு சகல ஊர்களிலும் இவ்வாறான கலந்துரையாடல்கள் நடத்தப்படுமென்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார்.

## வைத்தியர்களின் வசதிகளை மேம்படுத்தி சுகாதாரத்துறையை பாதுகாக்க வேண்டும்

**(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)**

வைத்திய துறையில் நாடு பயங்கர சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீவிரமாக சிந்தித்து செயற்பட வேண்டுமென, அரச வைத்திய அதிகாரிகள் சங்க கல்முனை மாவட்ட இணைப்பாளரும் மத்திய குழு உறுப்பினருமான டாக்டர் சுஹைல் அஹமட் தெரிவித்தார்.

வைத்தியத்துறை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் பத்திரிகையாளர் மாநாட்டில்,கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இக்கூட்டத்தில் பேசிய அவர்:

இன்று நாட்டிலிருந்து வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்திய அதிகாரிகள் வெளியேறி வருகின்றனர். இது, எமக்கு பாரிய இழப்பாகும். இலங்கையிலிருந்து இதுவரை விசேட வைத்திய நிபுணர்கள் முன்னூறு பேரும் வைத்திய அதிகாரிகள் அறுநூறு பேரும் வெளியேறியுள்ளனர். கல்முனை பிரதேசத்திலிருந்தும் அதிகளாவன வைத்தியர் வெளியேறியுள்ளனர்.

இரண்டு மயக்க மருந்து நிபுணர்கள் மாத்திரமே பெரும் கஷ்டத்துக்கு மத்தியில் இங்கு பணியாற்றுகின்றனர். இந்நிலை தொடருமானால் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகள் மூடப்படலாம். இலவச வைத்திய சேவைக்கும் பாதிப்புகள் ஏற்படலாம். இது போன்ற நிலைமைகளை மேலும் ஏற்படாமல் தடுப்பதற்கு எமது சங்கம் அரசுக்கு சில ஆலோசனைகளை வழங்கியுள்ளது .சிறந்த தங்குமிட வசதி, போக்குவரத்து ஏற்பாடுகள் வைத்தியர்களின் குழந்தைகளுக் கான கல்வி வசதிகள் போன்றவைகளில் அரசு கூடுதல் சிரத்தை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.



பொலிஸ் திணைக்களத்தில் 34 வருட காலமாக சேவையாற்றி ஓய்வுபெற்ற பிரதம பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ்.அப்துல் மஜீத் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இவர், இறுதியாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் பெருங்குற்றப்பிரிவுக்கு பெறுப்பதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படம் – பாலமுனை தினகரன் நிருபர்)

### முரளிதரனின் வாழ்க்கை சரித்திர திரைப்படம்

# முன்னோட்ட காணொளியில் தடை செய்யப்பட்ட வார்த்தையை பயன்படுத்த வேண்டாம்



முரளிதரனின் வாழ்க்கை சரித்திர திரைப்பட முன்னோட்ட காணொளியில் சர்ச்சைக்குரிய சொற்பிரயோகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவற்றை திருத்தியமைக்கு மாறும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன், முன்னாள் கிரிக்கட் வீரர் முத்தையா முரளிதரனுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இத்திரைப்படத்தில் 'உலகை திரும்பி பார்க்க வைக்கும் மலையக தமிழன்' என்று சொல்லுங்கள். தடைசெய்யப்பட்ட வார்த்தைகளை பயன்படுத்த வேண்டாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

கிரிக்கட் வீரர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை சரித்திரம் பற்றிய திரைப்பட முன்னோட்ட காணொளி அண்மையில் வெளியாகியிருந்தது. அதில் சர்ச்சைக்குரிய சொற்பிரயோகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இந்நாட்டு இந்திய வம்சாவளி மலையக தமிழர் மத்தியில், தடைசெய்யப்பட்ட வார்த்தையை உங்கள் பட முன்னோட்ட காணொளியில் பயன்படுத்த வேண்டாம். அந்த வார்த்தையை நானே நேரடியாக தடை செய்து காட்டியுள்ளேன்.

நானே ஒரு கதாசிரியர்.

அந்த இடத்தில் 'நாட்டை திரும்பி பார்க்க வைத்த மலையக தமிழன்' என்று போடுங்கள். சரியாக வரும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**விலைமனுக்கோரல் (IFB)**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அஸ்போல்ட் ஆலைகளுக்கு மூலப்பொருட்களை வழங்குவதற்கான விலைமனுக்கோரல்**

இங்கிரிய, கேரகலை, கொடதெனியாவ, மெதயாய, கொத்மலை, பலாங்கொடை, மெதவாச்சிய, அம்பன்பொல, சூரியவெவ மற்றும் பொலொன்னருவை ஆகிய இடங்களில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அஸ்போல்ட் ஆலைகளுக்கான மூலப்பொருட்களை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் ஆர்வமுடைய வழங்குனர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2023.09.07 ஆம் திகதி முதல் 2023.09.27 ஆம் திகதி வரை **www.rda.gov.lk** இல் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**விலைமனுக்கோரல் (IFB)**

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01. | மகநெகும வீதி கட்டுமான உபகரண நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட அம்பலாங்கொட, கனேவல்பொல அஸ்போல்ட் மற்றும் அரைக்கும் ஆலை, கட்டுகம்பொல அஸ்போல்ட் ஆலை மற்றும் குண்டசாலை வேலைத்தளத்திற்கான பாதுகாப்பு சேவையினை வழங்குதல்<br>ஒப்பந்த இலக்கம் : RDA/DPR/SEC/MN/2023/105 |

மேற்கூறிய பணிகளுக்காக தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2023.09.08 ஆம் திகதி முதல் 2023.09.22 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளத்தை **www.rda.gov.lk** பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைவர்,
வீ.அ.அ.ச கொள்முதல் குழு,
வீதி அபிவிவிருத்தி அதிகாரசபை.

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

113 சுசூகி கார்கள் விற்பனைக்கு

CBE-5109 SUZUKI WAGON R, 2018, அதியுயர் விலை க்கு. வெலிப ல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 056236

117 வேன்கள் விற்பனைக்கு

251-7342 MITSUBISHI 1993, VAN அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 056238

122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

QM-9740 BAJAJ 2007, THREEWHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 070599916 3 . 056233

QN-8597 BAJAJ 2008, THREEWHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 056232

வேலைவாய்ப்பு

319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

முஸ்லிம் வீடொன்றிற்கு சமையற்கார பெண் சமைக்கவும், நாளாந்த வேலைகளையும் தங்கியிருந்து செய்வதற்கு தேவை. தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படும். சம்பளம் 35, 000 - 40, 000, வயது 25 50 வரையும் . தொடர்பிலக்கம் 0779966852. 055929

### இரத்தினபுரி மாவட்டத்தில்

# சீரற்ற காலநிலை; 275 குடும்பங்கள் பாதிப்பு

*(பலாங்கொடை தினகரன் நிருபர்)*



இரத்தினபுரி மாவட்டத்தில் சீரற்ற கால நிலையால் 275 குடும்பங்களைச் சேர்ந்த 1050 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட செயலாளரும் இரத்தினபுரி அனர்த்த முகாமைத்துவ கமிட்டி தலைவர் வசந்த குணரத்ன தெரிவித்தார்.

கடும் மழை, மண்சரிவு, கடும் காற்று ஆகிய பல அனர்த்தங்கள் காரணமாகவே இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இரத்தினபுரி மாவட்டத்தில் கிரியல்ல, குருவிட்ட, கஹவத்த, அயகம, கொலன்ன, எலபாத, பெல்மதுளை, எஹலியகொடை ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளைச் சேர்ந்த 39 கிராம சேவகர் பிரிவுகளில் அதிகளவில் பாதிப்புகள் பதிவாகியுள்ளன.

கிரியல்ல பிரதேச செயலகப்பிரிவிலுள்ள கிராம சேவக பிரிவில் ஒரு குடும்பத்தில் மூன்று நபர்களும் குருவிட்ட பிரிவில் 06 கிராமசேவக பிரிவுகளில் எட்டு குடும்பங்களைச் சேர்ந்த 38 பேரும் கஹவத்தை பிரிவில் ஒரு குடும்பத்தில் 02 பேரும் அயகம பிரிவில் மூவரும் மற்றும் கொலன்ன பகுதியில் நான்கு பேரும் எலபாத பகுதியில் ஒன்பது பேரும் பெல்மதுளை பகுதியில் 6 பேரும் எஹலியகொடை பகுதியில் 26 கிராம சேவகர் பிரிவுகளில் 260 குடும்பங்களைச் சேர்ந்த 985 பேரும் மண்சரிவு அபாயம் காரணமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டு உறவினர்களின் வீடுகளில் தங்கியிருப்பதாக மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

கிரியல்ல,அயகம, கஹவத்த, கொலன்ன, பெல்மதுளை ஆகிய பகுதிகளிலுள்ள 15 வீடுகள் கடும் காற்று காரணமாக சேதமடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கு மாவட்ட செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# கந்தேகெதர தோட்ட தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது



பதுளை கந்தேகெதர மாத்தன்னை தோட்ட பிரிவைச் சேர்ந்த மக்கள் கடந்த சில நாட்களாக மேற்கொண்டிருந்த வேலைநிறுத்த போராட்டம், கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலத்தின் தலையீட்டையடுத்து முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

தோட்ட நிர்வாகத்தின் நடவடிக்கைகளை கண்டித்து கடந்த நான்காம் திகதி ஆரம்பித்த வேலை நிறுத்த போராட்டம் நேற்றையதினம் முடிவுக்கு வந்தது. இதேவேளை ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் தோட்ட தலைவர்களையும் இணைத்துக் கொண்டு பிறிதொரு பேச்சுவார்த்தை நடைபெறவிருப்பதாக இராஜாங்க அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக கல்வி இராஜாங்க அமைச்சரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் பேரில் ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் தேசிய அமைப்பாளர் எஸ். ஆனந்தராஜா பாபு அத்தோட்டத்துக்கு சென்று அங்கிருந்த நிலைமைகளை ஆராய்ந்தார். அதுமட்டுமின்றி, தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்ததுடன் தோட்ட நிர்வாகத்துடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அதனடிப்படையில் தொழிலாளர்கள் மேற்கொண்டிருந்த வேலைநிறுத்தப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

எனினும் தோட்ட கமிட்டி தலைவர்களையும் இணைத்துக்கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபடவிருப்பதாக இராஜாங்க அமைச்சரின் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கூறுகையில், பெருந்தோட்ட நிர்வாகங்களை பொறுத்தவரையில் அவை இலாபத்தை மட்டுமே குறிக்கோளாக கொண்டு செயற்பட்டு வருகின்றன. மாறாக அந்த இலாபத்துக்கு பிரதான காரணமாகவிருக்கும் தோட்டத்தொழிலாளர்களை சிறிதும் எண்ணிப் பார்ப்பதில்லை.

எனவே எதிர்காலத்தில் இத்தகைய நிலைமைகளை மாற்றியமைக்கும் சூழல் உருவாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## வாரியப்பொல பிரதேச சபை

**2024ம் ஆண்டிற்காக கீழ்க்காணும் சபைச் சொத்துக்களை வருடாந்த குத்தகைக்கு விடும் கேள்வி கோரல்**

1. 2024 ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையான காலத்திற்கு வாரியப்பொல பிரதேச சபைக்குச் சொந்தமான கீழ்க்காணும் சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காக ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்களால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | சொத்துக்கள் | சமர்ப்பிக்க வேண்டிய குறைந்தபட்ச கேள்வி (ரூ) | கேள்வி வைப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 01 | பொதுச்சந்தை இல. 36 மாட்டிறைச்சிக்கடை | 800,000.00 | 40,000.00 |
| 02 | பொதுச்சந்தை இல. 35 கோழியிறைச்சிக்கடை | 156,000.00 | 12,480.00 |
| 03 | பொதுச்சந்தை இல. 37 மீன் கடை | 192,000.00 | 15,360.00 |
| 04 | வாரியப்பொல ஞாயிறு வாரச்சந்தை நன்னீர் மின் தட்டு | 90,000.00 | 9,000.00 |
| 05 | வாரியப்பொல ஞாயிறு வாரச்சந்தை பன்றியிறைச்சிக்கடை | 300,000.00 | 24,000.00 |
| 06 | வாரியப்பொல பஸ் நிலையம் துப்புறவேற்பாட்டு அமைப்பு | 330,000.00 | 26,400.00 |
| 07 | ஹேனேகெதர மாட்டிறைச்சிக்கடை | 300,000.00 | 24,000.00 |
| 08 | புப்போவ மாட்டிறைச்சிக்கடை | 55,000.00 | 5,500.00 |
| 09 | மினுவன்கெட்டே மாட்டிறைச்சிக்கடை | 126,500.00 | 10,120.00 |
| 10 | கட்டுபொத்த நகரில் மீன் தட்டு | 264,000.00 | 21,120.00 |
| 11 | அமுனுகம, அமுனுகமவத்த காணி | 60,000.00 | 6,000.00 |
| 12 | கெலிமுனே, தல்கஹபிட்டியவத்த காணி | 200,000.00 | 16,000.00 |
| 13 | கெலிமுனே தல்கஹபிட்டியவத்த 04ம் ஒழுங்கை காணி | 50,000.00 | 5,000.00 |
| 14 | எம்பலவ, பேரகொல்லவத்த வளவ்வத்த காணி | 178,000.00 | 14,240.00 |
| 15 | பிரின்ஸ் பார்க் வத்த காணி | 10,000.00 | 1,000.00 |
| 16 | திம்பிரிவெவ நாபின்னவத்த காணி (மல்பெரிவத்த) | 137,000.00 | 10,960.00 |
| 17 | கொஸ்ஸவ, கொஸ்ஸவ வத்த தெற்குப் பக்கமாக உள்ள பகுதி காணி | 10,000.00 | 1,000.00 |
| 18 | கொஸ்ஸவ, குடாவெவவத்த இல. 44 பகுதி காணி | 7,500.00 | 750.00 |
| 19 | கொஸ்ஸவ, கொஸ்ஸவவத்த அல்வல அருகில் காணி | 123,000.00 | 9,840.00 |
| 20 | பஹல இமியன்கொட, ஹிட்டினாவத்த காணி | 75,000.00 | 7,500.00 |
| 21 | கல்வெஹெரகம எஸ்டேட் காணி | 30,000.00 | 3,000.00 |
| 22 | வெவகெதர எஸ்டேட் - டி பகுதி காணி | 34,000.00 | 3,400.00 |
| 23 | ஹொரொம்புவ வெவகெதரவத்த எஸ்டேட் இல. 19 பகுதி | 5,000.00 | 500.00 |
| 24 | ஹொரொம்புவ வெவகெதரவத்த எஸ்டேட் இல. 40 பகுதி | 10,000.00 | 1,000.00 |
| 25 | திகதவ காட்டுவெவவத்த காணி | 110,000.00 | 8,800.00 |
| 26 | கினிமான்னவெ அருகில் காணி | 7,500.00 | 750.00 |
| 27 | தெனிபொனேவத்த காணி | 10,000.00 | 1,000.00 |
| 28 | பனாதரகம கோன்மெதில்லேஹேன காணி | 5,000.00 | 500.00 |
| 29 | எரிஹபே பஹலதீலவத்த காணி | 10,000.00 | 1,000.00 |
| 30 | மல்வான லேக்வீவ் கார்டன் காணி 26 பகுதி | 2,000.00 | 200.00 |
| 31 | மல்வான லேக்வீவ் கார்டன் காணி 34 பகுதி | 10,000.00 | 1,000.00 |
| 32 | கொழுவாவ மல்அஸ்ன காணி | 10,000.00 | 1,000.00 |

2. கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல் பற்றிய தகவல்கள்
   2023.09.07 முதல் 2023.10.02 வரை அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத ரூ. 1000.00 கட்டணத்தைச் செலுத்தி கேள்வி விண்ணப்பங்களை வாரியப்பொல பிரதேச சபையின் தலைமையகத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன், 2023.10.03 முற்பகல் 10.00 இற்கு முன் வாரியப்பொல பிரதேச சபையின் செயலாளரின் உத்தியோபூர்வ இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு அல்லது பதிவுத் தபாலில் பிரதேச சபைக்கு செலுத்தி பொறியிடப்பட்ட கேள்விகளை ஒப்படைக்கலாம்.
3. பிரதேச சபையினால் விநியோகிக்கப்பட்ட கேள்வி விண்ணப்பப் படிவத்தில் மாத்திரம் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. கேள்வி விண்ணப்பங்கள் திறத்தல்
   2023.10.03 முற்பகல் 10.00 இற்கு வாரியப்பொல பிரதேச சபையின் தலைமையகத்தில் கேள்விகள் திறக்கப்படும்.
5. கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்கள் தேவையாயின் இலக்கம் 037-2267275 என்ற தொ.பே. இலக்கத்தில் விசாரித்தறியலாம்.
6. கேள்வியுடன் சம்பந்தப்பட்ட நிபந்தனைகளை சபையின் செயலாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

**செயலாளர்,
பிரதேச சபை,
வாரியப்பொல.**

## பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை – பொலொன்னறுவை

**கேள்வி அறிவித்தல்**

பொலொன்னறுவை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை மற்றும் அதனேடு இணைந்த நிறுவனங்களில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட மிகுதியாகவுள்ள பிளாஸ்டிக் பாகங்கள், கட்டிடம் பொருட்கள் மற்றும் கழற்றி அகற்றப்பட்ட கீழ்க்காணும் உபகரணங்களை விற்பனை செய்வதற்காக பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| லொட் இலக்கம் | விபரம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|
| 1 | கட்டிடங்களில் அகற்றப்பட்ட பலகை, எஸ்பெஸ்டஸ் சீட் மற்றும் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட மரப் பொருட்கள் | 5,000.00 |
| 2. | டயர் | 9,000.00 |
| 3. | பிளாஸ்டிக் பாகங்கள் மற்றும் அவ்வாறான துணைப் பாகங்கள், கண்ணாடிக் குப்பி | 30,000.00 |
| 4. | கழிக்கப்பட்ட இரும்பு மற்றும் அவ்வாறான துணைப் பாகங்கள் | 34,000.00 |
| 5. | பாவனையில் இருந்து அகற்றப்பட்ட இலத்திரனியல் உபகரணங்கள் | 5,000.00 |
| 6. | அகற்றப்பட்ட கடதாசி, கார்ட்போர்ட் | 10,000.00 |
| 7. | பற்றரி | 10,000.00 |

02. மீளளிக்கப்படாத ரூ. 2000.00 கட்டணத்தைச் செலுத்தி 2023.09.06 முதல் 2023.09.14 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள் பொலொன்னறுவை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் கணக்குப் பிரிவில் கேள்விப் பத்திரங்களை கொள்வனவு செய்யலாம். அவ்வேளையில் பொருட்களைப் பரீட்சிப்பதற்கு அனுமதிப் பத்திரங்களும் விநியோகிக்கப்படும். மீளளிக்கப்படும் வைப்பையும் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக்கு செலுத்த முடிவதுடன், அவ்வைப்பை கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிப்பதற்கு முன்பு காசாக மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

03. விற்பனைக்காக சமர்ப்பித்துள்ள சகல பொருட்களையும் மலேரியா களஞ்சியம், ச.தோ.ச. சந்தி, ஹிங்குரக்கொட (பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக்குச் சொந்தமான) முகவரியில் வைக்கப்பட்டுள்ளதுடன், கேள்விப் பத்திரங்களை கொள்வனவு செய்யும் வேளையில் விநியோகிக்கப்படும் அனுமதிப் பத்திரத்தின் மூலம் இருவருக்கு சென்று பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. பொலன்னறுவை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கழிக்கப்பட்ட பொருட்களுக்கான விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது விலைமனுக்களை உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"கழிக்கப்பட்ட பொருட்களுக்கான விலைமனுக் கோரல்"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2023.09.15 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் கணக்குப் பிரிவில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அல்லது தலைவர், பிரதேச பெறுகைக்குழு, பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, வைத்தியசாலை சந்தி, பொலன்னறுவை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் 2023.09.15 மு.ப. 10.00 இற்கு முடிவடைவதுடன், அவ்வேளையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வேளைக்காக விலைமனுக்களைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு அல்லது அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,
பிரதேச பெறுகைக்குழு,
பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,
பொலொன்னறுவை.**

22 மணித்தியாலத்திற்கு பின்னர்

# கைவிடப்பட்ட விவசாய கிணற்றில் விழுந்த யானை உயிருடன் மீட்பு

## திறப்பனை பகுதியில் சம்பவம்



**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் திறப்பனை வெல்லமுதாவ பகுதியிலுள்ள விவசாய நிலமொன்றில் அமைந்துள்ள கைவிடப்பட்ட விவசாயக்கிணற்றில் விழுந்திருந்த காட்டு

யானை ஒன்றினை 22 மணித்தியாலங்களின் பின்னர் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் திறப்பனை வட்டார வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பெக்கோ இயந்திரத்தின் உதவியுடன் (05) வெளியில் எடுத்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் குறித்த பகுதியூடாக இரவு நேரத்தில் உணவு தேடிச் சென்ற யானைக் கூட்டத்திலுள்ள யானையொன்றே இவ்வாறு தவறுதலாக கைவிடப்பட்ட விவசாயக்கிணற்றில் விழுந்துள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

# சட்டவிரோத 2100 கடல் சங்குகள் இ.போ.ச பஸ்ஸிலிருந்து மீட்பு



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கற்பிட்டியில் இருந்து சட்ட விரோதமாக மன்னாருக்கு அனுப்புவதற்கு தயாராக வைத்திருந்த கடல் சங்குகள் பொலிஸாரினால் கடந்த திங்கட் கிழமை (04) கைப்பற்றப்பட்டுள்ளது.

கற்பிட்டியில் இருந்து பயணிக்கும் இ.போ.ச பயணிகள் பஸ்ஸின் ஊடாக மன்னாருக்கு கொண்டு செல்வதற்கு தயார்படுத்தப்பட்டிருந்த 2100 கடல் சங்குகள் கைப்பற்றியுள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் பயணத்தை தொடங்கும் முன் கற்பிட்டி நகரில் நேற்று பஸ்ஸை சோதனையிட்ட பொலிஸார் பஸ்ஸின் பின்புற டிக்கியில் இருந்து 07 உரைப் பைகளில் இருந்து 2100 கடல் சங்குகளை மீட்டுள்ளனர்.

எனினும் குறித்த கடல் சங்குகளை பஸ்ஸில் ஏற்றிச் சென்றது யார் என இதுவரை தெரியவில்லை என பொலிஸார் குறிப்பிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரனைகள கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வெலிகம அறபாவில்

# 'Back 2 School' நிகழ்வின் முன்னோடி நிகழ்வுகள்

**வெலிகம தினகரன் நிருபர்**





வெலிகம அறபா தேசிய பாடசாலையின் இம் மாத இறுதியில் நடைபெறவுள்ள Back 2 School நிகழ்வை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெற்று வருகின்றன. கடந்த வாரம் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் கல்லூரி அதிபர் எம்.டி.எம் முதஹ்ஹர் தலைமையில் விமர்சையாக கல்லூரி வெபா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னால் ஓய்வு பெற்ற ஆசிரியர், முன்னாள் அதிபர், ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்றுவிப்பாளர் , "அரும்பு" இதழின் ஆசிரியருமான ஹாபிஸ் இஸ்ஸதீன் (SLEAS) கலந்து சிறப்பித்தார்.

மேலும் கௌரவ அதிதிகளாக தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேக் எம்.எ.எம் மஷாஹிர் (நளீமி) வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி எம்.ஏ.எஸ் ஸனூலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இத் தினத்தையொட்டி தரம் 9, 10, 11, 12 மாணவர்களின் பெற்றோர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சியும் இடம் பெற்றது. இதனையும் ஹாபிஸ் இஸ்ஸதீன் அவர்களே நடாத்தி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த நாட்டை மீளக்கட்டியெழுப்பியது ஐ.தே.க. தலைவர்களே

## ஐ.தே.க. மாநாட்டில் முன்னாள் அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடு பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையை அடைந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாட்டை கட்டியெழுப்ப ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்களே நடவடிக்கை எடுத்து வந்துள்ளனர் என முன்னாள் அமைச்சரும் ஐ.தே.க. அரசியல், கொள்கை மற்றும் ஆய்வுக் குழுவின் தலைவருமான கலாநிதி கருணாசேன கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

ஆசியாவின் பலம்வாய்ந்த நாடுகளுக்கு பாரிய சக்தியும் பொருளாதார பலமும் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தில் வெற்றிகரமான சர்வதேச தொடர்புகளை கட்டியெழுப்பி பாரிய எழுச்சியை கொண்டு வருவதற்கான தலைமைத்துவம் எமது நாட்டில் தற்போது உருவாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் 77ஆவது வருட மாநாடு நேற்று கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இம்முறை மாநாடு மத வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கி மிகவும் எளிமையான வகையில் நடத்தப்பட்டது. இந்த மாநாட்டிற்கு சம காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை டிஜிட்டல் மயப்படுத்தும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 2048ஆம் ஆண்டு நாட்டின் வெற்றி இலக்கு குறித்த சிந்தனைக் கிணங்க இலங்கையில் அரசியல் கட்சியொன்றின் செயற்பாடுகள் இவ்வாறு முதல் தடவையாக டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

**1) கடன் தொடர்பு இல. 88530606**

**2) நிரந்தர மேலதிகப் பற்று இல. 5683096**

**இஹலவத்தை, முலான, ஹங்கம எனும் முகவரியைச் சேர்ந்த திரு. ஜெயசிங்ஹ, ஆராச்சிகே ரத்னசிறி என்பவரின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.**

இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.07.21ஆம் திகதியிட்ட 2342ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.07.26ஆம் திகதி தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித் கருணாரத்ன அவர்கள் 2023.10.20ஆம் திகதி பி.ப. 12:30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், கிறுவாபற்று கிழக்கு, அம்பலாந்தொட்ட பிரதேச சபை எல்லைகளுள் அம்பலாந்தொட்ட பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 181 முலான கிராம அலுவலர் பிரிவில் முலானவில் **"லுனுவேரனியகஹஹேன"** என்றழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச்.எச்.தர்மதாஸ தயாரித்த 2017.08.16ஆந் திகதியிட்ட 6182ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட 36 B என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு **வடக்கில்** FVP 453 ஆம் இலக்க வரைபடத்தில் 37ஆம் இலக்க காணித்துண்டையும் **கிழக்கில்** FVP 453ஆம் இலக்க வரைபடத்தில் 35ஆம் இலக்க காணித்துண்டையும் **தெற்கில்** 6182ஆம் இலக்க வரைபடத்தில் 36C ஆம் இலக்க காணித்துண்டையும் **மேற்கில்** 6182ஆம் இலக்க வரைபடத்தில் 36A ஆம் இலக்க காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது அங்குள்ள மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்துடனும் ஒரு ரூட் மற்றும் பதினேழு தசம் மூன்று பேர்ச்சுகள் (ஏ0-ரூ1-பே-17.3) பரப்பளவுடனும் LDO F 36/26 எனும் இலக்கத்தின் கீழ் அம்பாந்தோட்டை காணிப்பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

**ஒதுக்கங்கள்**

1. இக்காணியில் அல்லது அதற்கு மேலுள்ள கனிமங்கள் (இவ்வனுமதியில் விலைமதிப்பற்ற கல் எனக் குறிப்பிடப்படும்) அனைத்தினதும் உரிமையும் அத்தகையவற்றை தோண்டுவதற்கும், தேடுவதற்கும், அங்கு பணியாற்றுவதற்கும் மற்றும் எடுத்துச் செல்வதற்குமான உரிமையும் அரசுக்கே உரியதாகும்.
2. காணி உரிமையாளருக்கு காணிமீதுள்ள உரிமையானது இவ்வனுமதியில் திகதியில் தற்போதுள்ள எந்தவொரு வழியுரிமைக்கும் அல்லது பிற சேவக உரிமைக்கும் உட்பட்டதாகும்.

**நிபந்தனைகள்:**

1. 20 பேர்ச்சுகள் மேட்டுநிலம்--ஹெக்டேயர்கள்/ ஏக்கர்கள் நீர்ப்பாசன நிலம் எனப்படும் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பிரிக்கப்பட்ட பங்கொன்றினை பரப்பளவில் குறைவான இக்காணியின் உரிமையாளர் விற்பனை செய்யக்கூடாது.
2. உரிமையாளர் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்சப் பகுதியைவிடக் குறைவான பங்கின் பிரிக்கப்படாத 1/2 பங்கினை விற்பனை செய்யக்கூடாது. அதாவது:-
3. நிபந்தனை 1இல் குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராகக் கூடாது.
4. நிபந்தனை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள இக்காணியின் குறைந்தபட்சப் பகுதியை விடக் குறைவான பிரிக்கப்படாத பங்கொன்றிற்கு எந்வொரு நபரும் உரிமையாளராகக் கூடாது.
5. இக்காணியோ அல்லது அதன் எந்வொரு பகுதியோ நீர்ப்பாய்ச்சத்தகு பிரதேசமாகவிருப்பின் அல்லது ஏற்கனவே கட்டுமானத்தின்போது கட்டப்பட்ட அல்லது இனிமேல் கட்டப்படவிருக்கும் நீர்ப்பாசனப் பணியின்போது நீர்ப்பாசனத்திற்கு உட்படுமாயின், உரிமையாளர் நீர்ப்பாசனப் பகுதியைப் பொறுத்து நீர்ப்பாசனக் கட்டளை (அத்தியாயம் 453) ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் இணங்க வேண்டும்.
6. அரச முகவரின் எழுத்துப்பூர்வமான அனுமதியையும் உரிய அதிகார சபையிடம் உரிமத்தினையும் பெற்றாலன்றி, உரிமையாளர் இக்காணியில் அல்லது அதன் உள்ளிருக்கும் கனிமங்களைத் தோண்டவோ, தேடவோ, எடுக்கவோ, உபயோகப்படுத்தவோ, விற்கவோ இல்லையெனில் அப்புறப்படுத்தவோ கூடாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்துமூலமான முன் அனுமதியின்றி காணியினது அல்லது அதன் எந்தவொருப் பகுதியினதும் இயல்பினை மாற்றக்கூடாது.

ஏலவிலை கூறுவோர் 047-2229120 என்ற தொலைபேசி எண் ஊடாக அங்குனுகொலபெலஸ்ஸ கிளையின் முகாமையாளரைத் தொடர்புகொண்டு உரிமைப் பத்திரங்கள் மற்றும் மேற்கூறிய சொத்து/கள் தொடர்பான பிற ஆவணங்களை பரிசோதிக்கலாம்

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

**பெயர் : திரு.ஜி.ஜி.டீ. ரண்திமா**
**பதவிநிலை : முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**அங்குனுகொலபெலஸ்ஸ**
**திகதி:**

1975 BOC CALL CENTRE www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



# இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

**STHRD செயற்றிட்டம்**

**கல்வி அமைச்சு**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| | |
|---|---|
| கடன் இல. மற்றும் தலைப்பு | 3698/3699-SRI : விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித மூலவள அபிவிருத்தி செயற்றிட்டம் |
| ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | STHRD/SB/F04C: இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்திற்கு தொழில்நுட்பவியல் பீடத்திற்கான ICT கணனி ஆய்வுகூடத்திற்கான தளபாடப் பெறுகை |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | 2023 செப்டம்பர் 26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

**விலைமனுவை மூடும் திகதியில் மாற்றம் செய்தல்**

01. மேலேயுள்ள விலைமனுவின் அழைத்தலின் மூடும்/திறக்கும் திகதியானது பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.
    - ***விலைமனுக்கோரல் காலப்பகுதி*** - 2023 ஒகஸ்ட் 14 ஆம் திகதியிலிருந்து 2023 செப்டம்பர் 26 ஆம் திகதி வரையும்.
    - ***விலைமனுவின் மூடும்/ திறக்கும் திகதி*** - 2023 செப்டம்பர் 26 ஆம் திகதியன்று (மு.ப. 10 மணிக்கு)
    - ***விலைமனுவின் செல்லுபடியாகும் காலம்*** - 2024 சனவரி 24 ஆம் திகதியன்று வரையும்.
    - ***விலைமனுப்பிணை செல்லுபடியாகும் காலம்*** - 2024 பெப்ருவரி 26 ஆம் திகதியன்று வரையும்
02. விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்த விலைமனுதாரர்களுக்கு அவர்களின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு பிற்சேர்க்கையொன்று அனுப்பப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP Code: 70140**
**தொலைபேசி** : 0452280081 **மின்னஞ்சல்** : sposb-sthrd@mohe.gov.lk
**திகதி** : 05.09.2023



# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மாகாண கல்வித் திணைக்களம்

## வடமேல் மாகாணம்

## 2023ஆம் வருடத்தில் 6-9ஆம் வகுப்புகளுக்கான 2ஆம் தவணைக்கான பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் விடைத்தாள்களை அச்சிடுதல் மற்றும் விநியோகிப்பதற்கான பெறுகை

**NWP/EDU/PRO.ACC/07/3-9/2023**

2023ஆம் வருடத்தல் 6-9ஆம் வகுப்புகளுக்கான 2ஆம் தவணைக்கான பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் விடைத்தாள்களை அச்சிடுதல் மற்றும் விநியோகிப்பதற்கான பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வட மேல் மாகாண, மாகாண கல்விப் பணிப்பாளரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றார்.

2) பின்வரும் அட்டவணையில் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அட்டவணை இல. 01

| தரம் | ஒவ்வொரு மொழி மூலத்திற்குமான வினாத்தாள்களின் தொகுதிகளின் எண்ணிக்கை (அண்ணளவாக) | | | விலைமனுப் பிணையின் பெறுமதி (இலங்கை ரூபாவில்) | விநியோகிக்க வேண்டிய திகதி (பிரதேச கல்வி அலுவலகங்களுக்கு) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (இலங்கை ரூபாவில்) |
|---|---|---|---|---|---|---|
| | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | | | |
| 6 | 36326 | 6603 | 3564 | 330,000.00 | 25-10-2023 | 3,500.00 |
| 7 | 36326 | 6603 | 3564 | | | |
| 8 | 35183 | 6398 | 3030 | | | |
| 9 | 35352 | 5195 | 2840 | | | |

அனைத்து தரங்களுக்கும் மற்றும் அனைத்து மொழி மூலங்களுக்கும் விலைமனுக்கூறுகளை சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு தொகுதியும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படும்.

**விநியோக அமைவிடம்:** வடமேல் மாகாணத்திலுள்ள முப்பத்தொரு பிரதேச கல்வி அலுவலகங்களுக்கும் வழங்கல் மற்றும் விநியோகம் மேற்கொள்ளப்படல் வேண்டும். (குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்கள்)

3) விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறை மூலம் நடாத்தப்படும்.

4) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை குருநாகல், கண்டி வீதி, வடமேல் மாகாண, மாகாண கல்வித் திணைக்கள பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி / தொலைநகல் இல. 037-2222422) மற்றும் மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை)

5) தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு :

i. கீழே குறிப்பிட்டுள்ளவாறு கடந்த மூன்று வருடங்களில் வினாத்தாள்களை அச்சிடுவதிலிருந்து பெறப்பட்ட ஆகக் குறைந்த சராசரி நிதிப்புரள்வு இருத்தல் வேண்டும். (2020-2022)

| நிதிப்புரள்வு |
|---|
| 21.5 மில்லியன் ரூபா |

ii. வினாத்தாள்களை அச்சிடுவதில் ஆகக் குறைந்தது 3 வருட கடந்தகால அனுபவம்.

iii. அச்சிடுவதில் ஆகக் குறைந்தது 5 வருட கடந்தகால அனுபவம்.

iv. விலைமனுதாரர் தொழில்நுட்ப தகைமை மற்றும் தேர்ச்சி பெற்று பணியாட்களுள்ள அச்சகத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

6) 01ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை (வமேமா) மாகாண கல்விப் பணிப்பாளரிடம் செலுத்திய பின்னர், கீழேயுள்ள 8ஆம் பந்தியிலுள்ள முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து 2023 செப்டெம்பர் 07ஆம் திகதி முதல் 2023 ஒக்டோபர் 02ஆம் திகதி வரை வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப்பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.

கீழே 7ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள மாகாண கல்வித் திணைக்களத்தில் 2023 செப்டெம்பர் 18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

7) முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் உறையின் இடது பக்க மேல் மூலையில் "2023ஆம் வருடத்திற்கான 6-9ஆம் தர பரீட்சை வினாத்தாள்களை அச்சிட்டு மற்றும் ஒப்படைத்தலுக்கான விலைமனு" எனக் குறிப்பிட்டு விலைமனுக்கள் 2023 ஒக்டோபர் 03ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது குருநாகல், கண்டி வீதி, வடமேல் மாகாண, மாகாண கல்வித் திணைக்கள பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் "கேள்விப் பெட்டியில்" உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023 ஒக்டோபர் 03ஆம் மு.ப. 9.30 மணிக்கு குருநாகல், கண்டி வீதி, வடமேல் மாகாண, மாகாண கல்வித் திணைக்கள பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளை மூடியதும் விரைவாகவே திறக்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ளவாறு அனைத்து விலைமனுக்களும் "விலைமனுப்பிணையொன்றுடன்" இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இந்த பெறுகை தொடர்பான எல்லா மாற்றங்களும் **www.nwpedu.lk** எனும் எமது இணையதளத்தில் குறிப்பிடப்படும்.

8) மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு :

**J.A.M.P. ஜயதிலக்க,**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம் (வமேமா),**
**கண்டி வீதி, குருநாகல்.**

**தொலைபேசி** : 037-2222422/037-2220221
**தொலைநகல் இலக்கம்** : 037-2222422
**இணையதள முகவரி** : www.nwpedu.lk
**மின்னஞ்சல் முகவரி** : **provincialeducationnwp@yahoo.com**
திகதி : 2023 செப்டெம்பர் 07

## கமத்தொழில் திணைக்களம்

தோட்டக்கலை பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்

# விலைமனுக்கள் கோரல்

**ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவு செய்தல் - மண் மற்றும் தாவர போஷணை பிரிவு / ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள் மற்றும் வேறு இரசாயனப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் - மத்திய பகுப்பாய்வு ஆய்வுகூடம்**

**தோட்டக்கலை பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்**

### Purchasing of Drying Oven, Ultra-Pure Water Purification System, Fume Hood - Soil & Plant Nutrition Division
### Purchasing of Chemicals, Standards & Other Laboratory Items - Central Analytical Laboratory

தோட்டக்கலை பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் இந்த நிறுவனத்தின் மண் மற்றும் தாவர போஷணை பிரிவிற்கு ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் மத்திய பகுப்பாய்வு ஆய்வுகூடத்திற்கு இரசாயனப் பொருட்கள், ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் கீழ் பின்வரும் அட்டவணையின் பிரகாரம் வெவ்வேறான வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. பெறுகை வழிகாட்டி கோவையின் 13வது அத்தியாயத்தில் 8:1 இல் காட்டப்பட்டுள்ள வகையில் குறித்த விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவாளரிடம் பதிவு செய்துகொண்டிருத்தல் வேண்டும்.

அட்டவணை

| ஒப்பந்த இலக்கம் | விபரங்கள் | வங்கிப் பிணை முறி (ரூபா) | ரொக்கப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| HORDI/GI/5/192-2023 | Purchasing of Drying Oven, Ultra-Pure Water Purification System, Fume Hood - Soil & Plant Nutrition Division | 100,050.00 | 50,025.00 |
| HORDI/GI/5/217-2023 | Purchasing of Chemicals ,Standards & Other Laboratory Items - Central Analytical Laboratory | 33,994.00 | 16,997.00 |

மேற்கூறப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தத்திற்காகவும் 3000.00 வீதம் மீளளிக்கப்படாத கட்டணத்தை விவசாயத் திணைக்களத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை த.பெ. 11, கன்னொருவ, பேராதனை எனும் முகவரியில் அமைந்துள்ள தோட்டக்கலை பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்ததன் பின் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் ஆவணங்களை 2023 செப்டெம்பர் 07ஆம் திகதி முதல் செப்டெம்பர் 26ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் இதற்குரித்தான மேலதிக விபரங்கள் விலைக்கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதுடன் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேற்கூறப்பட்ட இடத்தில் அந்த ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். இரண்டு ஒப்பந்தத்திற்கும் உரித்தான சகல விலைமனுக்களையும் வெவ்வேறாக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறையினுள் இட்டு குறித்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரலுக்குரித்தான பெயரை Purchasing of Drying Oven, Ultra-Pure Water Purification System, Fume Hood - Soil & Plant Nutrition Division என அல்லது Purchasing of Chemicals, Standards & Other Laboratory Items - Central Analytical Laboratory எனக் குறிப்பிட்டு தலைவர், பெறுகைக் குழு, தோட்டக்கலை பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம், த.பெ. 11, கன்னொருவ, பேராதனை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் மேற்கூறப்பட்ட முகவரியில் அமைந்துள்ள பதிவேட்டில் பதிவு செய்து விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்வது 2023 செப்டெம்பர் 26ஆம் திகதி பி.ப. 4.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் 2023 செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் விவசாயப் பணிப்பாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட வங்கிப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். வங்கிப் பிணை முறியானது 2023-11-31ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.

எந்தவொரு கொள்வனவையும் நிராகரிக்கும் உரிமை அல்லது சகல விலைமனுக்களையும் நிராகரிக்கும் உரிமையை தோட்டக்கலை பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தோட்டக்கலை பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்,**
**கன்னொருவ, பேராதனை.**
2023-09-07.
**தொ.பே. 081-2388011/12**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/23/PT/15/006 | MS Angles and MS Round Bars | 80,000.00 | 1,000.00 | 2023.10.02 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/PT/03/031 | 08 Nos – Weld Heat Treatment Blankets | 16,000.00 | 1,000.00 | 2023.10.02 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/PT/14/052 | 24 Nos. Main Hoist and Anti-Sway Sheave for 41T SHI RTG Cranes at ECT | 32,000.00 | 1,000.00 | 2023.10.02 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/14/051 | 12960 KGS Grease EP – 02 | 393,000.00 | 3,500.00 | 2023.10.03 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/02/056 | 1920 Nos. Motor Tyre 11R 22.5 16 PR Tubeless | 1,401,000.00 | 20,000.00 | 2023.10.03 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/04/061 | Spare Parts for the Terberg Terminal Tractors | 40,000.00 | 1,000.00 | 2023.10.03 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/02/057 | 1560 Nos. Motor Tubes 1000 X 20 LN | 80,000.00 | 1,000.00 | 2023.10.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/PT/08/058 | 100 Nos. Led Flood Lamp for RTG Crane | 150,000.00 | 3,500.00 | 2023.10.04 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் (பிசிஏ-03 படிவம்)
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. **2023 செப்டம்பர் 08 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள** மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள் : 2381652, 2470443**

சுற்றுலாத்துறை மற்றும் காணிகள் அமைச்சு

## இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA)

# விலைமனு அறிவித்தல் – தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

1. கீழே விபரிக்கப்பட்டுள்ள பெறுகைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| இல. | தலைப்பு மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்) | விலைமனுப் பிணை தேவைப்பாடுகள் (ரூபாவில்) | விலைமனு முன்னோடிக் கூட்டம் திகதி மற்றும் நேரம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| | சேவை | | | | |
| 1. | இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் தொகை மற்றும் வெளிச்செல்லும் சுற்றுலாப் பயணிகளின் ஆய்விற்கான தரவை சேகரிப்பதற்காக சேவை வழங்குநனொருவரை வாடகைக்கமர்த்துதல்/ ஒப்பந்த இல.: SLTDA/R&IR/S/NCB/Data Collection – Departing /2023/13 | 5,000.00 | 180,000.00 | 2023 செப்டெம்பர் 14 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு | 2023 செப்டெம்பர் 27 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு |

2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தகைமை தகவுத்திறனின் பிரகாரம் உரித்தான துறையில் வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. கொழும்பு-03, காலி வீதி, 80 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் 1 ஆம் மாடியிலுள்ள தலைவரின் சபை அறையில் **2023 செப்டெம்பர் 14 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு** விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 0112426800(நீடிப்பு: 305,277) என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் **amilam@srilanka.travel / sltdaproc@srilanka.travel** என்ற இலத்திரனியல் தபால் முகவரியூடாகவும் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் வழங்கலுக்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
5. 2023 செப்டெம்பர் 06 ஆம் திகதியிலிருந்து 2023 செப்டெம்பர் 26 ஆம் திகதியன்று வரையும் **sltdaproc@srilanka.travel / amilam@srilanka.travel** என்ற மின்னஞ்சல் முகவரியூடாக மீளளிக்கப்படாத பணம் செலுத்திய துண்டுடன் விண்ணப்பதாரியின் தலைப்புக் கடிதத்தில் மின்னஞ்சல் வழியாக சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான கோரிக்கை மூலமான ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று வழங்கப்படும்.
6. மீளளிக்கப்படாத கட்டணத்தை இலங்கை வங்கியின், கோர்பரேட் கிளையின், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை கணக்கு இலக்கம் 7119413 இற்கு வைப்புச் செய்தல் வேண்டும். (குறிப்பு: **"மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்"** என வைப்பு ரசீதில் வைப்பின் நோக்கம் மற்றும் வைப்பாளர்களின் விபரத்தில் நிரப்பவும். விலைமனுவுடன் மேற்கூறிய அசல் ரசீதை சமர்ப்பிப்பது அவசியமாகும். **கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் என்பதோடு ஏனைய கொடுப்பனவு முறைகள் அனுமதிக்கப்படமாட்டாது.)**
7. இரு பிரதிகளான விலைமனுக்கள் விலைமனு ஏற்கப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பெறுகை பிரிவு (4ஆவது மாடி), இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, இல. 80, மற்றும் காலி வீதி, கொழும்பு 03** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது கைகளால் சேர்ப்பதன் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகையின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கத்தை குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
8. பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் **SLTDA, 4 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில்** அனைத்து விலைமனுக்களும் திறக்கப்படும். **தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது திருப்பி தரப்படும்.**
9. அனைத்து விலைமனுக்களும் இலங்கை அரசாங்கத்தின் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டம் மற்றும் அடுத்து வந்த வர்த்தமானி அறிவித்தல்களுக்கு (PCA-3 படிவம்) அமைவாக பொது ஒப்பந்தங்களின் பதிவாளர் மூலம் வழங்கப்பட்ட விலைமனுதாரரின் பதிவுச் சான்றிதழ் ஒன்றை கொண்டதாக இருத்தல் வேண்டும்.
10. ஒவ்வொரு விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு **விலைமனு செல்லுபடித் திகதிக்கு 28 நாட்களுக்கு அப்பால்** வரை செல்லுபடியானதாக இலங்கை மத்திய வங்கியின் கீழ் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து வழங்கப்பட்டதாக விலைமனுப் பிணை இருத்தல் வேண்டும்.
11. விலைமனு ஆவணத்தில் நிருணயிக்கப்பட்ட திகதிக்கு அமைய விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
12. சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இந்த அமைச்சின் கீழுள்ள வேறு எந்த நிறுவனங்களின் ஊழியருடன் நெருக்கமான குடும்ப உறவு கொண்ட ஊழியர் அல்லது நிறுவனம் மற்றும்/ அல்லது தனிநபர் ஒருவர் ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதியை பெற்றுக் கொள்ள மாட்டார்.
13. திணைக்கள பெறுகைக் குழுவின் முடிவே இறுதி முடிவாகும். மேலும், எந்த ஒரு காரணமும் கூறாது எந்த ஒரு விலைமனுவையும் ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை SLTDA இற்கு சொந்தமானது என்பதுடன் விலைமனுக்களை தயாரித்தல் அல்லது ஒப்படைத்தலுடன் வளமுள்ள விலைமனுதாரர்களுக்கு ஏற்படுகின்ற எந்தவொரு ஆகுசெலவு அல்லது எந்தவொரு இழப்பிற்காகவும் SLTDA பொறுப்பேற்காது.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை.**

வரைவு

**2006 இல 5 நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் சொத்துக்கள் செயற்பாடற்றதாக்கும் அறிவித்தல்**

இல 67/4, மஹவத்த இஹல, குண்டசாலை, என்ற முகவரியில் வசிக்கும் கம்பலகே கயானி டில்ருக்ஷி ஜயதிஸ்ஸ என்ற பெயரில் உள்ள கீழேயுள்ள சொத்துக்களை மேற்படி சட்டத்தின் 35ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட விரோ செயற்பாடொன்றின் மூலம் அல்லது ஏதேனும் சட்டவிரோத செயற்பாடொன்றின் மூலமான பணத்தில ஈட்டிக்கொண்டதாக தெரியவந்துள்ளதால் மேற்படி சட்டத்தின் 7 மற்றும் 8ஆம் பிரிவின் பிரகாரம் 2023.08.29 முதல் கண்டி உயர் நீதி மன்ற SPL/01/2023 இன் கீழ் செயற்பாடற்றதாக்கும் கட்டளையை உறுதி செய்து நீடிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு ரம்யா கங்காணம்கே இனால் எழுதி உறுதி செய்யப்பட்ட 2008.03.23ம் திகதிய இல. 3881 எனும் எழுத்துமூல உடன்பாட்டு ஒப்பந்தம் மற்றும் இல. 3882 என்ற விசேட அட்டோர்ணி தத்துவத்தில் குறிப்பிடப்படும் இல. 689 மஹவத்த வடக்கு கிராம அதிகாரி பிரிவில் உடகம்பஹா கோரளையின் மஹவத்த மற்றும் தும்பராவ கிராமத்தில் அமைந்துள்ள பிரிவு 2776 எனும் வரைபடத்தின் பிரகாரம் இல 50 என்ற காணியின் பிரதான வீதிக்கு முகப்பாக வனப்பாதுகாப்பு பிரதேசத்துடன் பிரிக்காத பதின்மூன்று பேர்ச் (ஏ:00 ரூ:00 பேர்ச்:13) அளவிலான (முன்னைய பதிவு- ஈ 41/191/256) காணி மற்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று மாடி வீடு

மேற்படி காணி மற்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்றுமாடி வீடு சம்பந்தமாக தமது உரித்துரிமையை நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்கு உண்மையான மூன்றாம் தரப்பினர்களுக்கு வசதிகளை வழங்கும் முகமாக இத்தால் பிரசுரிக்கிறேன்.

**நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்**


## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப. 9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 02/06/2023 | 02/07/2023 | 22, 25, 27 /09/2023 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஒரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388



Marriage Proposals in the Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தேசிய லொத்தர் சபை

### நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

**20000 எண்ணிக்கையான விற்பனை உதவியாளர் மேம்பாட்டு தொப்பிகள், 5400 எண்ணிக்கையான வாடிக்கையாளர் மேம்பாட்டு தொப்பிகள், 65000 எண்ணிக்கையான போல்பொயின்ட் பேனைகள், 3125, ஆடவர் குடைகள் 500 எண்ணிக்கையான மழை அங்கிகள், 100 எண்ணிக்கையான சக்கர நாற்காலிகள், 12000 கீ டெக்குகள் என்பவற்றை தேசிய லொத்தர் சபைக்கு வழங்குவதற்கான பெறுகை**

தேசிய லொத்தர் சபைக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தேசிய லொத்தர் சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது கோருகின்றார்.

02.

| உருப்படி | விலைமனு இலக்கம் | எண்ணிக்கை | விலைமனுப் பிணை (ரூபாவில்) | ஆவண கட்டணங்கள் (ரூபாவில்). (பெ.சே. வரியுடன் மீளளிக்கப் படாதது) |
|---|---|---|---|---|
| விற்பனை உதவியாளர் மேம்பாட்டு தொப்பிகள் | NLB/PRC/08/Sales cap/20230052 | 20,000 | 100,000 | 1000.00 |
| வாடிக்கையாளர் மேம்பாட்டு தொப்பிகள் | NLB/PRC/08/Cus. cap/20230051 | 5,400 | 24,300 | 1000.00 |
| போல் பொயின்ட் பேனைகள் | NLB/PRC/15/Ballpoint pen/20230061 | 65,000 | 26,000 | 1000.00 |
| ஆடவர் குடைகள் | NLB/PRC/05/UMB/20230098 | 3,125 | 41,000 | 1000.00 |
| மழை அங்கிகள் | NLB/PRC/17/Sales RC/20230053 | 500 | 62,500 | 1000.00 |
| சக்கர நாற்காலிகள் | NLB/PRC/07/Wheel.chairs/20230063 | 100 | 67,500 | 1000.00 |
| கீ டெக்குகள் | NLB/PRC/18/Key Tags/20230073 | 12,000 | 54,000 | 1000.00 |

03. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

04. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, 32ஆம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபை, 1ஆம் மாடியின் பெறுகை பிரிவு, உதவிப் பொது முகாமையாளர் (பெறுகை) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-4607020/01144607021) மற்றும் பின்வரும் முகவரியில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் கீழே நிர்ணயிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. மேற்குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணங்களை செலுத்திய பின்னர், 2023.09.07 ஆம் திகதியிலிருந்து 2023.09.27 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

06. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023.10.02 ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னர் ஒன்றில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர், கொழும்பு-01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, 32ஆம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபை, 6ஆம் மாடியில் சமுகமளித்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் 02ஆம் இலக்க அட்டவணையில் தரப்பட்டுள்ள பெறுமதிக்கு இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் மட்டும் வழங்கப்பட்ட தரப்பட்டுள்ள வடிவத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள கொழும்பு-01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, 32ஆம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபை தலைவரை பயனாளராக குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

07. வெற்றிகரமான விலைமனுதாரர் ஒப்பந்தப் பெறுமதியின் 10% செயலாற்றுகை பிணையாக வழங்குதல் வேண்டும்.

08. ஆவணங்களை முத்திரைக் குறியிடப்பட்ட உறையொன்றில் உள்ளிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் (உருப்படியின் பெயர்) ............................ வழங்குவதற்கான விலைக்கோரல் (விலைமனு இலக்கம்) என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.

09. 100 எண்ணிக்கையான சக்கர நாற்காலிகளை (வலதுகுறைந்தோருக்கான முச்சக்கர வண்டி) கொள்வனவு செய்வதற்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2023.09.20 மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, 32ஆம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபையில் இடம்பெறும்.

10. விலைமனுதாரர்களால் விலைமனுக்களைத் தயாரித்தல் அல்லது விலைமனுக்களை ஒப்படைத்தல் தொடர்பில் ஏற்பட்ட எந்தவிதமான கிரயம் அல்லது செலவுகளுக்கு தேசிய லொத்தர் சபை பொறுப்பு கூற மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய லொத்தர் சபை,**
**இல.: 32, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை,**
**கொழும்பு-01.**

# ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

Uva Wellassa University

## மாணவர் அனுமதிகள்

### கல்வியாண்டு - 2022/2023

## உளச்சார்புப் பரீட்சை

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களின் பட்டப்பயில் நெறிகளுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி 2022/ 2023 கையேட்டின் பிரிவு 1.2 இன் படி ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு 2022/ 2023 கல்வியாண்டுக்கான அனுமதியைப் பெற ஆகக் குறைந்த தகமைகள் கொண்டுள்ளவர்களிடமிருந்து மேற்படி கல்வியாண்டிற்கான பின்வரும் பட்டப்பயில் நெறிகளுக்கு உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- கணினி விஞ்ஞானமும் தொழிநுட்பமும்
- கைத்தொழில் தகவல் தொழிநுட்பம்
- முயற்சியாண்மையும் முகாமைத்துவமும்
- விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம்

விண்ணப்பித்த கற்கை நெறிக்கேற்ப உளச்சார்பினை பரீட்சிப்பதற்காக இப்பரீட்சை ஆங்கில மொழி மூலம் நடைபெறும். ஒவ்வொரு கற்கை நெறிக்குமான குறைந்தபட்ச தகமைகள் 2022/2023 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக பட்டப்பயில் நெறிகளுக்காக அனுமதிக் கையேட்டின் (க.பொ.த. (உ/த) 2022 பரீட்சையை அடிப்படையாக கொண்டது) 2.2.8.14, 2.2.8.15, 2.2.8.16 மற்றும் 2.2.8.18 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் 2023 செப்டம்பர் 20 அன்று அல்லது அதற்கு முன்னர் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் (https://www.aptitude.uwu.ac.lk/) இணையவழி (online) ஊடாக தங்களது விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இணையவழி விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களை நீங்கள் பதிவேற்ற வேண்டியது கட்டாயமாகும்:

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இலங்கை வங்கி பதுளை கிளையின் கணக்கிலக்கம்: 78166821 இற்கு இலங்கை வங்கியின் ஏதாவதொரு கிளையின் ஒரு பரீட்சைக்கு ரூபா. 1000/- வீதப்படி வைப்பு செய்யப்பட்ட பரீட்சைக் கட்டணத்தின் பற்றுச் சீட்டு. (தயவுசெய்து பற்றுச் சீட்டின் ஒரு பிரதியை உங்களுடன் வைத்துக் கொள்ளவும்). இக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது. [உ+ம்: நீங்கள் இரண்டு பாடங்களுக்கு பரீட்சை எழுத விரும்பினால், கட்டணம் ரூபா 2,000/- (2 x 1,000/-) செலுத்த வேண்டும்]

உளச்சார்புப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் மற்றும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தகுதியானவர்களுக்கு மின்னணு முறை மூலம் அனுப்பப்படும்.

எல்லா கற்கை நெறிகளுக்குமான பரீட்சை விண்ணப்பங்களையும் அதனுடன் தொடர்புடைய பரீட்சைக் கட்டணத்துடன் ஒரே விண்ணப்பப்படிவத்தில் அனுப்பவும்.

செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேண்டப்பட்ட பரீட்சைத் தாளின் எண்ணிக்கையை விட குறைவாக இருப்பின் பரீட்சாத்தியின் முன்னுரிமை ஒழுங்கிற்கு அமையவே கவனத்தில் கொள்ளப்படும்.

உளச்சார்பு பரீட்சைக்கான பரீட்சை நிலையங்களும் அதற்காக ஒதுக்கப்பட்ட இலக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன. உங்களுக்கு மிகவும் வசதியான பரீட்சை நிலையங்களைத் தேர்ந்தெடுக்கவும்.

| பரீட்சை நிலையம் | பரீட்சை நிலைய இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| யாழ்ப்பாணம் | 02 |
| கண்டி | 03 |
| மாத்தறை | 04 |
| பதுளை | 05 |
| அநுராதபுரம் | 06 |
| மட்டக்களப்பு | 07 |
| குருணாகலை | 08 |

விண்ணப்பதாரிகள் தெரிவு செய்த பரீட்சை நிலையங்களை சில நேரங்களில் ஒதுக்க முடியாமல் போனால், அதற்கு பதிலாக வேறு பரீட்சை நிலையங்கள் ஒதுக்கப்படும்.

**பதிவாளர்**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**
**பஸ்ஸறை வீதி**
**பதுளை**

**தொலைபேசி : 055-2226622/ 055-3561752**
**தொலைநகல் : 055-2226633**
**வெப்தளம் : www.uwu.ac.lk**

**06 செப்டம்பர் 2023**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களம்

### பின்னவல யானைகள் சரணாலய அலுவலகக் கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள்

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள ‘‘பின்னவல யானைகள் சரணாலய அலுவலகக் கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகளுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின், திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார் என்பதுடன் இதன் மதிப்பீட்டுக் கிரயம் 7.3 மில்லியன் ரூபாவாகும். (வெட் இன்றி)

இந்த வேலைத்தளம் பின்னவல, பின்னவல யானைகள் சரணாலயத்தில் அமைந்துள்ளது. நிறைவு செய்வதற்கான காலம் 60 நாட்காட்டி நாட்களாகும்.

1. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் மூலம் மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்தத்தைக் கையளிக்கத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்பட்டிருத்தல் கூடாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டிட நிர்மாண வேலைகளுக்கு C8, C7 மற்றும் C6 தரத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை தெஹிவளை, அனகாரிக தர்மபால மாவத்தை, தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2717913, தொலைநகல்: 011-2734542) மற்றும் 2023-09-07ஆம் திகதி முதல் 2023-09-27ஆம் திகதி வரையான சாதாரண வேலை நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரம் இலங்கை ரூபாவை (2,000.00 ரூபா) 15% வெட் வரி சகிதம் செலுத்தியதன் பின் 2023-09-07ஆம் திகதி முதல் 2023-09-26ஆம் திகதி வரையான சாதாரண வேலை நேரங்களில் மேற்கூறப்பட்ட முகவரியிலுள்ள தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
5. விலைமனுக்கள் முடிவுறுத்தல் நாள் முதல் 77 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
6. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள ஏதாவதொரு வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 74,000.00 ரூபா தொகைக்கு வங்கி உத்தரவாதமொன்றை அல்லது தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் சிறாப்பருக்கு 37,000.00 ரூபா தொகையை செலுத்திப் பெற்றுக்கொண்ட பிணை முறியை விலைமனுப் பிணை முறியாக இணைத்தல் வேண்டும் என்பதுடன் அது 2023-12-13ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். (விலைமனுக்கள் முடிவுறுத்தல் நாள் முதல் 77 நாட்கள்)
7. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை 2023-09-27ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தெஹிவளை, அனகாரிக தர்மபால மாவத்தை, தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பணிப்பாளர் நாயகம், தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களம், அனகாரிக தர்மபால மாவத்தை, தெஹிவளை எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தில் பின் விலைமனுக்கள் திறக்கப்படும்.
8. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-09-18ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு பின்னவல யானைகள் சரணாலய பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**மிருக்காட்சிச்சாலைத் திணைக்களம்,**
**அனகாரிக தர்மபால மாவத்தை,**
**தெஹிவளை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் - செயற்றிட்ட அடையாளம் : P 163305

## கிழக்கு மாகாணம், திருகோணமலை

1. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு செலுத்துவதற்குப் பயன்படுத்த விரும்புகிறது.
2. மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு (PPPC) தலைவர் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் ஊடாக இடம்பெறும்.
4. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் IIIஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு தரவுத் தாளில் வழங்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் திருகோணமலை உள்ளூராட்சி நிறுவனத்தின் உதவி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் திருகோணமலை உள்ளூராட்சி நிறுவனத்தின் உதவி ஆணையாளருக்கு எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2023-09-07ஆம் திகதி முதல் 2023-09-26ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. 2023-09-27ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்பதாக உள்ளூராட்சி நிறுவனத்தின் உதவி ஆணையாளர், திருகோணமலை உள்ளூராட்சி நிறுவனத்தின் உதவி ஆணையாளர் அலுவலகம், திருகோணமலை எனும் முகவரிக்கு 2023-09-27ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்களைத் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக ஏற்படும் ஏதேனும் கிரயம் அல்லது செலவுகளுக்கு கொள்வனவாளர் பொறுப்பேற்கமாட்டார்.
9. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்று விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | வேலை விபரங்கள் மற்றும் ஒப்பந்த இலக்கம் | பெறுகை நிறுவத்தின் பெயர் | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொ.பே. இலக்கம் | விலை மனு ஆவணத்தின் விலை (ரூபா) | தேவையான விலைமனுப் பிணை முறி | | விலைமனு செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | விலை மனுப் பிணை முறி தொகை (ரூபா) | செல்லுபடிக் காலம் | |
| நகரமும் பட்டிணமும் பிரதேச சபை, உப்புவெளி | உப்புவெளி நகரமும் பட்டிணமும் பிரதேச சபைக்கு இணைந்த நெல் அறுவடை இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தல் EP-TRI-LDSP/PT2- Town & Gravets PS -2023-02 | மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு (PPPC) | உள்ளூராட்சி நிறுவனத்தின் உதவி ஆணையாளர், திருகோணமலை 026-2222427 | 4,000.00 | 120,000.00 | 2024-01-10 வரை | 2023-12-12 வரை |
| வெருகல் பிரதேச சபை, வெருகல் | வெருகல் பிரதேச சபைக்கு இணைந்த நெல் அறுவடை இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தல் EP-TRI-LDSP/PT2- Verugal PS - 2023-01 | மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு (PPPC) | உள்ளூராட்சி நிறுவனத்தின் உதவி ஆணையாளர், திருகோணமலை 026-2222427 | 4,000.00 | 120,000.00 | 2024-01-10 வரை | 2023-12-12 வரை |
| தம்பலகாமம் பிரதேச சபை, தம்பலகாமம் | தம்பலகாமம் பிரதேச சபைக்கு யோகட் மற்றும் தயிர் தயாரிக்கும் பொறித்தொகுதியை வழங்குதல் மற்றும் நிறுவுதல் 2023-1-EP-Tri-LDSP-PT2- Thampalagamam PS | மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு (PPPC) | உள்ளூராட்சி நிறுவனத்தின் உதவி ஆணையாளர், திருகோணமலை 026-2222427 | 4,000.00 | 200,000.00 | 2024-01-10 வரை | 2023-12-12 வரை |

**உள்ளூராட்சி நிறுவனத்தின் உதவி ஆணையாளர்,**
**உள்ளூராட்சி நிறுவனத்தின் உதவி ஆணையாளர் அலுவலகம்,**
**திருகோணமலை.**
2023-09-07.

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

### மக்கள் வங்கி பிராந்திய தலைமைக் காரியாலயம், அநுராதபுரம்

மக்கள் வங்கி அநுராதபுர பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை மையங்களில் 30.06.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ள திகதி வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைகள் பின்வரும் திகதிகள் மற்றும் இடங்களில் பொது ஏலத்தில் விற்கப்படும்.

**ஒவ்வொரு நாளும் ஏல விற்பனையானது காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.**

| | | |
|---|---|---|
| ஏல விற்பனை நிகழும் திகதி | 2023.10.07 | 2023.10.08 |
| இந்த திகதி வரை மீட்கப்படாத/ புதுப்பிக்கப்படாத நகைகள் | 2023.10.06 | 2023.10.06 |
| ஏல விற்பனை நிகழும் இடம் | அநுராதபுரம் | மதவாச்சி |
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | அநுராதபுரம், கல்னேவ, எப்பாவல, நொச்சியாகம, அநு/நுவரவெவ, மீகலேவா, கல்கிரியாகம, தலாவ | மதவாச்சி, கெக்கிராவ பதவியா கெபிதிகொல்லாவ, கஹடகஸ்திகிலிய, கலென் பிடுனுவெல, ஹொரொப் பொத்தான, தம்புத்தேகம |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | அநுராதபுரம், ரபீவ, நச்சதுவ, வில்லாச்சிய, திறப்பனே, மிஹிந்தல, சாலியவெவ, புல்னேவ | கணேவல்பொல, மரதன்கடவல, தம்சோபுர, ரஜின ஹந்திய, ராஜங்கனய பதவி - ஸ்ரீபுர, பதவி பராக்கிரமபுர |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**அநுராதபுரம்**
**தொலைபேசி இல. 025-2223035 / 025-2234870**

PEOPLE'S BANK
Pride of the Nation

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

சுகாதார அமைச்சு

### சிறிமாவோ பண்டாரநாயக்கே சிறுவர் விஷேடத்துவ வைத்தியசாலை, பேராதனை மருத்துவ உபகரணத்தின் வழங்கல்

பின்வரும் உபகரணத்தின் வழங்கலுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. 2023 செப்டம்பர் 27 ஆம் திகதியன்று பிப. 1.30 மணி வரையும் பேராதனை, சிறிமாவோ பண்டாரநாயக்கே விஷேடத்துவ வைத்தியசாலை பெறுகைக் குழுத் தலைவரினால் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

| No. | Name of the Item | No. to be purchased | Non-refundable Fee – Rs. |
|---|---|---|---|
| 01. | Pediatric Specific Anesthesia Machine | 08 | Rs.2,000.00 |

விலைமனு ஆவணத்தை பின்வருமாறு பெற்றுக் கொள்ளலாம்.


அ) 2023 செப்டம்பர் 07 ஆம் திகதியிலிருந்து 2023 செப்டம்பர் 26 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் பேராதனை, சிறிமாவோ பண்டாரநாயக்கே சிறுவர் விஷேடத்துவ வைத்தியசாலை கணக்காளரிடமிருந்து.

ஆ) பேராதனை, சிறிமாவோ பண்டாரநாயக்கே சிறுவர் விஷேடத்துவ வைத்தியசாலை பெறுகைக் குழுத் தலைவருக்கு முகவரியிடப்பட்ட விண்ணப்பமொன்று.

இ) தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரலின் கீழான விலைமனுக்களுக்கான அழைத்தல்.

**தெளிவுறுத்தல்களை 081-2389119 என்ற இலக்கத்தினூடாக பெற்றுக் கொள்ளலாம்.**

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சிறிமாவோ பண்டாரநாயக்கே சிறுவர் விஷேடத்துவ வைத்தியசாலை,**
**பேராதனை.**
**2023.09.04.**




## பெறுகை அறிவித்தல்

### 2024ஆம் ஆண்டிற்கு குளியாப்பிட்டி நகர சபைக்கு சொந்தமான ஆதனங்கள் மற்றும் விளைச்சல்களைக் குத்தகைக்கு விடுதல்

01. குளியாப்பிட்டி நகர சபைக்கு உரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள் மற்றும் விளைச்சல்களை 2024.01.01 முதல் 2024.12.31 வரையான காலத்திற்குக் குத்தகைக்கு விடுவதற்காக கீழ்க்காணப்படும் நிபந்தனைகளின் பிரகாரம் கேள்விகள் கோரப்படுகின்றன.

   i. கேள்விப்படிவங்களை வழங்கல் - 2023.09.07 முதல் 2023.09.25 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 03.00 வரை

   ii. கட்டணம் - அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்விப் பிணையம்.

   iii. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் - 2023.09.07 முதல் 2023.09.25 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 03.00 வரை மற்றும் 2023.09.26 மு.ப. 8.30 முதல் மு.ப. 10.00 வரை

   iv. கேள்விகளைத் திறத்தல் - 2023.09.26 அன்று மு.ப. 10.30 (விண்ணப்பதாரர் அல்லது அவரின் எழுத்துருவ அதிகாரமளிக்கப்பெற்ற நபரொருவர் அவ்வேளையில் சமுகமளித்திருக்கலாம்.)

   v. சமர்ப்பிக்கப்பட வேண்டிய விலைமனுத் தொகை ஆகக்குறைந்த விலைமனுத் தொகை அல்லது அதற்கு மேற்பட்ட விலைமனுத் தொகையாக இருத்தல் வேண்டுமென்பதுடன், ஆகக்குறைந்த விலைமனுத் தொகைக்கும் குறைவான கேள்விகள் எந்தவித அறிவித்தல்களுமின்றி நிராகரிக்கப்படும்.

   vi. கேள்விகள் தொடர்பான விபரங்கள் - அலுவலக நேரங்களில் வருமான மேம்பாட்டு அலுவலரிடம் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல. 037-4947798)

02. கேள்விகள் தொடர்பான இறுதித்தீர்மானம் குளியாப்பிட்டி நகர சபையின் பொதுச் சபைக்கு உரித்தாகும்.

**எச்.ஏ.எஸ்.டி. செனரத்,**
**செயலாளர்,**
**நகர சபை,**
**குளியாப்பிட்டி**
**2023.09.05**

**அலுவலகம் - 0372281275/ 037 4947798**
**தொலைநகல் - 0372281114**
**மின்னஞ்சல் - kuliyauc@gmail.com**
**இணையத்தளம் - www.kuliyapitiya.uc.gov.lk**

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | ஆதனங்கள் மற்றும் விளைச்சல்களின் விபரம் | மீளளிக்கப் படாத விண்ணப்பப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்விப் பிணையம் | ஆகக் குறைந்த கேள்வி |
|---|---|---|---|---|
| 01 | மீகஹகொட்டுவ பொதுச்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 300.00 | 11,650.00 | 152,880.00 |
| 02 | மீகஹகொட்டுவ பொதுச்சந்தை ஆட்டு/கோழி இறைச்சிக்கடை | 300.00 | 15,020.00 | 197,085.00 |
| 03 | லபுயாய பொதுச்சந்தை ஆட்டு/கோழி இறைச்சிக்கடை | 200.00 | 26,355.00 | 345,900.00 |
| 04 | சொஹொனகடே சந்தி (குருந்துகஸ்ஹேன) பன்றி இறைச்சிக்கடை | 200.00 | 7,985.00 | 83,835.00 |
| 05 | வார சந்தை பன்றி இறைச்சிக்கடை | 500.00 | 9,570.00 | 100,475.00 |
| 06 | வார சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 10,960.00 | 143,825.00 |
| 07 | வார சந்தை கோழி இறைச்சிக் கடை | 500.00 | 5,220.00 | 54,795.00 |
| 08 | வார சந்தை சிற்றுண்டிச்சாலை | 200.00 | 22,585.00 | 237,135.00 |
| 09 | வாரசந்தை கழிவறை | 200.00 | 5,000.00 | 52,500.00 |
| 10 | கச்சேரிக்கண்மையிலுள்ள மீன் தட்டு | 200.00 | 15,125.00 | 198,480.00 |
| 11 | லபுயாய பொதுச் சந்தைக்கு அண்மையில் உள்ள மீன் தட்டு | 300.00 | 9,715.00 | 101,995.00 |
| 12 | பஸ்தரிப்பு நிலையப் பொதுக்கழிவறை | 300.00 | 63,105.00 | 1,325,135.00 |
| 13 | பஸ் தரிப்பு நிலைய சிற்றுண்டிச்சாலை | 500.00 | 39,485.00 | 829,100.00 |
| 14 | வாரசந்தைக்கண்மையில் உள்ள மீன் தட்டு (கொடபிட்டிய காணிக்குத் திரும்பும் சந்தி) | 200.00 | 17,405.00 | 228,420.00 |
| 15 | வாரசந்தை வாகனத் தரிப்பிடம் | 500.00 | 36,645.00 | 769,500.00 |
| 16 | சொஹொன கடே சந்திக்கண்மையில் உள்ள (குருந்துகஸ்ஹேன சந்தி) மீன் கடை | 200.00 | 10,120.00 | 132,825.00 |
| 17 | மீகஹகொட்டுவ சந்திக் கண்மையிலுள்ள மீன் கடை | 200.00 | 10,120.00 | 132,825.00 |
| 18 | வாரசந்தை முன்னாலுள்ள கோழி இறைச்சிக் கடை | 200.00 | 10,120.00 | 132,825.00 |
| 19 | லபுயாய சுபாரதீபுரம் தென்னைகள் - 08 | 200.00 | 60.00 | 600.00 |
| 20 | நாரத மாவத்தை தென்னைகள் - 06 | 200.00 | 220.00 | 2,500.00 |
| 21 | குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலை முன்னால் வாகன நிறுத்துமிடம் | 500.00 | 45000.00 | 900,000.00 |
| 22 | தண்டகமுவ மோலவத்த தென்னைகள் - 25 | 200.00 | 400.00 | 4,000.00 |
| 23 | மஹசென் மாவத்தை இரண்டாம் ஒழுங்கை தென்னைகள் - 5 | 200.00 | 250.00 | 2,500.00 |
| 24 | நாரத மாவத்தை (சனசமூக நிலையத்திற்கண்மையில்) தென்னைகள் - 5 | 200.00 | 170.00 | 1,900.00 |
| 25 | ஆனந்தகிரி கார்டன் தென்னைகள்-13 | 200.00 | 160.00 | 2,000.00 |
| 26 | ஆனந்தகிரி கார்டன் தென்னைகள் - 07 | 200.00 | 120.00 | 1,400.00 |
| 27 | ஆனந்தகிரி கார்டன் லயன்சிட்டி வேறாக்கப்பட்ட காணியின் நகர சபையின் பிரிவு- தென்னைகள் | 200.00 | 150.00 | 1,500.00 |
| 28 | பல்லபிட்டிய சனசமூக நிலையக் காணி - ஈரப்பலாமரம் | 200.00 | 200.00 | 2,500.00 |
| 29 | கணதுல்ல மயான தென்னைகள் - 19 | 200.00 | 500.00 | 6,000.00 |
| 30 | கஞ்சனாபுர மீன்தட்டு | 200.00 | 10,000,00 | 105,000.00 |
| 31 | மீகஹகொட்டுவ ஸ்வர்ணஜயந்தி பூங்காவின் கழிவறை | 200.00 | 5,000.00 | 52,500.00 |
| 32 | ஹைலண்ட் பால்சாலை அமைந்துள்ள காணி | 500.00 | 27,000.00 | 540,000.00 |
| 33 | தர்மாஷோக்க பௌத்த நிலையம் மற்றும் இலங்கை டெலிகொம் நிலையத்திற்கு இடையில் அமைந்துள்ள காணி | 500.00 | 29,100.00 | 2,520,000.00 |
| 34 | மாதம்பே வீதி கிணற்றிற்கு அருகில் உள்ள காணி | 500.00 | 29,100.00 | 582,000.00 |
| 35 | CIB நிறுவனத்திற்கு அருகில் அமைந்துள்ள காணி | 500.00 | 28,800.00 | 360,000.00 |
| 36 | பஸ் நிலையம் கற்புல ஊடக விளம்பர பிரசாரம் | 500.00 | 11,600.00 | 144,915.00 |

## 2024 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

### கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை, முல்லேரியா

2024 ஆம் ஆண்டுக்காக இந்த வைத்தியசாலைக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்வதற்கு ஆர்வம் காட்டும் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு உற்பத்தியாளர்கள்/ அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள்/ மொத்த விற்பனையாளர்கள்/ பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் உட்பட அரசாங்கம் அங்கீகரித்த நிறுவனங்கள் மற்றும் நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்காக கீழுள்ள இலக்கம் 05 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பப் படிவத்தை உங்களால் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்த பின் கீழுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2024 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்" மற்றும் வழங்குவதற்கு எதிர்பார்க்கும் பொருளின் பெயர், அ வின் கீழ் இருக்கும் வரிசை இலக்கத்தையும், வழங்குவதற்கு எதிர்பார்க்கும் சேவையாயின் ஆ வின் கீழுள்ள வரிசை இலக்கத்தையும் (உதா.:- அ - 03, ஆ - 02) என்று குறிப்பிடவும். எமது நிபந்தனைகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு அமைய முறையான வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023 ஒக்டோபர் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பணிப்பாளர், கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை, முல்லேரியா என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். தபாலில் ஏற்படுகின்ற காணாமல்போதல், தாமதத்திற்கு இந்த நிறுவனம் பொறுப்பேற்காது. (அலுவலக நேரத்தில் கொண்டுவந்து ஒப்படைப்பதற்கும் முடியும்.)

விண்ணப்பதாரர்கள் தாம் பதிவு செய்வதற்கு விரும்பும் ஒவ்வொரு பொருள்/ சேவைகளுக்காக மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா பணத்தை செலுத்தி கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை கணக்காளரிடம் இருந்து பெற்றுக்கொண்ட பொது 127 பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து இருத்தல் வேண்டும். காசோலை ஏற்கப்படமாட்டாது. பொருட்கள் மற்றும் சேவைகளை குறைந்தது ஒரு மாத காலத்திற்கு கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்க வேண்டும் என்பதோடு பொருட்களை கொண்டுவருதலும் குறித்த நிறுவனத்தினால் மேற்கொள்ளல் வேண்டும்.

02.

03. **(அ) வழங்க வேண்டிய பொருட்கள்**

1. அனைத்து வகையான அலுவலக உபகரணங்கள் (கணிப்பான் இயந்திரம், நகல் பிரதி, அச்சுப்பொறி, ரோனியோ இயந்திரம், ups மற்றும் கணினி உட்பட)
2. அலுவலக எழுது பொருட்கள்
3. கணினி உபகரணங்கள் மற்றும் எழுதுபொருட்கள் (ரிபன், டோனர் மற்றும் சீடி தகடு உள்ளிட்டவை)
4. அலுவலக தளபாடங்கள் (பலகை, பிளாஸ்டிக், பைபர் கிளாஸ் மற்றும் உருக்கு)
5. தலையணை மற்றும் மெத்தை
6. பாய், விளக்குமாறு, தும்புத்தடி மற்றும் அனைத்து வகையான தும்பு உற்பத்திகள்
7. துப்பரவேற்பாட்டு உபகரணங்கள் மற்றும் நுகர்வு பொருட்கள்
8. குறித்த விரிப்புகள் உட்பட அனைத்து வகையான துணி சார்ந்த உற்பத்திகள்
9. மெகின்டோஷ் மற்றும் ரெக்ஷின்
10. அலுமினியம் பொருட்கள் உட்பட உலோகப் பொருட்கள் (பாத்திரம் உட்பட)
11. பீங்கான் பொருட்கள் (போசிலேன்)
12. ஹார்ட்வெயார் நிறுவனங்கள் (நிர்மாணப் பொருட்கள், வயர், மின்குமிழ், வண்ணப்பூச்சு. வார்னிஷ் மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் உட்பட)
13. வாகன உதிரிப்பாகங்கள்
14. மின் உபகரணங்கள் (வளிச்சீராக்கி, குளிர்சாதனப்பெட்டி மற்றும் மின்விசிறி)
15. வாகன டயர், டியுப் மற்றும் பெட்டரி
16. பெயர் பலகை மற்றும் விளம்பர பலக
17. காலணி, தரைவிரிப்பு உட்பட இறப்பர் சார்ந்த பொருட்கள்
18. பொலித்தின் உட்பட அது சார்ந்த உற்பத்திகள்
19. மரப்பலகை வகைகள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள்
20. மருந்து உறை
21. மருத்துவ உபகரணங்கள்
22. சத்திரசிகிச்சை உபகரணங்கள்
23. சத்திரசிகிச்சை நுகர்வு பொருட்கள்
24. அனைத்து வகையான மருந்து பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
25. X ray Film/ ECG Paper Roll
26. Ultrasound Scan இற்கு தேவையான நுகர்வு பொருட்கள்
27. ஆய்வுகூட நுகர்வு பொருட்கள்
28. தீ காப்பு உபகரணங்கள்
29. கிருமிநாசினி பொருட்கள்
30. சத்திரசிகிச்சை ஆடை பொருட்கள்
31. பல் மருத்து நுகர்வு பொருட்கள்

**(ஆ) வழங்க வேண்டிய சேவைகள்**

1. கணினி நன்னிலைப்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல்
2. குளிர்சாதனப்பெட்டி மற்றும் வளிச்சீராக்கி நன்னிலைப்படுத்தல், பழுதுபார்த்தல்
3. மின் உபகரணங்கள் பழுதுபார்த்தல் (நிழல் பிரிதி இயந்திரம், அச்சுப்பொறி இயந்திரம், ரோனியோ இயந்திரம், மின்விசிறி, தொலைக்காட்சிப் பெட்டி, சலவை இயந்திரம், பெண்டர், ரைஸ் குக்கர் மற்றும் தேங்காய் துருவும் இயந்திரம்)
4. வாகன நன்னிலைப்படுத்தல்
5. உருக்கி ஓட்டல் வேலை மற்றும் இரும்பு சார்ந்த வேலைகள்
6. இறப்பர் முத்திரை தயாரித்தல்
7. திணைக்கள அடையாள அட்டை தயாரித்தல்
8. அச்சு செயற்பாடுகள்
9. எரிவாயு அடுப்பு பழுதுபார்த்தல்
10. கழிவுகளை அகற்றல் (சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ சிகிச்சை)
11. வாகன புகை உமிழ்வு சோதனை
12. தினசரி பத்திரிகை வழங்கல்
13. சடலங்களை வைத்தியசாலையில் இருந்து எடுத்துச் சென்று அடக்கம் செய்தல் வரை
14. நீர் தொட்டி சுத்தம் செய்தல்
15. கறையான்கள் உட்பட பூச்சிகள் ஒழிப்பு
16. ஆய்வுகூட சேவை (ஆய்வுகூட சோதனை உட்பட)
17. உள்ளக மின் கட்டமைப்பின் பராமரிப்பு
18. மின் பிறப்பாக்கி சேவை, பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்
19. போக்குவரத்து சேவை வழங்கல் (Excavator மற்றும் JCB உட்பட கனரக வாகனங்கள் வாடகை அடிப்படையில்)
20. கட்டிட நிர்மாணத்திற்கு பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்களை வாடகை அடிப்படையில் வழங்கல்
21. அபாயகரமான மற்றும் தேவையற்ற மரங்களை வெட்டுதல், தோட்ட அலங்காரம்
22. மரச்சாமான்கள் பழுதுபார்த்தல்
23. நாற்காலி பின்னல் (பிரம்பு சார்ந்த வேலைகள்) மற்றும் குஷன் வேலை
24. மருத்துவ உபகரணங்களை நன்னிலைப்படுத்தல், பழுதுபார்த்தல்
25. சத்திரசிகிச்சை உபகரணங்களை நன்னிலைப்படுத்தல், பழுதுபார்த்தல்
26. ஆய்வுகூட உபகரண நன்னிலைப்படுத்தல், பழுதுபார்த்தல்
27. பல் சிகிச்சை உபகரணங்களை நன்னிலைப்படுத்தல், பழுதுபார்த்தல்
28. X சயல/ ECG/ Scan இயந்திரங்களை நன்னிலைப்படுத்தல், பழுதுபார்த்தல்

(இ) விற்பனை

அகற்றும் பொருட்கள் (அட்டைப்பெட்டி, பத்திரிகை, காகிதம், கண்ணாடி, போத்தல், சிரட்டை, அனைத்து வகையான பொலித்தின், பிளாஸ்டிக் வகைகள், இலத்திரன் உபகரணங்கள் மற்றும் பாகங்கள், மின்குமிழ்கள்)

(ஈ) சேவை வழங்குநர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் படிவங்கள் நிறுவனத்தால் வழங்கப்படும்.

**பணிப்பாளர்**
**கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை, முல்லேரியா.**
**(தொலைபேசி இலக்கம்: 0112 - 549390/ 011 - 549391) நீடிப்பு - 304/305**

**05 மாதிரி விண்ணப்பப் படிவம்**

**2024 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்**
**கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை - முல்லேரியா**

01. வழங்குநரின் பெயர்:- ..................................................
02. வர்த்தகத்தின் பெயர்:- ..................................................
03. வர்த்தக முகவரி:- ..................................................
04. தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி:- ..................................................
05. வர்த்தகப் பதிவு இலக்கம் மற்றும் திகதி:- ..................................................
06. விண்ணப்பிக்கும் வழங்கல்/ சேவை:- (குறித்த வரிசை இலக்கத்துடன் சரியாக குறிப்பிடவும்.) ..................................................
07. கடன் வசதி வழங்க முடியுமான காலம்:- ..................................................
08. போக்குவரத்து வசதிகள்:- ..................................................
09. தற்போது தாம் வழங்கல் மேற்கொள்ளும் அரச அல்லது வேறு நிறுவனங்கள்:- ..................................................

கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதாகவும், அதற்கமைய செயற்படுவதற்கும் நான்/ நாம் இணங்குகிறேன்/ இணங்குகிறோம்.

**கையொப்பம்**

# பெறுகை அறிவித்தல்

## வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு

## மத்திய மாகாணம்

மத்திய மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் பெறுகைக் குழுத் தவிசாளரினால் நிர்மாணம் மற்றும் பொருட்களை வழங்குவதற்காக நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அதிகார சபையில் (CIDA) வீதிகள் துறையில் செல்லுபடியாகும் பதிவு, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரப் பதிவைக் (கைத்தொழிலுக்கு இயைபாக) கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்வித் தொகை 5 அல்லது 5 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட வேலைகளுக்கு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்திற்கமைய பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

இதன் பிரகாரம் உங்கள் நிறுவனத்தினால் கேள்விகளைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்திருந்தால் இயைபுடைய கைத்தொழில் மற்றும் உங்களின் மின்னஞ்சல் முகவரியை சரியாகக் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதமொன்றை 2023-05-09ஆம் திகதி முதல் 2023-05-29ஆம் திகதிக்கு முன் prdatender@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அறிவிக்கப்படுகின்றது. பதிவை உறுதி செய்வதற்கு “CIDA” பதிவு அல்லது வியாபாரப் பதிவின் ஸ்கேன் (Scaned) செய்யப்பட்ட பிரதியொன்றை வேண்டுகோள் கடிதத்துடன் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

கேள்விப் படிவங்கள் வழங்கும் இறுதி நாள் 2023-10-02ஆம் திகதி மு.ப. 11.00 மணியாகும் என்பதுடன் ஏனைய முக்கிய தகவல்கள் பின்வருமாறாகும்.

1. உங்களால் விண்ணப்பிக்கப்படும் வேலைக்கு இயைபான தகவல்களை வேண்டுகோள் கடிதத்தில் சரியாகவும் தெளிவாகவும் குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். தகவல்கள் சரியாக இல்லாவிட்டால் அறிவிக்கப்படாமலேயே உங்களது வேண்டுகோள் கடிதம் நிராகரிக்கப்படும்.
2. மின்னஞ்சல் மூலமான வேண்டுகோள் கடிதங்கள் ஏற்றுக்கொள்ளல் 2023-09-27ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் வேண்டுகோள் கடிதங்களைச் சமர்ப்பித்துள்ள ஒப்பந்த நிறுவனங்களுக்கு மட்டும் 2023-09-07ஆம் திகதி முதல் 2023-10-02ஆம் திகதி வரையில் அலுவலக நேரங்களில் மட்டும் கேள்விப் படிவங்கள், கேள்விதாரரினால் வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.
3. 2023-09-21ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல. 09, எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி எனும் முகவரியில் இடம்பெறும்.
4. இயைபுடைய கேள்விப் படிவங்களின் மென் பிரதியை உங்களின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் உங்களால் கேள்விப் படிவங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு வன் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கையை மேற்கொள்ளுதல் வேண்டும். உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கேள்விப் படிவத்தின் மென் பிரதியில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல பக்கங்களும் உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்படிவத்தின் மூலப் பிரதியின் மற்றும் நகல் பிரதி உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இணைப்பில் குறிப்பிட்டுள்ள வகையில் வேலைக்கு இயைபான தொடரிலக்கம் மற்றும் வேலையின் பெயரையும் மூலப் பிரதியா அல்லது நகல் பிரதியா என்பதை தெளிவாகவும் மற்றும் சரியாகவும் குறிப்பிடவும். முறையாகப் பூர்த்தி செய்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறு உறைகளிலிட்டு தலைவர், பெறுகைக் குழு, வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு, 109, யடிநுவர வீதி, கண்டி எனும் முகவரிக்கு 2023-10-03ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது இக்காரியாலயத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கோ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.
5. கேள்விகள் ஏற்கப்பட்டு முடிவடைந்த உடனடுத்து கண்டி, இல. 109, யட்டிநுவர வீதி எனும் முகவரியிலுள்ள வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சில் கேள்விகள் திறக்கப்படுமென்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் இதில் கலந்துகொள்ளலாம்.
6. கேள்விப் படிவங்கள் வழங்கப்படுவதற்காக மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் எவ்விதக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது. தேவையான மேலதிக விபரங்களை கண்டி, போகம்பரை, இல. 09, எஹல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளரிடமிருந்து 081-2052279, 081-2204378 எனும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் prdatender@gmail.com எனும் மின்னஞ்சலின் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் ஒப்பந்த நிறுவனத்தினால் 2022ஆம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட வினைத்திறன் ஒப்பந்தங்களை வழங்கும் போது கவனத்திற் கொள்ளப்படும். நிதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஒப்பந்தங்களைக் கையளிப்பதற்கு இயைபான சுற்றுநிருபங்களின் விதிமுறைகள் பெறுகை நடவடிக்கைகளுக்கு பிரயோகிக்கப்படும். அதேபோல் ஒரு ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தத்தை வழங்கமுடியுமா என்பது பற்றி பெறுகைக் குழு தீர்மானிக்கும்.

கேள்வி ஆவணங்களுடன் உங்களால் வழங்கப்படும் ஆவணங்களை சரியாகவும் மற்றும் கேள்விப் படிவத்தில் தரப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு அமைவாகவும் சமர்ப்பித்தல் உங்கள் பொறுப்பாகும் என்பதுடன் இயைபான தகவல்கள் சரியாகச் சமர்ப்பிக்கப்படாமை கேள்விகள் நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகலாம். மேலும் ஏதாவது ஒரு கேள்வியை அல்லது எல்லாக் கேள்விகளையும் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவின் தவிசாளருக்கு உண்டென்பதுடன், ஆகக் குறைந்த விலைமனுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கடப்பாடும் இல்லை.

**தவிசாளர்,**
**பெறுகைக் குழு.**
**வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு மற்றும்**
**வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு,**
**109, யடிநுவர வீதி, கண்டி.**

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

## மூன்றாம் கட்ட பெறுகைகள் கோரல் (திறந்த) - 2023

| தொ. இல | ஒப்பந்த இலக்கம் | வேலை / செயற்றிடம் | ICTAD பதிவு | அளவுப் பத்திரத்தின் பெறுமதி (ரூ. மில்.) | கேள்விப் பிணை முறி 120 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்விப் பிணை ரொக்கப் பணமாக (ரூபா) | கேள்விப் பிணை வங்கிப் பிணையாக (ரூபா) |
| **மாகாண நிலையான அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித் திட்டம்** | | | | | | |
| **கண்டி மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கண்டி** | | | | | | |
| 1 | CPC/PRDA/ PSDG/K/ KAN/2023/02 | ஹந்தான உடவெல வீதிக்கு கல்தார் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக பொருட்கள் வழங்குதல் (5+500 - 7+500 Km) | C9,C8 & C7 | 2.75 | 14,000.00 | 28,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ஹாரிஸ்பத்துவ** | | | | | | |
| 2 | CPC/PRDA/ PSDG/K/ HAR/2023/01 | ஹாகல கிரிஎல்ல கோமர வீதியை கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்பை நிர்மாணித்தல் (0+000-1+000 Km) | C7,C6 & C5 | 21.59 | 108,000.00 | 216,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - குண்டசாலை** | | | | | | |
| 3 | CPC/PRDA/ PSDG/K/ KUN/2023/01 | கரகஸ்தென்ன கொமகொட வீதிக்கு கல்தார் இட்டு அபிவிருத்தி செய்தல் (1+590-2+800 km) | C7,C6 & C5 | 10.19 | 51,000.00 | 102,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கம்பஹா** | | | | | | |
| 4 | CPC/PRDA/ PSDG/K/ GAM/2023/01 | பரணகல பெனிலேன்ட் வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்பை நிர்மாணிப்பதற்கு பொருட்கள் வழங்குதல் (0+000-1+250 km) | C8,C7 & C6 | 6.88 | 34,500.00 | 69,000.00 |
| 5 | CPC/PRDA/ PSDG/K/ GAM/2023/02 | பரணகல பெனிலேன்ட் வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்பை நிர்மாணிப்பதற்கு பொருட்கள் வழங்குதல் (0+000-1+250 Km) | C7,C6 & C5 | 12.51 | 63,000.00 | 126,000.00 |
| 6 | CPC/PRDA/ PSDG/K/ GAM/2023/03 | தொலொஸ்பாகே கந்தேகட வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் (0+150 - 0+850 km) | C9,C8 & C7 | 2.68 | 13,500.00 | 27,000.00 |
| 7 | CPC/PRDA/ PSDG/K/ GAM/2023/04 | தொலொஸ்பாகே கந்தேகட வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல (0+150 - 0+850km) | C8,C7 & C6 | 6.67 | 33,500.00 | 67,000.00 |
| **மாத்தளை மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - நாஉல** | | | | | | |
| 8 | CPC/PRDA/ PSDG/M/ NAU/2023/01 | கந்தலம கும்புக்கந்தன்வெல வீதிக்கு கல்தார் இட்டு அபிவிருத்தி செய்தல் (12+700 - 13+900 Km) | C7,C6 & C5 | 15.05 | 75,500.00 | 151,000.00 |
| **நுவரெலியா மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ராகல** | | | | | | |
| 9 | CPC/PRDA/ PSDG/N/ RAG/2023/01 | அக்ராஸ் போபத்தலாவ வீதிக்கு கல்தார் இட்டு அபிவிருத்தி செய்தல் (0+000-2+000 Km & 3+390 - 3+770 Km) | C7,C6 & C5 | 11.71 | 59,000.00 | 118,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - திம்புல்ல** | | | | | | |
| 10 | CPC/PRDA/ PSDG/N/ DIM/2023/01 | டிக்கோயா பாத்போர்ட்வெளி வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் (2+550 - 3+840 Km) | C6,C5 & C4 | 38.53 | 193,000.00 | 386,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ரிகில்லகஸ்கட** | | | | | | |
| 11 | CPC/PRDA/ PSDG/N/ RIK/2023/01 | ரஹதுன்கொட வீகம வீதிக்கு கல்தார் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக பொருட்கள் வழங்குதல் (0+000 - 2+800 Km) | C9-C8 | 1.27 | 6,500.00 | 13,000.00 |
| **தார் வழங்குதல்** | | | | | | |
| 12 | CPC/PRDA/ PSDG/ TAR/E/2023/01 | தார் மற்றும் திரவத் தார் வழங்குதல் (CSS1 & CRS1) | தார் மற்றும் திரவத் தார் வழங்குதல் மற்றும் விநியோகிப் பதற்கான வியாபாரப் பதிவு | 13.66 | 68,500.00 | 137,000.00 |
| **வீதிப் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டம்** | | | | | | |
| **வீதி நிர்மாணம்** | | | | | | |
| **கண்டி மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கண்டி** | | | | | | |
| 13 | CPC/PRDA/ MAIN/K/ KAN/2023/04 | தலாத்தஓய கந்தகெப்புதென்ன வீதியில் கட்டமைப்பை நிர்மாணித்தல் (5+520 Km) | C9,C8 & C7 | 3.06 | 15,000.00 | 30,000.00 |
| 14 | CPC/PRDA/ MAIN/K/ KAN/2023/06 | தலாத்தஓய கந்தகெப்புதென்ன வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக பொருட்கள் வழங்குதல் (5+300-6+300 km) | C8,C7 & C6 | 5.55 | 28,000.00 | 56,000.00 |
| 15 | CPC/PRDA/ MAIN/K/ KAN/2023/07 | தலாத்தஓய கந்தகெப்புதென்ன வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக அஸ்போல்ட் வழங்குதல் (5+300-6+300 km) | C8,C7 & C6 | 9.37 | 47,000.00 | 94,000.00 |
| **மாத்தளை மாவட்டம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - மாத்தளை** | | | | | | |
| 16 | CPC/PRDA/ MAIN/M/ MAT/2023/04 | திக்கும்புர மாஉஸ்ஸங்கொல்ல வெலென்கஹவத்த வீதிக்கு கல்தார் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்பை நிர்மாணித்தல் (0+000-0+740 Km) (1+414-1+500 Km) | C7,C6 & C5 | 16.91 | 85,000.00 | 170,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலக முற்றவெளிக்கு பொருட்கள் வழங்குதல்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கண்டி** | | | | | | |
| 17 | CPC/PRDA/ MAIN/K/ KAN/2023/08 | 2023ஆம் வருடத்தில் கண்டி நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவிற்கு முன்கலவை உற்பத்திகள் மற்றும் வீதிப் பராமரிப்பு வேலைகளுக்கு பொருட்கள் வழங்குதல் (ஹாரகம முற்றவெளி, யட்டிநுவர முற்றவெளி மற்றும் கங்கவட்ட முற்றவெளிகளுக்கு) | C9 - C8 | 1.38 | 7,000.00 | 14,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ஹாரிஸ்பத்துவ** | | | | | | |
| 18 | CPC/PRDA/ MAIN/K/ HAR/2023/01 | 2023ஆம் வருடத்தில் அம்பதென்ன முற்றவெளி மற்றும் கொட்டிகம்பய முற்றவெளிக்கு பொருட்கள் வழங்குதல் | C9,C8 & C7 | 2.30 | 12,000.00 | 24,000.00 |
| 19 | CPC/PRDA/ MAIN/K/ HAR/2023/02 | 2023ஆம் வருடத்தில் ஹபுகொட முற்றவெளிக்கு பொருட்கள் வழங்குதல் | C9 - C8 | 1.39 | 7,000.00 | 14,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - குண்டசாலை** | | | | | | |
| 20 | CPC/PRDA/ MAIN/K/ KUN/2023/02 | 2023ஆம் வருடத்தில் குண்டசாலை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு வீதிப் பராமரிப்பு வேலைகளுக்காக பொருட்கள் வழங்குதல் | C9 - C8 | 1.62 | 8,500.00 | 17,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கம்பொல** | | | | | | |
| 21 | CPC/PRDA/ MAIN/K/ GAM/2023/01 | 2023ஆம் வருடத்தில் ஹித்தவுல மற்றும் உடஹென்தென்ன முற்றவெளிகளுக்கு பொருட்கள் வழங்குதல் | C9 - C8 | 0.88 | 500.00 | 1,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - மாத்தளை** | | | | | | |
| 22 | CPC/PRDA/ MAIN/M/ MAT/2023/05 | கிவுல முற்றவெளிக்கு பொருட்கள் வழங்குதல் | C9 - C8 | 1.92 | 10,000.00 | 20,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - நாஉல** | | | | | | |
| 23 | CPC/PRDA/ MAIN/M/ NAU/2023/01 | தம்புள்ள முற்றவெளிக்கு பொருட்கள் வழங்குதல் | C9 - C8 | 0.71 | 4,000.00 | 8,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ராகல** | | | | | | |
| 24 | CPC/PRDA/ MAIN/N/ RAG/2023/01 | ராகல நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவின் எமர்ஸ்ட் முற்றவெளிக்கு பொருட்கள் வழங்குதல் மற்றும் முன்வார்ப்பு கலவை செய்வதற்கு (MS Plate) வழங்குதல் | C9 - C8 | 1.25 | 6,500.00 | 13,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - திம்புல்ல** | | | | | | |
| 25 | CPC/PRDA/ MAIN/N/ DIM/2023/01 | திம்புல்ல நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவின் அம்பகமுவ மற்றும் திம்புல்ல பத்தன முற்றவெளிக்கு பொருட்கள் வழங்குதல் | C9 - C8 | 0.56 | 3,000.00 | 6,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ரிகில்லகஸ்கட** | | | | | | |
| 26 | CPC/PRDA/ MAIN/N/ RIK/2023/01 | 2023ஆம் வருடத்தில் ரிகில்லகஸ்கட நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலக முற்றவெளிக்கு பொருட்கள் வழங்குதல் | C9 - C8 | 0.78 | 4,000.00 | 8,000.00 |
| **தார் வழங்குதல்** | | | | | | |
| 27 | CPC/PRDA/ MAIN/ TAR/E/2023/02 | தார் மற்றும் திரவத் தார் வழங்குதல் (CSS1 & CRS1) | தார் மற்றும் திரவத் தார் வழங்குதல் மற்றும் விநியோகிப் பதற்கான வியாபாரப் பதிவு | 14.18 | 71,000.00 | 142,000.00 |
| 28 | CPC/PRDA/ MAIN/ ME/2023/01 | வீதிகளில் வெள்ளைக் கோடுகள் அடையாளமிடுவதற்காக தேர்மோபிளாஸ்டிக் பொருட்கள் வழங்குதல் | வியாபாரப் பதிவு | 3.35 | 17,000.00 | 34,000.00 |
| **ஏனையவை** | | | | | | |
| **மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை நிதியம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - ஹாரிஸ்பத்துவ** | | | | | | |
| 29 | CPC/PRDA/ MAIN/ OTHER/K/HAR/ 2023/01 | ஹாரிஸ்பத்துவ நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலக பிரவேச வீதிக்கு படலை மற்றும் காவற்கூடம் நிர்மாணித்தல் | C9 - C8 | 1.92 | 1,000.00 | 2,000.00 |
| **அம்பதென்ன செயற்றிட்ட அலுவலகம் - ஹாரிஸ்பத்துவ** | | | | | | |
| 30 | CPC/PRDA/ AMB. BUILD/2023/06 | அம்பதென்ன சேவை நிலையத்திலுள்ள பிரதான கட்டிடத்தின் மேல் மாடியில் மிகுதி வேலைகளைச் செய்தல் | C9,C8 & C7 | 2.54 | 13,000.00 | 26,000.00 |
| 31 | CPC/PRDA/ AMB.BUILD/Re/ 2023/05 | அம்பதென்ன வர்த்தகக் கட்டிடத்தில் நீர்க்குழாய் முறைமையைப் பொருத்துதல் | EM2 - EM3 | 14.89 | 74500 | 149000 |
| **வெளிவாரி நிறுவன நிதியம்** | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - கண்டி** | | | | | | |
| 32 | CPC/PRDA/ OTHER/K/ KAN/2023/03 | போகம்பர சுற்றவட்டம் முதல் தாதியர் பாடசாலை வரையிலான ஹன்தான வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்வதற்கு அஸ்போல்ட் வழங்குதல் | C8,C7 & C6 | 9.02 | 45,500.00 | 91,000.00 |
| **தார் வழங்குதல்** | | | | | | |
| 33 | CPC/PRDA/ OTHER/ TAR/E/2023/01 | போகம்பர சுற்றவட்டம் முதல் தாதியர் பாடசாலை வரையிலான ஹன்தான வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக தார் மற்றும் திரவத் தார் வழங்குதல் (CSS & CRS 1) | தார் மற்றும் திரவத் தார் வழங்குதல் மற்றும் விநியோகிப் பதற்கான வியாபாரப் பதிவு | 0.36 | 2,000.00 | 4,000.00 |

# பிரசித்த ஏல விற்பனை

02ம், 03ம் நவம்பர் 2022, 03ம், 04ம் ஏப்ரல் 2023, 3ம், 04ம் மே 2023, 01ம், 02ம் ஜுன் 2023, 4ம், 5ம் ஜீலை 2023, 3ம், 4ம் ஆகஸ்ட் 2023 இல "மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் ருடே" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடா்பானது. எல்.பி.பினான்ஸ் பிஎல்சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீா்மானிக்கப்பட்டுள்ளது. தங்க நகைகள் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| புத்தளம், கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தை கொழும்பு 15, மட்டக்குளிய, மோதறை, கிரான்ட்பாஸ் சுலைமான் கொழும்பு14, கணேமுல்ல, கேகாலை, திஹாரிய, வரக்காபொல, நிட்டம்புவ, கம்பஹா, திவுலபிட்டிய, சிலாபம், கொச்சிக்கடை-நீா்கொழும்பு, நீா்கொழும்பு, நீா்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில, மினுவங்கொட, கட்டுநாயக்க-அவிரிவத்த, வத்தளை, கந்தானை, ராகம, ஜா-எல, எலகந்த, மாவனல்ல, கல்பிட்டிய, கெக்கிரவா, அனுராதபுர நகர கிளை, அனுராதபுரம், மதவாச்சிய, தம்புத்தேகம, நொச்சியகம, பொலன்னறுவை, மெதிரிகிரிய, கந்தலை | 23 செப்டம்பர் 2023 |
| கொத்தாடுவ புதிய நகரம், தெமட்டகொட, தொட்டலங்க, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி, ஹோமாகம, மஹரகம, மஹரகம நகர கிளை, கொட்டாவ, அதுருகிரிய, அம்பலாங்கொட, கராபிட்டிய, காலி, தங்காலை, சங்கராஜ மாவத்தை-கொழும்பு 10, மாளிகாவத்த, செட்டியாா் தெரு, கொகுவல, ஜம்பெட்டா, டாம் வீதி, டீன்ஸ் வீதி கிளை, மருதானை, பொறளை, மாத்தறை, மாத்தறை நகர கிளை, தெனியாய, நெலுவ, அக்குரஸ்ஸ, மாலபே, கிரான்ட்பாஸ், கிரிபத்கொடை, தெல்கொடை, கடவத்தை, களனி, கடுவெல, கிரிபத்கொடை-மாகொல, பிரீமியர் கொழும்பு 07, அடிமை தீவு, கார்ப்பரேட் அலுவலகம், தலைமை அலுவலகம் கொழும்பு 07 | 26 செப்டம்பர் 2023 |
| எல்பிட்டிய, பிட்டிகல, ஹொரண, பண்டாரகம, மத்துகம, பதுரலிய, பலாங்கொடை, இரத்தினபுரி, அவிசாவளை, எஹலியகொட, ஹன்வெல்ல, வெள்ளவத்தை, வெள்ளவத்தை நகர கிளை, தெஹிவளை, மொறட்டுமுல்லை, மொறட்டுவ கெசல்வத்த, வாட்டுவ, தெஹிவளை நகர கிளை, அத்திடிய, பொரலஸ்கமுவ, பிலியந்தலை, தா்கா நகா், பாணந்துறை, கல்கிச, ரத்மலான, நகர அலுவலகம், அளுத்கம, பேருவளை, களுத்துறை, டெல்கந்த, கிருலப்பனை, நுகேகொடை, கோட்டே, பத்தரமுல்லை, எம்பிலிப்பிட்டிய, திஸ்ஸமஹாராம, கொலன்னாவ, பதுளை, பதுளை நகர கிளை, அம்பலாந்தோட்டை, பண்டாரவளை | 27 செப்டம்பர் 2023 |
| நுவரெலியா, மஹியங்கனை, மொனராகலை, வெலிமடை, தெஹியத்தகண்டி, குருநாகல், குருநாகல் நகர கிளை, குருநாகல் பிரீமியர் நிலையம், குளியாபிட்டிய, நாரம்மல, கலேவேல, பிலிமத்தலாவை, கண்டி, கண்டி நகரம் கிளை, கடுகஸ்தோட்டை, நாவலப்பிட்டிய, மாத்தளை, கெலிஓயா, ஆனமடுவ, புசல்லாவை, கம்பளை, கம்பளை நகர கிளை, ஹட்டன், மஸ்கெலிய, திகனா, தம்புள்ள. | 30 செப்டம்பர் 2023 |
| செங்கலடி, வாழைச்சேனை, மன்னாா், சாவகச்சேரி, ' கிண்ணியா, திருகோணமலை, வவுனியா, கொக்கட்டிச்சோலை, ஆரயம்பதி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, அட்டாளைச்சேனை,யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் பிரீமியர், யாழ்ப்பாணநகரம், அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, சாய்ந்தமருது, சம்மாந்துறை, கல்முனை, மல்லாவி, வட்டுக்கோட்டை, சங்கானை, ஏறாவூா், வாகரை, மத்தியமுகாம், சேருநுவர, கிரண், கோப்பாய், கொடிகாமம், பருத்தித்துறை, திருக்கோவில், திருகோணமலை நகர கிளை, பேசாலை, தெல்லிப்பளை, வவுனதீவு. | 06 அக்டோபர் 2023 |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம்

LB FINANCE

உதவி பொது மேலாளா் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியா் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

**கடன் தொடர்பு இல. 75900487/88312251/87687427**

**ஹாட்டியாதூவ வீதி, தெனிபிட்டிய எனும் முகவரியைச் சேர்ந்த திரு.ஹேவா வரவிட்டகே கமல் நந்தகுமார ஹேவா வரவிட்ட நிமல்வாச என்பவரின் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.**

இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.07.21ஆம் திகதி 2342ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.07.26ஆம் திகதி தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு.எம்.எச்.டி. கருணாரத்ன அவர்கள் 2023.10.24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10:30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணையானது**

**"கனத்த எனப்படும் கனத்தே ஓவிட்ட"** என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.சமரசிங்ஹ தயாரித்த 2016.06.10ஆந் திகதியிட்ட 3926ஆம் இலக்க வரைபடத்தில் விவரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான **காணித்துண்டு A**ஆனது தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம கோரளையில், வெலிபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில், வெலிகம பிரதேச சபை எல்லைகளுள் இல - 391B, தெனிபிட்டிய மத்திய கிராம அலுவலா் பிரிவில், தெனிப்பிட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ள. இக்காணித்துண்டானது **வடக்கில்** ரணோகே பிமவினையும், **கிழக்கில்** வீதியையும், **தெற்கில்** குறித்த வரைபடத்தில் காணித்துண்டு B மற்றும் பிரதேச சபை வீதியையும் மேற்கில் அதே காணியின் 6ஆம் இலக்க காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டு முப்பத்தெட்டு தசம் எட்டு பேர்ச்சுகள் (38.8 பேர்ச்சுகள்) பரப்பளவுடன் அக்காணியிலுள்ள மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கி N 128/83A எனும் இலக்கத்தின் கீழ் மாத்தறை காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஏலவிலை கூறுவோர் 0412250280 என்ற தொலைபேசி எண் ஊடாக வெலிகமை கிளையின் முகாமையாளரைத் தொடர்புகொண்டு உரிமைப் பத்திரங்கள் மற்றும் மேற்கூறிய சொத்து/கள் தொடர்பான பிற ஆவணங்களை பரிசோதிக்கலாம்.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

**திருமதி.கே.ஏ.பீ.நதீஷா**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**வெலிகம**
**திகதி**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# கேள்வி அறிவித்தல்

## சொத்துக்களை குத்தகைக்கு விடல் – 2024ம் ஆண்டு

## உடுபத்தாவ பிரதேச சபை

உடுபத்தாவ பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்களை 2024.01.01 முதல் 2024.12.31 வரை குத்தகைக்கு விடுவதற்காக கொள்வனவாளர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2023.09.07 முதல் 2023.09.27 மு.ப. 10.30 வரை என்னால் பொறுப்பேற்கப்படும்.

02. 2023.09.07 முதல் 2023.09.27 மு.ப. 10.00 வரை உடுபத்தாவ பிரதேச சபையின் தலைமையகத்தில் இந்த சகல சொத்துக்களுக்கும் கேள்விப் படிவம் மற்றும் அட்டவணை விநியோகிக்கப்படும். கேள்விப்படிவங்களை பெற்றுக்கொள்ளும் போது மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணத்தையும், கேள்வி வைப்புத் தொகையையும் செலுத்துதல் வேண்டும்.
   1. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளுடன் விநியோகிக்கப்படுவதுடன், அக்கேள்விப் படிவங்களைப் பூர்த்தி செய்து இரு உறைகளில் இட்டு இடது பக்க மேல் மூலையில் "மூலப்பிரதி", "நகல்பிரதி" என்று குறிப்பிட்டு அவ் உறைகள் இரண்டையும் வேறு உறையொன்றில் இட்டு இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு "செயலாளர், உடுபத்தலாவ பிரதேச சபை, உடுபத்தாவ" என்ற முகவரிக்கு தபாலில் அனுப்புதல் வேண்டும்.
   2. கேள்விகளை கையோடு ஒப்படைப்பதற்கு விரும்பும் நபர்கள் அப் பிரதிகள் இரண்டிற்கும் மேற்படி முறையில் உறைகளைத் தயாரித்து தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
   3. கேள்வி திறத்தல் :

      2023.09.27 மு.ப. 11.30 இற்கு உடுபத்தாவவில் அமைந்துள்ள உடுபத்தாவ பிரதேச சபை தலைமையகத்தில் கேள்விச் சபையின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும். மேற்படி நேரத்திற்கு கேள்விகளைச் சமா்ப்பித்தோருக்கு அல்லது கடிதம் மூலம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட அவரது பிரதிநிதியொருவருக்கக சமுகமளிக்கலாம்.

04. மேலதிக விபரங்களை கீழேயுள்ள தொ.பே. இலக்கத்தை அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

**தொ.பே. இலக்கம் - அலுவலகம் - 037-2286577**
**வருமானப் பிரிவு - 037-4947087**

**செயலாளர்/**
**அதிகாரங்களை செயற்படுத்தும்,**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**உடுபத்தாவ பிரதேச சபை.**

# வ/ப தம்பதெனிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தம்பதெனிய.

## மீட்கப்படாத அடகுப் பொருட்களை பகிரங்க ஏலத்தில் விற்றல்

வ/ப தம்பதெனிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தம்பதெனிய, பின்னபொல, நாரம்மல, மெட்டியகனே, கடஹபொல, குடகம்பன, ரங்கல்லேபொல, தம்பேஸ்லஸ்ஸ, புஸ்காலதெனிய, பெம்முல்லேகெதர, முத்துகல, பொல்கஹயாய, மரந்தகொல்ல, ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2022.06.30 வரை அடகு வைக்கப்பட்டு 2023.09.22 வரை மீட்கப்படாத அடகுப் பொருட்கள் 2023.09.23 மற்றும் 2023.09.24ம் திகதிகளில் மு.ப. 9.00 முதல் வ/ப தம்பதெனிய கூட்டுறவுகள் சங்கத்தின் தலைமையகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**கூட்டுறவாளர்,**
**பொது முகாமையாளர்,**
**வ/ப தம்பதெனிய ப.நோ.கூட். சங்கம்,**
**தம்பதெனிய**

**தொ.பே இலக்கம் - 0372266031**
**பெக்ஸ் இலக்கம் - 037-2266103**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## போதனா வைத்தியசாலை – கராப்பிட்டிய

கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான நிருமாண வேலைக்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை பணிப்பாளர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். விலைமனுக்கள் இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| கேள்வி இல. | வேலை அம்சம் | விலைமனு தாரரின் தகைமைத் தேவைப்பாடு | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | விலைமனுப் பிணையின் பெறுமதி | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அடிப்படை ஆகுசெலவு (மில்லியன் ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| 1. | HO விடுதிகளின் புதுப்பித்தல் | சி-5, சி-6 மற்றும் சி-7 | 3,500.00 | 241,000.00 | 24.1 |
| 2. | Renovation of Duct at Cancer Unit | சி-6 மற்றும் சி-7 | 3,500.00 | 58,000.00 | 5.8 |
| 3. | Proposed Link Corridor at Nephrology Unit | சி-5, சி-6 மற்றும் சி-7 | 3,500.00 | 114,000.00 | 11.4 |

1. கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் அலுவலகத்தினால் வழங்கப்படும் படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2023.09.26 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர், வைத்தியசாலை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
3. **2023.09.27 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு** கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் **போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.** விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திறத்தலின் போது பங்கு பற்றலாம்.
4. விலைமனுக்கோரலை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **விலைமனுவின் பெயர் மற்றும் கேள்வி இலக்கம்** ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
5. எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிரகாரித்தல் தொடர்பாக அல்லது கேள்வியை வழங்குவதற்கான பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

தொடர்பிலக்கம்: 091-2232250, 091-2232176.

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய,**
**காலி.**
**07.09.2023.**

# இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.06.07 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

01. பிரசித்த நொத்தாரிசு திருமதி ருக்மால் விஷாகா அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2018.03.16 திகதியிட்ட ஈட்டு முறி இல.4097 மற்றும் பிரசித்த நொத்தாரிசு திருமதி ருக்மால் விஷாகா அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2019.03.28 திகதியிட்ட ஈட்டுமுறி இல.4394 ஆகியவற்றின் பேரில் கெங்கல்ல, மல்பான, தென்னபிட்டியவத்த, இல.84 ஐச் சேர்ந்த திரு. சமிந்த லால் சேமசிங்ஹ என்பவரிடமிருந்து நிரந்தர மேலதிகப் பற்று மீது 2023.04.18 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் எட்டு மில்லியன் இருநூற்று எழுபத்தொரு ஆயிரத்து இருநூற்று அறுபத்தேழு ரூபாய்களும் பன்னிரெண்டு சதங்களும் (ரூ.8,271,267.12) அத்துடன் ஐந்து மில்லியன் ரூபாய்கள் (5,000,000.00) மீது 2023.04.19 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு இருபத்தொன்பது தசம் இரண்டு ஐந்து (29.25%) வீதத்தில் மேலும் வட்டியும், தவணைக்கடன் மீது 2023.04.18 வரை முதலும் வட்டியும் மூன்று மில்லியன் நூற்று ஐந்து ஆயிரத்து நாநூற்று முப்பது ரூபாய்களும் இருபத்து மூன்று சதங்களும் (3,105,430.23) அத்துடன் ஒரு மில்லியன் எண்ணூற்று அறுபத்தாறு ஆயிரத்து இருபத்து நான்கு ரூபாய்களும் தொண்ணூற்றெட்டு சதங்கள் (1,866,024.98) மீது 2023.04.19 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு இருபத்தெட்டு தசம் இரண்டு ஐந்து (28.25%) வீதத்தில் மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

02. பிரசித்த நொத்தாரிசு திருமதி ருக்மால் விஷாகா அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2018.03.16 திகதியிட்ட ஈட்டு முறி இல 4097 இன் பேரில் ஐந்து மில்லியன் நிரந்தர மேலதிகப்பற்று மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட எட்டு மில்லியன் இருநூற்று எழுபத்தொரு ஆயிரத்து இருநூற்று அறுபத்தேழு ரூபாய்களும் பன்னிரெண்டு சதங்களும் (ரூ.8,271,267.12) மற்றும் நிலுவை முதல் ஐந்து மில்லியன் (5,000,000.00) ரூபாய்கள் மீது 2023.04.19 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் பிரசித்த நொத்தாரிசு திருமதி ருக்மால் விஷாகா அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2019.03.28 திகதியிட்ட ஈட்டு முறி இல. 4394 இன் பேரில் கடன் மீது மூன்று மில்லியன் நூற்று ஐந்து ஆயிரத்து நாநூற்று முப்பது ரூபாய்களும் இருபத்து மூன்று சதங்களும் (3,105,430.23) கடன் நிலுவை ஒரு மில்லியன் எண்ணூற்று அறுபத்தாறு ஆயிரத்து இருபத்து நான்கு ரூபாய்களும் தொண்ணூற்றெட்டு சதங்கள் (ரூ.1,866,024.98) மீது 2023.04.19 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு M.H.T. கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கண்டி 2ஆம் நகரக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடகம்பஹ கோரளை பாத்த தும்பரயில் குண்டசாலை பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் மல்பான கிராம உத்தியோகத்தர் பிரிவு இல.712ல், அட்டரகல்லயில் அமைந்த தென்னபிட்டியவத்த அல்லது தென்னபிட்டிய எஸ்டேற் அல்லது நெல்லிகஹகடுல்லேவத்த என அழைக்கும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் SALL நந்தன தயாரித்த 2013ஆகஸ்ட் 2 திகதியிட்ட வரைபடம் இல.1170 இல் காணித்துண்டு இல.02 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு இல.02, வடக்கிலும் வடகிழக்கிலும் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு இல.3உம் கிழக்கில் வரைபடம் இல. 1548 இல் அதே காணியின் பகுதி காணித்துண்டு 2 மற்றும் 3உம் தெற்கிலும் தென் மேற்கிலும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் TB அத்தநாயக்க தயாரித்த வரைபடம் இல. 2831இல் அதே காணியின் பகுதி காணித்துண்டு 1உம் வட மேற்கில் மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் காணித்துண்டு 1உம் (மெனிக்ஹின்ன- திகன பிரதான வீதியிலிருந்து 12 அடி அகல பிரவேசப் பாதை) எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரை படம் இல.1170 இன் பிரகாரம் ஒரு றூட் இருபது பேர்ச்சுகள் (ஏ.0 றூ.1 பே.20) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள் பயிர்கள் கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி மாவட்ட காணிப்பதிவகத்தில் D 192/65 இல் பதிவுசெய்யப்பட்டது.

மேற்கூறிய அட்டரகல்லயில் அமைந்த தென்னபிட்டியவத்த அல்லது தென்னபிட்டிய எஸ்டேற் அல்லது நெல்லிகஹகடுல்லேவத்த என அழைக்கும் காணி மேற்கூறிய வரைபடம் இல.1170 இல் காணித்துண்டு இல.3 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் தென்னபிட்டிய வத்தயும் கிழக்கில் அதே காணியின் பகுதி காணித்துண்டு 2உம் சரியாக உத்தரவு பெற்ற நில அளவையாளர் NBD வேத்தேவ தயாரித்த வரைபடம் இல.1548இல் அதே காணியின் பகுதி காணித் துண்டுகள் 2 மற்றும் 3 உம் தெற்கிலும் தென் மேற்கிலும் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 2உம் வடமேற்கில் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 1 உம் (மெனிக்ஹின்ன திகன பிரதான பாதையிலிருந்து 12 அடி அகல பிரவேசப் பாதை) எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல.1170 இன் பிரகாரம் முப்பது தசம் ஒன்று எட்டு பேர்ச்சுகள் (ஏ.0 றூ.0 பே.30.18) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள் பயிர்கள் கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி காணிப்பதிவகத்தில் D202/49 இல் பதிவு செய்யப்பட்டது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

**திருமதி . H.M.M.P ஹேரத்**
**சிரேஷ்ட முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**2 ஆம் நகரக் கிளை**
**கண்டி**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

Sunday Observer adz it's what you want

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| ரூ. 800/- (Except Thinakaran Varamanjari) | ரூ.1,000/- (Except Thinakaran Varamanjari) | ரூ.1,330/- |

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனம் (SLSI)

(தொழில்நுட்பவியல் அமைச்சின் கீழானது)

## Invitation of bids for Design, Development, Deployment, Support and Maintenance of web based cloud hosted Human Resource Information System (HRIS) for Sri Lanka Standards Institution (SLSI)

இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனத்திற்கு web based cloud hosted Human Resource Information System ஐ Design, Development, Deployment, Support and Maintenance ஆகியவற்றிற்காக விலைமனுக்கோரல்கள் கோரப்படுகின்றன. 2023.09.07 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500 இ.ரூ. + SSCL + பெசேவ ஆகியவற்றை செலுத்திய பின்னர், கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்தை, விக்டோரியா பிரதேசம், 17 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவன நிருவாகப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனத்தில் 2023.09.21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

2023.10.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் விலைமனுக்கோரல்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**தலைவர் - பெறுகைக் குழு,**
**இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனம்,**
**இல. 17, விக்டோரியா பிரதேசம்,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-08.**
**தொலைபேசி : 0112-671567-72**

# நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

## கேள்விக்கான அழைப்பு (IFB)

### நீதியமைச்சு கட்டிடத்தின் நான்காம் மாடியில் சமரச சபைகள் ஆணைக்குழுவை அமைப்பதற்கு தேவையான பார்டிஷன் செய்தல் மற்றும் சமரச சபைகள் அமைந்துள்ள நீதிமன்ற மாவத்தை, இல.80 என்ற இடத்தினை பழுதுபார்த்து, பார்டிசன் செய்து மேலதிக வர்த்தக உயர் நீதிமன்றத்தை அமைத்தல் - 2023

நீதியமைச்சு பெறுகைக்குழுவின் தலைவரால், மேற்படி வேலைக்காக, தகைமையுள்ள மற்றும் திறன் உடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

01. மேற்படி செயற்றிட்டத்திற்கான தேவைப்பாடுகள் மற்றும் செயற்படுத்தும் மாதிரிகள் பற்றிய விபரங்கள் கேள்வி ஆவணங்களுடன் வழங்கப்படும்.

02. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் மூலம் கேள்விகள் மேற்கொள்ளப்படும்.

03. ஒப்பந்தம் வழங்குவதற்காக தகைமைபெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாது இருத்தல் வேண்டும். கேள்வி அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு CIDA/ICTAD இப்பத்திவை பெற்றிருத்தல் வேண்டும்.

04. இதற்கான மேலதிக தகவல்களை கொழும்பு -10, இலக்கம் 19, சங்கராஜ மாவத்த, நீதி அமைச்சில் 01ம் மாடியில் பெறுகைப்பிரிவின் பணிப்பாளர் (பெறுகை) இடம் பெற்றுக்கொள்ள முடியும் அத்துடன், மேற்படி பெறுகைப் பிரிவில் 2023.09.07 முதல் (பகிரங்க விதிமுறை தவிர்த்து) வார நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப.9.00 - பி.ப.3.00) கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். தொலைபேசி /பெக்ஸ் இல : 011-2438178.

05. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் ஒரு கேள்வி ஆவணக் கட்டணத்திற்காக மீளளிக்கப்படாத ரூ.5,000/- கட்டணத்தை, கொழும்பு -10, இல.19, சங்கராஜ மாவத்த, நீதி அமைச்சின் 01ம் மாடியில் பெறுகைப் பிரிவிற்கு செலுத்திய பின்னர் எழுத்து மூல வேண்டுதலை நீதியமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பித்து அலுவலக நேரங்களில் (மு.ப.9.00 - பி.ப.3.00) 2023.09.27 பி.ப.3.00 வரை ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களின் முழுமையான தொகுதியை கொள்வனவு செய்யலாம்.

06. கேள்விகள் இரு பிரதிகளுடன் கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டியதுடன்

    i. 2023.10.02ம் திகதி மு.ப.11.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் அமைச்சிற்கு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரியில் பெறுகைக் குழுவின் தலைவருக்கு பதிவுத்தபாலில் சமர்ப்பித்தல் அல்லது

    ii. 2023.10.02 மு.ப.11.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு அலுவலக நேரங்களில் கொழும்பு -10, இல.19, சங்கராஜ மாவத்த, நீதி அமைச்சின் 01ம் மாடியில் பெறுகைப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாதமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். வேறு விதத்தில் அல்லது மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்கப்படமாட்டாது.

07. சகல கேள்வியுடனும் கேள்வி ஆவணங்களில் இணைக்கப்பட்டுள்ள வங்கிப்பிணைமுறி மாதிரியின் பிரசுரமான இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் இருந்து விநியோகிக்கப்படும் கேள்வி அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதியுடைய 2024.01.04 வரை செல்லுபடியாகும் கேள்விப் பிணை முறியை இணைத்து அனுப்புதல் வேண்டும். செல்லுபடியாகும் கேள்விப் பிணையொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். செல்லுபடியாகும் கேள்வி பிணையொன்றை இணைந்திராத எந்தக் கேள்வியும் நிராகரிக்கப்படும். கேள்விகளை சமர்ப்பித்தல் பற்றிய மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

08. கேள்விகள் 2023.12.07 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

09. கேள்விகளை ஏற்றுக்கொள்ளலுக்கான இறுதி நேரம் முடிவடைந்தவுடன் 05ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் முகவரியில் அவ்வேளையில் வருகைதரும் கேள்விதாரர்கள் மற்றும் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்படும் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

10. கேள்விகளை தயாரித்தல் கொண்டுவந்து ஒப்படைத்தல் பற்றிய கேள்விதாரர்களுக்கு ஏற்படுகின்ற ஏதேனும் ஆகு செலவுகள் அல்லது ஏதேனும் செலவுகள் பற்றி அமைச்சு பொறுப்பேற்க மாட்டாது.

11. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.09.20 மு.ப.11.00 இற்கு நீதிமன்ற அமைச்சின் பெறுகைப்பிரிவில் நடைபெறும்.

12. இப் பெறுகை சம்பந்தமான இறுதித்தீர்மானம் எடுத்தல் பெறுகைக்குழுவிற்கு உரியது.

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக்குழு**
**நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு**
**மறுசீரமைப்பு அமைச்சு,**
**இல.19, சங்கராஜ மாவத்தை**
**கொழும்பு - 10**

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

க.பொ.த. (உ/ தர)ப் பரீட்சை - 2022(2023)

## பெறுபேறு மீளாய்வு விண்ணப்பப்படிவம்

### நிகழ்நிலை (Online) முறையில் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் (பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு)

**பெறுபேற்று மீளாய்வின்போது குறித்த விடைத்தாள் பரிசீலனைக் குழுவின் உறுப்பினர்கள் பலரால் முழுமையாக பரிசீலிக்கப்படும். விடைத்தாள் மீளாய்வின் பெறுபேறாக Z புள்ளிகளில் அல்லது கிடைக்கப் பெற்றுள்ள தரங்களில் அதிகரித்தலோ அல்லது குறைதலோ ஏற்பட இடமுண்டு என்பதை பரீட்சார்த்திகள் அறிந்திருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன்.**

01. மேற்குறித்த பரீட்சையின் மீளாய்வுக்கு விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலையில் மாத்திரம் கோரப்படும்.

02. பாடசாலை பரீட்சார்த்திகள் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஆகிய இருவகைப் பரீட்சார்த்திகளும் மீளாய்வுக்கு விண்ணப்பிக்கும் போது தாமே விண்ணப்பங்களை முன்வைத்தல் வேண்டும்.

03. விண்ணப்பம் கோரப்படுதலானது 2023.09.07 ஆம் திகதி ஆரம்பமாவதோடு 2023.09.16 ஆம் திகதி நிறைவடையும்.

04. மீளாய்வுக்காக விண்ணப்பிப்பதற்கு பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றவும்
    - பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (https://www.doenets.lk) இனுள் பிரவேசித்து ‘எமது சேவை’ என்பதின் கீழ் உள்ள "Exam Information Centre" இன் மீது Click செய்வதன் மூலம்
    - பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ நடமாடும் தொலைபேசி பிரயோகம் (Mobile Application) ஆன DoE இற்கு சென்று "Exam Information Centre" இன் மீது Click செய்வதன் மூலம்
    - https://onlineexams.gov.lk/eic இனுள் பிரவேசிப்பதன் மூலம்

05. **முறைமைக்குள் பிரவேசிக்கும்போது தாங்கள் (உ/தர) 2022(2023) பரீட்சைக்குத் தோற்றியபோது பயன்படுத்திய பரீட்சை சுட்டெண் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையே பயன்படுத்துதல் வேண்டும். கணக்கொன்று இல்லை எனில் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை உள்ளிட்டு கணக்கொன்றினை ஆரம்பித்துக் கொள்ளல் வேண்டும்.**

06. விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்கு முன்பாக Technical Instructions, Common Instructions அறிவுறுத்தல் வீடியோவைப் பார்த்தல் என்பன சரியான முறையில் படிவத்தை நிரப்புவதற்கு அத்தியாவசியமானதாகும்.

07. ஒரு பாடத்துக்கான மீள்பரிசீலனை செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250 ஆகும். தபால் அலுவலகத்திலோ அல்லது Credit card / Debit card மூலமோ பணத்தைச் செலுத்தலாம்

08. பணத்தைச் செலுத்திய பின்பு விண்ணப்பப்படிவத்தை PDF முறையில் பதிவிறக்கம் (Download) செய்யலாம் என்பதோடு அவ் விண்ணப்பப்படிவத்தை தங்களது பொறுப்பில் வைத்திருக்கவேண்டும். பணத்தைச் செலுத்திய பின்பு தங்களது தொலைபேசி இலக்கத்துக்கு SMS செய்தி கிடைக்கப்பெறும்.

09. நீங்கள் பெறுபேறு மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்க்கும் சகல பாடங்களோடு மீளாய்வு விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்ட விபரங்களைச் சரியாகப் பூரணப்படுத்துதல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். உரிய பணம் செலுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களுக்கென செலுத்தப்பட்ட பணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.

10. பாட எண்: 12 – பொதுச் சாதாரணப் பரீட்சை பாடத்தில் 30 இற்குக் குறைவான புள்ளிகள் பெற்றதால் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெறாத விண்ணப்பதாரிகள் அப்பாடத்திற்கும் மீளாய்வுக்காக விண்ணப்பிக்க முடியும்.

11. இது தொடர்பான ஏதேனும் விசாரணைகள் தேவைப்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ள முடியும்.

| | |
|---|---|
| மதிப்பீட்டுக் (பாடசாலைகள் பரீட்சை) கிளை | - 011 – 2785231 / 011 2785216 / 011 2784037 |
| உடனடி அழைப்பிற்கு | - 1911 |

**பாடசாலைப் பரீட்சைகள் (மதிப்பீடு) கிளை,**
**தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்த, பத்திரமுல்ல.**

**ஒப்பம்: H.J.M.C. அமித் ஜயசுந்தர**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

**2023. 08. ஆம் திகதி.**
**D:\Ajanthan\2022 (2023)\AL\AL Re Corrcetion\New folder\G.E.C (AL) - SCHool & Personal.doc**

# இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசு

**நீர்ப்பாசன அமைச்சு**

## கேள்வி அறிவித்தல்

**(தேசிய போட்டி ரீதியிலான கேள்வி)**

### மாதுருஓயா வலது கரை அபிவிருத்தி செயற்றிட்டம்

பின்வரும் வேலைகளுக்காக 2023.09.27ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை வெலிகந்த, நீர்ப்பாசன அமைச்சு, மாதுருஓயா வலதுகரை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் செயற்றிட்டப் பணிப்பாளர் சார்பில் நீர்ப்பாசன அமைச்சு, மாதுருஓயா வலதுகரை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் பெறுகைக் குழுவின் (PPC) தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார்.

| உரு. இல. | விபரம் | ஒப்பந்த இல. | ஒரு தொகுதி கேள்விப் படிவத்திற்கான மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | ஆகக் குறைந்த இக்டாட்/ சீடா பதிவுத் தரம் மற்றும் துறை |
|---|---|---|---|---|
| 01 | கினானி குளத்தின் வெளியேற்றக் கட்டமைப்பு மற்றும் மிமின்னாகொல்ல குளத்தின் உள்வரும் மற்றும் வெளியேற்ற கட்டமைப்பை நிர்மாணித்தல் - டெக் லெவல் (Deck Level) வரை - (மிகுதி வேலைகள்) (மொத்த மதிப்பீட்டுப் பெறுமதி வட் வரியின்றி 25.6 மில்லியன் ரூபா மற்றும் ஒப்பந்தக் காலம் 49 நாட்கள்) | MORBDP/ Con/ IO/2023-09 | ரூபா 7,000.00 | C5 மற்றும் C4 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு |

மேற்காணும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக அவ்வேலைகளுக்கு எதிரில் காட்டப்பட்டுள்ள தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரம் மற்றும் குறித்த துறையில் ICTAD நிறுவனத்தின் பதிவைக் கொண்டுள்ள கேள்விதாரர்கள் மட்டுமே இவ்விலைகோரலுக்குத் தகைமையுடையவர்களாவர். அரச நிதிச் சுற்றுநிருபம் மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்படும் வேறு சுற்றுநிருபங்களில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள் கேள்வி மதிப்பீட்டிற்காக பிரயோகிக்கப்படுவதானது இந்த பெறுகையின் மொத்த கிரய மதிப்பீடு 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைவானதால், 04/2019ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் காட்டப்பட்டுள்ள வகையில் மாகாண முன்னுரிமை மற்றும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பதிவுத் தர (CIDA Grade) கேள்விகளை மதிப்பிடுகையில் கவனத்திற் கொள்ளப்படும். அதனால் C5 மற்றும் C4 தரங்களைக் கொண்ட கிழக்கு மாகாண ஒப்பந்தக்காரர்களுக்கு 5% மாகாண முன்னுரிமை வழங்கப்படும்.

வளமுள்ள கேள்விதாரரால் தங்களது நிறுவனத்தின் கடித்தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை வெலிகந்த, நீர்ப்பாசன அமைச்சு, மாதுருஓயா வலதுகரை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் செயற்றிட்டப் பணிப்பாளருக்கு 2023-09-06ஆம் திகதி முதல் 2023-09-26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஒவ்வொரு கேள்விக்கும் மேற்காணும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி இது தொடர்பான கேள்வி ஆவணத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

2023-09-06ஆம் திகதி முதல் 2023-09-26ஆம் திகதி வரையான காலத்தில் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் வெலிகந்த, நீர்ப்பாசன அமைச்சு, மாதுருஓயா வலதுகரை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிட்டு, முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை நகல் பிரதியுடன் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான காலம் முடிவடைவதற்கு முன் வெலிகந்த, நீர்ப்பாசன அமைச்சு, மாதுருஓயா வலதுகரை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் செயற்றிட்டப் பணிப்பாளருக்கு நேரடியாகக் கையளிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் கிடைக்கச் செய்யலாம். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே அவை திறக்கப்படுமென்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதிகளான இரண்டுக்கு (02) மேற்படாத நபர்கள் இச்சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ளலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை வெலிகந்த, நீர்ப்பாசன அமைச்சு, மாதுருஓயா வலதுகரை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் செயற்றிட்டப் பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 027-3288912.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**மாதுருஓயா வலதுகரை அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**நீர்ப்பாசன அமைச்சு,**
**வெலிகந்த.**
**(தொலைபேசி: 027-2259298)**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz It's what you want
Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377

# கிழக்கு மாகாணத்தின் ஹோக்கி சம்பியனானது விபுலானந்தா மத்தி



**காரைதீவு குறூப் நிருபர்**

கல்வி அமைச்சு நடத்தும் தேசிய பெருவிளையாட்டு போட்டியில் கிழக்கு மாகாண சம்பியனாக காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் ஹொக்கி அணி தெரிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் (05) இடம்பெற்ற மாகாணமட்ட இறுதிப்போட்டியில் அம்பாறை டி எஸ் சேனநாயக்க தேசிய பாடசாலை ஹொக்கி அணியை எதிர்த்து விளையாடிய காரைதீவு விபுலானந்தா அணி 3–2 என்ற கோல் அடிப்படையில் மாகாண சம்பியனாக தெரிவானது.

பாடசாலை அதிபர் மயில்வாகனம் சுந்தரராஜன் வெற்றி பெற்ற வீரர்களையும் பயிற்றுவித்தவர்களையும் பாராட்டினார்.

2023 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண மட்ட பெருவிளையாட்டு போட்டிகளில் ஹொக்கி சுற்றுப் போட்டியின் முதலாவது போட்டியில் ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அணியை 1–0 என வென்ற காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி அணி இரண்டாம் அரை இறுதி போட்டியில் மட்டக்களப்பு மயிலம்பாவெளி வித்யாலயத்தினை 2–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

# சச்சித்ர சேனநாயக்க கைது



இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் சச்சித்ர சேனநாயக்க விளையாட்டுத் துறை அமைச்சின் சிறப்பு விசாரணைப் பிரிவில் சரணடைந்ததை அடுத்து ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டில் நேற்று (06) கைது செய்யப்பட்டுள்ளார். அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

2020 ஆம் ஆண்டு லங்கா பிரீமியர் லீக் தொடரின்போது ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டது தொடர்பிலேயே சேனநாயக்கவுக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. போட்டிகளின் முடிவை மாற்றுவது தொடர்பில் டுபாயில் இருந்து அவர் இரு வீரர்களை தொலைபேசியில் அழைத்ததாகவே கூறப்படுகிறது.

இந்நிலையில் இந்த ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளுக்காக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் கடந்த ஓகஸ்ட் 14 ஆம் திகதி சேனநாயக்கவுக்கு பயணத் தடை ஒன்றை விதித்திருந்தது.

எனினும் தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுக்கும் சேனநாயக்க அவை அடிப்படையற்றவை என்றும் தமது மற்றும் தமது குடும்பத்தின் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படுத்த முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

38 வயதான சச்சித்ர சேனநாயக்க இலங்கை அணிக்காக 2012 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை ஒரு டெஸ்ட், 49 ஒருநாள் மற்றும் 24 டி20 சர்வதேச போட்டிகளில் ஆடியுள்ளார்.

## ஆசிய கிண்ணம்:

# கடைசி சுற்றுப் போட்டிகள் திட்டமிட்டபடி கொழும்பில்



ஆசிய கிண்ண தொடரின் கடைசி ஐந்து போட்டிகளையும் திட்டமிட்டபடி கொழும்பிலேயே நடத்துவதற்கான முடிவுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தயக்கத்துடன் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தப் போட்டிகளை ஹம்பாந்தோட்டைக்கு மாற்றாமல் கொழும்பிலேயே நடத்துவதற்கு ஆசிய கிரிக்கெட் கௌன்சில் எடுத்துள்ள முடிவுக்கு பாகிஸ்தான் அதிருப்தியை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்வுகூறலின்படி அடுத்த பத்து தினங்கள் கொழும்பில் மழை பொழிய வாய்ப்பு இருப்பதாகக் கூறப்பட்ட நிலையிலேயே போட்டிகளை ஹம்பாந்தோட்டைக்கு மாற்ற போட்டியை நடத்தும் நாடான பாகிஸ்தான் திட்டமிட்டது.

எனினும் கடந்த செவ்வாய்க்கிழமை பின்னேரம் ஆசிய கிரிக்கெட் கௌன்சில் உறுப்பு நாடுகளுக்கு அனுப்பிய மின்னஞ்சலில், முன்னர் திட்டமிட்டபடியே போட்டிகள் கொழும்பில் நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் போட்டியை நடத்தும் நாடு என்ற வகையில் பாகிஸ்தானிடம் ஆலோசிக்காது இந்த முடிவு எடுக்கப்பட்டது குறித்து பாக். கிரிக்கெட் சபை அதிருப்தி அடைந்துள்ளது.

இந்த முடிவு எடுக்கப்பட்ட விதம் தொடர்பில் எதிர்ப்பு வெளியிட்டு பாக். கிரிக்கெட் சபை, ஆசிய கிரிக்கெட் கௌன்சில் தலைவர் ஜெய் ஷாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியது. அதே போன்று ஆசிய கிரிக்கெட் கௌன்சிலின் நிறைவேற்றுக் குழு கூட்டத்தை கூட்டும்படி ஆரம்பத்தில் அழைப்பு விடுத்திருந்தது. எனினும் பாகிஸ்தான் இந்த விவகாரத்தில் தீவிர முடிவு எடுப்பதை தவிர்த்துக்கொண்டுள்ளது.

இதன்படி ஆசிய கிண்ணத்தின் எதிர்வரும் செப்டெம்பர் 09, 10, 12, 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் நடைபெறும் சுப்பர் போஃர் போட்டிகள் மற்றும் 17 ஆம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டி அனைத்தும் திட்டமிட்டபடி கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்திலேயே நடைபெறவுள்ளது.

எவ்வாறாயினும், இதுதொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷ்லி டி சில்வா கருத்து தெரிவிக்கையில், 'அதிகமான ரசிகர்கள் கொழும்பில் போட்டிகளைப் பார்ப்பதற்கான ஏற்பாடுகளை ஏற்கனவே செய்துள்ளனர். மேலும், கடந்த சில நாட்களாக கொழும்பில் மழை பெய்யவில்லை. இதன் காரணமாக திட்டமிட்டபடி கொழும்பில் போட்டிகளை நடத்த ஆசிய கிரிக்கெட் கௌன்சில் முடிவெடுத்துள்ளது' என்றார்.

கடந்த 10 ஆண்டுகளில், இலங்கையில் நடைபெற்ற 84 ஒருநாள் போட்டிகளில் 79 போட்டிகள் முழுமையாக நடைபெற்றதாக ஆஷ்லி டி சில்வா தெரிவித்துள்ளார். மேலும், கைவிடப்பட்ட 5 போட்டிகளில், செப்டெம்பர் மாதத்தில் கைவிடப்பட்ட ஒரே போட்டி சனிக்கிழமை நடைபெற்ற போட்டிதான் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# சுப்பர் போஃர் முன்னேறும் 'கணக்கு' தெரியவில்லை

## ஆப்கான் பயிற்சியாளர் ஒப்புதல்



இலங்கை நிர்ணயித்த 292 ஓட்ட வெற்றி இலக்கை 37.1 ஓவர்களில் எட்டாத நிலையிலும் ஆசிய கிண்ண சுப்பர் போஃர் சுற்றுக்கு முன்னேற ஆப்கானிஸ்தானுக்கு தொடர்ந்து வாய்ப்பு இருந்தது பற்றி தெரியாமல் இருந்ததாக அந்த அணியின் பயிற்சியாளர் ஜொனதன் ட்ரோட் தெரிவித்துள்ளார்.

லாகூரில் நேற்றுமுன்தினம் (05) நடைபெற்ற போட்டியில் பதிலெடுத்தாடிய ஆப்கான் அணி 37 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 289 ஓட்டங்களை பெற்றிருந்தது. இதனால் அந்த அணி சுப்பர் போஃருக்கு முன்னேற ஒரு பந்தில் மூன்று ஓட்டங்களை பெற்று வெற்றி பெற வேண்டி இருந்தது.

எனினும் தனஞ்சய டி சில்வா வீசிய அந்தப் பந்துக்கு துடுப்பெடுத்தாடிய முஜிபுர் ரஹ்மான் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

எனினும் ஆப்கானிஸ்தான் 37.2 ஓவரில் 293, 37.3 ஓவரில் 294, 37.5 ஓவரில் 295, 38 ஓவரில் 296, அல்லது 38.1 ஓவரில் 297 ஓட்டங்கள் எடுத்தால் கூட ஆப்கானிஸ்தானின் நெட் ரன் ரேட் அதிகமாகி சுப்பர் 4 சுற்றுக்கு தகுதி பெற்றிருக்கும்.

ஆனால் கடைசி வீரராக துடுப்பெடுத்தாட வந்த பஸால்ஹக் பாரூக் இரண்டு பந்துகளை தடுத்தாடிய நிலையில் 3ஆவது பந்துக்கு ஆட்டமிழந்தார். மறுமுனையில் வேகமாக துடுப்பெடுத்தாடக் கூடிய ரஷீத் கானும் சுப்பர் போஃர் வாய்ப்பை பறிகொடுத்தது போலவே எந்த முயற்சியும் மேற்கொள்ளாமல் இருந்தார்.

'அந்த கணக்கு பற்றி எமக்கு தெரிவிக்கப்படவில்லை. நாம் 37.1 ஓவர்களுக்குள் வெற்றிபெற வேண்டும் என்று மாத்திரமே தெரிவிக்கப்பட்டது. நாம் 295 அல்லது 297 ஓட்டங்களை எத்தனை ஓவர்களில் பெறவேண்டும் என்பது எமக்கு கூறப்படவில்லை' என்று போட்டிக்குப் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ட்ரோட் கூறினார்.

இந்தப் போட்டியில் இரண்டு ஓட்டங்களால் பரபரப்பு தோல்வியை சந்தித்த ஆப்கான் அணி ஆசிய கிண்ண தொடரில் இருந்து வெளியேறியதோடு இலங்கை நூலிழையில் சுப்பர் போஃர் சுற்றுக்கு தகுதி பெற்றது.

முக்கிய தகவல்களுக்கு போட்டி நடுவர்களைச் சார்ந்திருப்பது இயல்பானது என்றபோதும் நெட் ரன் ரேட் என்பது மிகவும் எளிதில் கணக்கிடக்கூடியது. அதை அந்தந்த அணிகளே கணக்கிட்டிருக்க முடியுமே என ஆப்கானிஸ்தான் அணி நிர்வாகம் மீது விமர்சனங்களும் எழுந்துள்ளன.

# இலங்கையின் சுப்பர் போஃர் சுற்றின் போட்டிகள் உறுதி



ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிராக 2 ஓட்டங்களால் த்ரில் வெற்றியீட்டி ஆசிய கிண்ணத் தொடரின் சுப்பர் போஃர் சுற்றுக்கு முன்னேறிய இலங்கை அணியின் போட்டி அட்டவணை உறுதி செய்யப்பட்டுள்ளது.

லாகூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பி குழுவுக்கான கடைசி குழுநிலை போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 291 ஓட்டங்களை பெற்றது.


தொடர்ந்து பதிலெடுத்தாடிய ஆப்கான் அணி சுப்பர் போஃர் சுற்றுக்கு முன்னேற 37.1 ஓவர்களில் வெற்றி இலக்கை எட்ட வேண்டும் என்ற நிலையில் அதிரடியாக ஆடியது. எனினும் அந்த அணி 37.4 ஓவர்களில் 289 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இந்நிலையில் சுப்பர் போஃர் சுற்றுக்கு முன்னேறிய இலங்கை அணி தனது முதல் போட்டியில் வரும் சனிக்கிழமை (09) பங்களாதேஷ் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

தொடர்ந்து செப்டெம்பர் 12 ஆம் திகதி இந்திய அணியையும் செப்டெம்பர் 14 ஆம் திகதி பாகிஸ்தான் அணியையும் சந்திக்கவுள்ளது.

அனைத்துப் போட்டிகளும் கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும்.

# பிரிட்டனின் பயங்கரவாத பட்டியலில் வாக்னர் குழு



ரஷ்யாவின் கூலிப்படையான வாக்னர் குழுவை பயங்கரவாத அமைப்பாக அறிவிக்க பிரிட்டன் நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் அந்தக் குழுவில் அங்கத்துவம் பெறுவது மற்றும் ஆதரவளிப்பது தடை செய்யப்படவுள்ளது.

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள வரைவில், வாக்னரின் சொத்துகள் பயங்கரவாத சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டு பறிமுதல் செய்யப்படவுள்ளது என்று பிரிட்டன் உள்துறை அமைச்சு நேற்று (06) அறிவித்தது.

வாக்னர் அமைப்பு வன்முறை மற்றும் அழிவுகரமான அமைப்பு என்று வர்ணித்த பிரிட்டன் உள்துறை அமைச்சர் சுவெலன் பிரவர்மன், அது வெளிநாடுகளில் விளாடிமிர் புட்டினின் ரஷ்ய இராணுவ கருவியாக செயல்படுகிறது என்றார்.

உக்ரைன், மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவில் வாக்னர் கொள்ளை, துன்புறுத்தல் மற்றும் காட்டுமிராண்டித்தனமான கொலைகளில் ஈடுபட்டு வருவதாக அமைச்சரின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதோடு அது சர்வதேச பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்றும் தெரிவித்தார்.


உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பில் வாக்னர் குழு முக்கிய பங்கு வகித்து வருவதோடு சிரியா மற்றும் லிபியா, மாலி போன்ற நாடுகளில் இராணுவ நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகிறது.

பிரிட்டனில் வாக்னர் கூலிப்படையில் உறுப்பினராக இருப்பது அல்லது ஆதரவளிப்பது சட்டவிரோதமாகும் என்பதோடு மீறுபவர்களுக்கு 14 ஆண்டுகள் வரையில் சிறை தண்டனை அல்லது 5,000 பவுண்டுகள் அபராதம் விதிக்க முடியும்.

# சர்வதேச செய்திகள்

## குறுக்கு வழி அமைக்க

# சீனப் பெருஞ்சுவரை இடித்தவர்கள் கைது



சீனாவின் வடக்கு ஷான்சி பிராந்தியத்தில் உள்ள சீனப் பெருஞ்சுவரில் இடைவெளியை அதிகரிப்பதற்கு அகழ்வு இயந்திரத்தை பயன்படுத்தி அதனை இடித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் ஆகிய இருவர் பெருஞ்சுவரில் சீரமைக்க முடியாத அளவுக்கு சேதப்படுத்தி இருப்பதாக ஷான்சி கலாசார நினைவுச்சின்னங்கள் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த இருவரும் தமது வேலைத் தளத்திற்கு செல்வதற்கான குறுகிய பாதையை அமைக்கும் வகையிலேயே பெருஞ்சுவரை சேதப்படுத்தியுள்ளனர்.

யுனெஸ்கோ உலக மரபுரிமை தலமாக இருக்கும் சீனப் பெருஞ்சுவர் கி.மு 220 தொடக்கம் கி.பி 1600களில் மிங் வம்சம் வரை நிர்மாணிக்கப்பட்டு அல்லது புனரமைக்கப்பட்டு வந்துள்ளது.

இதில் யுயு பகுதியில் அமைந்திருக்கும் மிங் பெருஞ்சுவரின் 32 ஆவது பெருஞ்சுவர் பகுதியிலேயே சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## டிரம்ப் ஆதரவு ஆர்ப்பாட்டம்:

# கிளர்ச்சிக் குழுவின் முன்னாள் தலைவருக்கு 22 ஆண்டு சிறை



அமெரிக்காவில் கபிடோல் கட்டட ஆர்ப்பாட்டத்திற்கு உடந்தையாக இருந்த கிளர்ச்சிக் குழுவின் முன்னாள் தலைவருக்கு 22 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் ஒருவருக்கு விதிக்கப்பட்ட மிகக்கடுமையான தண்டனை இதுவாகும்.

பிரவுட் போய்ஸ் குழுவின் முன்னாள் தலைவர் ஒன்ரிக்கி டாரியோ ஆர்ப்பாட்டத்தில் நேரடியாகக் கலந்துகொள்ளவில்லை. அவர் தமது கிளர்ச்சிக் குழுவை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும்படி கூறியதாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி டொனல்ட் டிரம்பின் ஆதரவாளர்கள் 2021ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி கபிடோல் கட்டடத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

5 பேர் உயிரிழந்ததோடு 140 பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்தனர்.

2020ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தமக்கே வெற்றி கிடைத்தது என்று டிரம்ப் கூறியிருந்தார். தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்கச் சதி செய்ததாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. வழக்கு அடுத்த ஆண்டு மார்ச்சில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 7ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.